24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 338 ஐப்பசி 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 30 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## மைத்திரிக்கு எதிராக கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம்

அணிதிரள அறைகூவல் விடுக்கிறது ஐ.தே.க.

25

### வடக்கு மக்களின் பிரச்சினைகள் ஐ.தே.கவினால்தான் தீரவில்லை

மைத்திரி குற்றச்சாட்டு 25

### மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

மைத்திரி அறிவிப்பு 25

திஸ்ஸமஹாராம, சந்தகிரிகொட வயல் வெளியில் நேற்று இடம்பெற்ற தேசிய ஏர்பூட்டு விழாவில் கலந்துகொண்ட மைத்திரி.



### தலையை அடித்து பிளந்து பயங்கரம்

குடும்பத்தலைவர் பரிதாபச் சாவு

வடமராட்சி, ஒக்.30
வடமராட்சி கிழக்குப் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் தூக்கத்தில் வைத்து கொட்டனால் கொடூரமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரது மனைவி மீதும் கொலையாளி கடும் தாக்குதலை நடத்தியுள்ளான். படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை சம்பவம் நடந்த பகுதியில் மாமனார் 24

### பங்குச் சந்தை திடீர் வளர்ச்சி

கொழும்பு, ஒக். 30
இலங்கையின் பங்குச் சந்தை திடீர் ஆட்சி மாற்றத்தின் பின்னர் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. இருப்பினும் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் சரிந்தது.
நேற்றுப் பங்குச்சந்தை முடிவில் அனைத்துப் பங்கு விலைச் 23

கொதிநிலைக்கு வருகிறது கொழும்பு அரசியல்

# நாடாளுமன்றத்தை உடனடியாக மைத்திரியை மீறி கூட்ட முயற்சி

## கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

கொழும்பு, ஒக்ரோபர் 30
கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை விரைவில் தீர்த்து வைக்கும் வகையில் நாடாளுமன்றத்தை விரைந்து கூட்டுவதற்கான முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தை எதிர்வரும் 16ஆம் திகதி வரையும் ஒத்தி வைத்தபோதும் சபாநாயகர் தனது 25

### சம்பந்தன் - மகிந்த இன்று நேரில் சந்திப்பு

25

### மகிந்த பொறுப்பேற்பு



25

### அந்தர் பல்டி அடித்த சேனநாயக்கா, சுரேஸ்

விஜயதாசவும் கட்சி தாவினார் 24

### இலங்கை நிலவரம் ஐ.நாவும் அவதானம்

25

### புதிய அமைச்சரவையில் 12பேர் நேற்றுப் பதவியேற்பு

டக்ளஸுக்கும் அமைச்சுப் பதவி 21

### அரசியல் கைதி ஒருவரை மாத்திரம் சந்தித்த நாமல்

23

### இலங்கை அரசியல் நிலைமை கவலைப்படுகிறது கனடா

25

### சர்வாதிகார ஆட்சியை அனுமதிக்க முடியாது

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ரணில் தெரிவிப்பு 24

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில்

### கூட்டமைப்பின் முடிவுகளை எம்.பிக்கள் எடுக்கக்கூடாது

தமிழ் அரசுக் கட்சியிடம் ரெலோ வலியுறுத்து 23

### நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்

அதிகாரத்தோரணையில் அமெரிக்கா கருவுக்கும், மைத்திரிக்கும் கடிதம் 25

### மகிந்தவின் முதல் உத்தரவு அர்ஜுன ரணதுங்க கைது

பின்னர் பிணையில் விடுவிப்பு 25

### அமித் விடுதலை

25

### அவசரமாக இன்று கூடுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

22

# நாடாளுமன்றத்தைக் கூட்ட சபாநாயகருக்கு அதிகாரம்

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 30

நாடாளுமன்றத்தைக்கூட்டுவதற்குஅரசமைப்புக்குஅமைவாகசபாநாயகருக்கு முழு அதிகாரமும் உள்ளது. சபாநாயகர் நாளையே நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும். இவ்வாறுதலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரிமாளிகையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களைநேற்றுச்சந்தித் துக் கலந்துரையாடியன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கை அதிகார வெற்றிடத்தில் சிக்குண்டுள்ளது. தற்போதைய நிலையில் நாட்டில் வெற்றிட மொன்று உள்ளது. நாட்டிற்கு பொறுப்பாக யாருமே இப்போது இல்லை. இதன் காரணமாகவே நாங்கள் நாடாளுமன்றத்தில் யார் பெரும்பான்மையைக் கொண்டி ருக்கின்றார்கள்என்பதைதீர்மானி ப்பதற்காகஉடனடியாகநாடாளும ன்றத்தைக் கூட்டுமாறு கோரு கின்றோம். நான்இன்னமும்நாடா ளுமன்றில்பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தலைமை அமைச்சராகஉள்ளேன். 19ஆவது திருத்தத்துக்கு அமைவாக அரசத லைவரின் அதிகாரங்கள் குறைக் கப்பட்டுள்ளன. அவரால்தலைமை அமைச்சரைப் பதவிநீக்க முடி யாது. சபாநாயகரால்நாடாளுமன் றத்தைக் கூட்டமுடியும்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த அரசி யல் பிரச்சினையை, நாடாளுமன் றத்தின்ஊடாகவேதீர்த்துக்கொள்ள முடியும். உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தைக் கோரினா லும், நாடாளுமன்றமே இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியுமென் றும்.

**வேறுபாடு**

நான்நகரமயமாக்கப்பட்டகொழும் பைச் சேர்ந்தவன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கிராமிய மயப்பட்ட பொலன்னறுவையைச் சேர்ந்தவர். இதுவே இருவரி டையே காணப்பட்ட கலாசார மாற் றம். இதனைத் தவிர எனக்குத் தெரிந்த வேறு ஏதும் வேறுபாடுகள் கிடையாது என்றார்.

**சீனாவின் உத்தரவாதம்**

ஐதேக நாடாளுமன்ற உறுப்பினர் களை விலைக்கு வாங்க மகிந்த் ராஜபக்சவுக்குசீனாநிதிஅளிக்கிறது என்று ஐதேகவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம்சாட்டியிருந்தார். இதகுறித்து செய்தியாளர்சந்திப்பில்ரணில்விக் கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பிய போது, இந்தக் குற்றச்சாட்டு தொடர் பாக பதிலளிக்க மறுத்துள்ளார். சீனத் தூதுவர் தன்னைச் சந்தித்த போது, சீனா இதில் தலையீடு செய் யாது என்று உறுதியளித்தார் என் றும் அவர் கூறினார். (5)

# வெடிச்சத்தங்களால் கிலிகொண்டமக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு இடம்பெற்ற வெடிச் சத்தத்தால் நகரப்பகுதிமக்கள்மத்தியில்பரபரப்பும்பயமும்ஏற்பட்டது. போர்க் காலத்தில்கேட்கும் குண்டுச்சத்தங்களைப் போன்று இவை கேட் டதால், மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் போரும் தொடங்கி விட்டதோ என்று மக்கள் கதி கலங்கிப் போயினர்.

ஆனால், ஈ.பி.டி.பி. கட்சியின்செயலாளர்நாயகம்டக்ளஸ்தேவா னந்தாவுக்கு அமைச்சர் பதவி கிடைத்தை அடுத்து அவரது ஆதர வாளர்கள் யாழ்ப்பாணம் சிறிதர் தியேட்டரில் உள்ள கட்சி அலுவ லகத்திற்குமுன்னால்வெடிகள்கொழுத்தியதால்ஏற்பட்டதேஇந்தச் சத்தங்கள் என்று பின்னர் தெரியவந்தது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்ச ராகப்பதவியேற்றதன்பின்னர்நேற்றையதினம் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. புதிய அமைச்சரவையில் ஈ.பி.டி.பி கட் சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமாகிய டக்ளஸ்தேவானந்தாவுக்கு மறுவாழ்வு, மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய விவகார அமைச்சு வழங்கப்பட் டது. (உ-21,26)



# கஞ்சா செடிகளுடன் இளைஞன் கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஒக். 30

30 கஞ்சாச்செடிகளுடன் இருபது வயதுஇளைஞன்ஒருவர்நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவு னியா, குடாக்கச்சக்கொடிப்பகுதியி லேயே குறித்த கைதுச் சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசி யத்தகவலின் அடிப்படையில்வவு னியா பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிமகிந்தவில்லுஆராச்சியின் வழிநடத்தலில் மாமடு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜகுரு தலைமையிலான குழுவினர் கைது நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர். வீட்டுத்தோட்டத் தில் வளர்க்கப்பட்ட 30 கஞ்சா செடி கள்மீட்கப்பட்டுள்ளன. இதுதொடர் பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணகளின்பின்னர்நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என் றும் பொலிஸார் தெரிவித்தனர். (21,110)

# மகிந்த உண்மையான வீரன் என்றால் நாடாளுமன்றத்தை இன்று கூட்டட்டும்

## சம்பிக்க சவால்

கொழும்பு, ஒக். 30


மகிந்த மாத்தையா நீங்கள் உண் மையான வீரன் என்றால் நாளை (இன்று) காலை 8 மணிக்குநாடாளு மன்றத்தைக் கூட்டி அங்கு வாருங் கள். யார் பலமானவர் என்பதைக் காட்டுகின்றோம். இவ்வாறுசம்பிக்க ரணவக்க சவால் விடுத்துள்ளார்.

அலரிமாளிகையில்நேற்று ஊடகங் களுக்கு கருத்துத் தெரிவிக்கையி லேயேமேற்கண்டவாறு கூறினார். மகிந்தவீரன்என்றால்நாடாளுமன் றில் நேருக்கு நேர் ஐ.தே.கவைச் சந்திக்கவேண்டும். நாடாளுமன்றத் தைக் கூட்டி அவர் பெரும்பான் மையை நிரூபிக்கும் வரையில், ரணில் விக்கிரமசிங்கவே தலை மைஅமைச்சராகத்தொடர்வார்என் றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஹரின் பெர்னாண்டோ, தண்ணீர்கொண்டு போகாமல் மலசல கூடத்துக்குப் போன கதையாகத்தான் மகிந்த தலைமை அமைச்சராகிய கதை இருக்கப்போகின்றது. நாடாளுமன் றப் பலம் என்கின்ற தண்ணீர் அவரி டம் இல்லை, அசிங்கப்படப் போகின் றார் என்றார்.

**மைத்திரி மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவோம்**

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அகிலவிராஜ், மைத்திரி மகிந்த கூட்டிணைந்து அமைத்துவரும் சட்டவிரோத ஆட்சி விரைவில் வீடு திரும்ப வேண்டி நிலை ஏற்படும். அரசியல் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள நிலையில் சட் டத்தைகையில்எடுத்துவரும்சர்வா திகாரிகளாகசெயற்படுவீர்களானால் குறுகியகாலத்தில்ஐக்கியதேசியகட்சி அமைக்கவிருக்கும் எவருடைய தலையீடுகளற்றஉறுதியானஜனநா யகஆட்சிக்குபதிலளிக்கவும்இழப்பீட் டினை வழங்கவும் தயாராக இருக்க வேண்டும்என்றார். (5,61)



நெல்லியடிமுள்ளிப்பகுதியில்உள்ளகாட்டுப்பகுதியில்86போத் தல்கசிப்புநேற்று இரவுநெல்லியடிப்பொலிஸாரால்கைப்பற்றப் பட்டது. பொலிஸார் வருவதை எப்படியோ அறிந்து கொண்ட நபர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (21,26)

# கேலிக்கூத்தாக்கி விட்டார் மைத்திரிபால சிறிசேன

## அனுர குமார சாடல்

கொழும்பு, ஒக். 30

அரச தலைவரின் நடவடிக்கை பன் னாட்டு அரசியலில் இலங்கையைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது என்று மக் கள்விடுதலைமுன்னணியின்தலை வர்அனுர குமாரதிசநாயக்கதெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தலைமைஅமைச்சர்ரணில்விக்ரம சிங்கவை பதவி நீக்கம் செய்தமை எதேச்சையாக இடம்பெறவில்லை. அதுஒருஅரசியல்சூழ்ச்சி. ஆட்சிமாற் றத்திற்கான காரணம் என்ன என்ப தற்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனநேற்று(நேற்றுமுன்தினம்) நிகழ்த்திய உரையில், எந்தப் புதிய விடயங்களும் காணப்படவில்லை. மாறாகபலகேள்விகளையேஎழுப்பி யுள்ளது என்றார். (5)

# 'ஐயோ சிறிசேன' மங்கள கிண்டல்

கொழும்பு, ஒக். 30

நிதியமைச்சராக இருந்த மங்கள சமரவீரவின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் கீச் சகத்தில் பதிவிட்டுள்ளார். அதில், 'அரச தலைவர் மைத்திரி பால மீண்டும் தாக்குதல் தொடுத்துள்ளார். எனது பாதுகாப் பும் விலக்கப்பட்டு ள்ளது. ஐயோ சிறிசேன..' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மங்கள சமரவீர, அரச தலைவர் மைத்திரிபால சிறிசே னவை 'பறபள்ளா' என்று பேசியிருந்தார். அத்துடன் தொடர்ச்சியாக அரச தலைவரை விமர்சித்து வந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறப்புஅதிரடிப்படையினரின்பாதுகாப்புசில நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு வழங் கப்பட்டு வந்த நிலையில் அந்தப் பாதுகாப்பையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (5)

## மகிந்த - ரணில் நேற்றுப் பேச்சு

கொழும்பு, ஒக். 30
புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ச, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்றுக் காலை அலைபேசி ஊடாகப் பேச்சு நடத்தியுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு நேற்றுமுன்தினம் குறைக்கப்பட்டது. இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை அலைபேசியில் தொடர்பு கொண்ட மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை உறுதி செய்வதாக உறுதியளித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அலரி மாளிகையில் 800 பொலிஸார் வரையில் பாதுகாப்பு வழங்கி வந்தனர். நேற்று முன்தினம் இரவு முதல் 10பேரே பாதுகாப்புக்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (5)



## அரச ஊடகப் பேச்சாளர்கள் நியமனம்

கொழும்பு, ஒக். 30
அரசின் ஊடகப்பேச்சாளராக நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்த சமரசிங்க மற்றும் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களத் தின் பதில் பணிப்பாளர் நாயகம் நாலக்க கலுவெள நேற்றுத் தெரிவித்துள்ளார். (5)

## சுமந்திரன் அரசியலிலிருந்து ஒதுங்க இதுவே தருணம்

### கூறுகிறார் ஆனந்தன் எம்.பி.

கொழும்பு, ஒக். 30
மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக வருவதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரே காரணம். தீர்வு வராவிடின் அரசியலிருந்து ஒதுங்குவதாக சுமந்திரன் கூறியிருந்தார். எனவே அதனை நிறைவேற்ற இதுவே தருணம். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லாட்சி அரசில் புதிய அரசமைப்பை உருவாக்குவதாகக் கூறிய சுமந்திரன், அரசு பிளவுபட்டுள்ள நிலையில் அவருடைய வாக்குறுதியை நிறைவேற்றி கொள்ளும் முகமாக அரசியலில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

எங்களுடைய மையச் செயற்குழு கூடி தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்பாக ஆராயவுள்ளோம். இரண்டு பிரதான கட்சிகளும், தமிழ் மக்களுக்கு கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும், நிறைவேற்றாத ஒரு காலகட்டத்திலேயே இருக்கிறோம். இவர்களுக்கு நிபந்தனை விதித்தோ, விதிக்காமலோ எதையும் செய்யப்போவதில்லை.

விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. நாம் ஒரு தேர்தலை நோக்கிச் செல்ல இருக்கும் இவர்களிடம் இனி எதையும் எதிர்பார்க்க முடியாது. கடந்த மூன்று ஆண்டுகள் காலத்திலே அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதை, பெற்றுக் கொள்ள முடியாததற்கு காரணம் எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனும் அவர் சார்ந்த தமிழ் அரசு கட்சியுமே. எதிர்க்கட்சி தலைவர் பதவியை தக்கவைப்பதற்காகதான அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வந்துள்ளார். ஆனால் இன்று அவருடைய எதிர்க்கட்சி பதவியும் பறிபோயிருக்கிறது.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி விட்டோம். இதற்கான காரணம் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையும், தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படாமையாலும், தங்களுடைய கட்சி நலன் சார்ந்தே சென்றமையாலும் இது மக்களுக்கு செய்யும் பெரும் துரோகம் என்பதாலேயே நாங்கள் வெளியேறியிருக்கிறோம்.

2017ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாங்கள் தீர்க்க தரிசனமாக ஒரு விடயத்தை தெரிவித்திருந்தோம். காலம் கடந்தால் அரசிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள முடியாது - என்றார். (5,110)

# அரசியல் நெருக்கடி தீவிரமடையலாம்!

### மகாநாயக்க பீடங்கள் கருவிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 30
யார் தலைமை அமைச்சர் என்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் தலைமை அமைச்சர் நியமனம் அரசமைப்பின் பிரகாரமும் சட்ட பூர்வமானதாக அமைய வேண்டும் என்று தெரிவித்துள்ள அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்கள், தன் பக்க நியாயங்களை மாத்திரம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மேலும் உக்கிரமடையலாம் எனவும் அறிவித்துள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களை நேற்றுச் சந்தித்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். இதன் பின்னரே இரு பீடங்களும் மேற்கண்டவாறு சபாநாயகருக்கு அறிவித்துள்ளன.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை அமைச்சரும் ஏற்கனவே பதவியில் உள்ள தலைமை அமைச்சரும் தன் பக்க நியாயங்களை கூறி வருகின்றனர். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. விரைவாக நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறே வலியுறுத்தியுள்ளோம். (5)

## பாவ விமோசனம் தேடியா?



அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் மகிந்த இருவரும் திஸ்ஸமஹாராம விகாரையில்சமயகிரியைகளில் ஈடுபட்டனர். தேசிய ஏர்பூட்டு விழா திஸ்ஸமஹாராம சந்தகிரி கொட வயல்வெளியில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு முன்னர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் மகிந்தவும் திஸ்ஸமஹாராம விகாரைக்குச் சென்று சமய கிரியைக ளில் ஈடுபட்டனர். (5)

## நாடாளுமன்றம் கூடும் வரையில் பாதுகாப்பைக்குறைக்கவேண்டாம்

### ரணிலின் பணிமனையால் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 30
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு, ரணிலின் பணிமனையினால் நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைவாக, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, அலரிமாளிகையின் பொறுப்பு பொலிஸ் அதிகாரிக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியிருந்தார். அதில், அலரிமாளிகையின் பாதுகாப்புக்கு 10 பொலிஸாரை மாத்திரம் அனுமதித்திருப்பதாகவும் ஏனையோரை திருப்பி அழைப்பதாகவும் இதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் பதில் கடிதம் தலைமை அமைச்சர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நிரூபிக்கப்படும் வரையில் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே தொடர்கின்றார் என்றும், அதுவரையில் அவரின் பாதுகாப்பைக் குறைக்க வேண்டாம் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## மைத்திரியின் பதவி ஆசையே அரசியல் நெருக்கடிக்கு காரணம்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனதொடர்ந்தும்பதவியில்இருக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டமையினால்தான் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கூட்டு அரசைப் பதவிக்கு கொண்டு வந்தவர் சிறுபான்மை மக்கள். முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன், மைத்திரி இருந்து விட்டு மறுநாள் பொதுவேட்பாளராக தன்னை அறிமுகப்படுத்தினார். தான் போட்டியிடப் போவது மகிந்தவுக்கு தெரிந்திருந்தால் என்னை ஆறடி மண்ணுக்குள் புதைத்திருப்பார்கள் என்று மேடைக்கு மேடை மைத்திரி கூறினார். ஆனால் இப்போது மகிந்தவையே ஆட்சிப் பீடம் ஏற்றியுள்ளார். மைத்திரி, மகிந்தவுக்கு உண்மையாக இருக்கவில்லை. ரணிலுக்கும் உண்மையாக இருக்கவில்லை. தனது பதவி ஆசையால் நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார்- என்றார். (5,8)

## அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் ஐ.நா. மற்றும் அமெரிக்கா ஆராய்வு

### சபாநாயகரை நேரில் சந்தித்தனர்



கொழும்பு, ஒக். 30
இலங்கைக்கான அமெரிக்கா மற்றும் ஐ.நாவின் தூதுவர்கள் சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சந்தித்து அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பதில் அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஹில்டனும் ஐ.நா. தூதரக உயர் அதிகாரி ஒருவரும் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பின் போது, அமெரிக்க அதிகாரிகள், தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து கவலை தெரிவித்தனர் என்றும், விரைவாக பிரச்சினைகள் தீர்க்கப்பட-வேண்டும் என்று வலியுறுத்தினர் என்றும் சபாநாயகரின் செயலகம் தெரிவித்துள்ளது. ஐ.நா. உயர் அதிகாரியும் அதே உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். (5)

# அரசியல் நெருக்கடிக்கு சீனாவே காரணம்

## ஐ.தே.க. பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

அரசிலிருந்து தாவுபவர்களுக்கு நிதியை வழங்கி, தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு சீன அரசே காரணமாக இருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது, புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு நிதியைச் செலவிடுவதை சீனா கைவிட வேண்டும். ரணில் விக்ரமசிங்கவை நீக்கும், கூட்டுஅரசைக்கவிழ்க்கும்திட்டமானது ஒரு பன்னாட்டுச் சதிவேலை. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கு மகிந்த ராஜபக்சவுக்கு நிதியளிக்க வேண்டாம் என்று சீன அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பூகோள அதிகார சக்தி, நாடுகளை விலைக்கு வாங்க முனைகிறது. இது உண்மை. அதனை அவர்கள் பலநாடுகளில் செய்திருக்கிறார்கள். கானா, துனீசியா, அங்கேனாலா, பபுவா நியூகினியா, மியான்மார்போன்றநாடுகளில் இதனைச்செய்திருக்கிறார்கள், என்றும் அவர் தெரிவித்தார். (5)

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜே.வி.பியும் நேற்றுக் கோரிக்கை

கொழும்பு, ஒக். 30

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்குவிரைவில்நாடாளுமன்றத்தை கூட்டுமாறு மக்கள் விடுதலை முன்னணியும்வலியுறுத்தியுள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கையெழுத்திட்டு நேற்றுத் திங்கட்கிழமை கடிதத்தை அனுப்பியுள்ளனர். நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், சபாநாயகருக்கு நேற்று முன்தினம் இரவு கடிதம் அனுப்பியிருந்தநிலையில், மக்கள் விடுதலை முன்னணியும் கடிதத்தை நேற்று அனுப்பியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் கடிதத்தில், இரு கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில்இடம்பெற்றதுப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர்உயிரிழந்தமைஇவ்வாறானநிலையின்பின்னணியிலேயே இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையினால், வெளிநாட்டுச் சக்திகளும்எமதுநாட்டுவிவகாரத்தில் தலையிட நேரிடும். நாட்டின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகத்தின்வெளிப்பாடாக காணப்படும் நாடாளுமன்றத்தைக்கூட்டிநாட்டின் சிக்கல் நிலைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதுமிகவும் அவசியமென அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (5)

## யாரென்று தெரிகிறதா?

கொழும்பு, ஒக். 30

அமைச்சர் ரணதுங்க பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றார். அவருக்கு எதிராக இடை நிறுத்தப்பட்ட சங்கத் தலைவர் ஒருவரினால் போராட்டம்நடத்தப்பட்டது. அங்கிருந்துரணதுங்கவை பாதுகாப்பாகவெளியேற்றுவதற்குசிறப்புஅதிரடிப்படையினர் பெரும் பாடுபட்டனர். சிறப்பு அதிரடிப் படையினருக்குரிய கவசங்கள் வழங்கி ரணதுங்கவை வெளியேற்றினர். (5)



நன்றி:
அவந்த ஆட்டிகல

## இராணுவத்தினரை பயன்படுத்தோம்

### நாமல் எம்.பி. தெரிவிப்பு

ரணில்விக்கிரமசிங்கவைஅலரிமாளிகையிலிருந்து வெளியேற்ற இராணுவத்தினரைப் பயன்படுத்தப் போவதில்லையென, நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையிலிருந்து வெளியேறுவதற்கான கால அவ காசம் வழங்குவதற்கு தயாராக உள்ளோம்.

நாம் எவ்விதத்திலும் பாதுகாப்புப் பிரிவைப் பயன்படுத்தி ரணிலை அலரிமாளிகையில் இருந்து வெளியேற்ற மாட்டோம். அவர்தற்போதுமுன்னாள் தலைமைஅமைச்சர்என்பதால், அவர் அங்கிருந்து வெளியேற கால அவகாசம் வழங்கப்படும் -என்றார். (5)



## எனது ஆதரவு ரணிலுக்குத்தான்

### மகிந்தவைச் சந்தித்த சுரேஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30


புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்தராஜபக்சவை நட்புறவின் அடிப்படையிலேயே சந்தித்தேன். எனது ஆதரவு எப்போதும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான். இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை அலரிமாளிகையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பெருந்தோட்ட மக்களின் 1000 ரூபா அடிப்படைச் சம்பளம் குறித்து கவனம் செலுத்துமாறு மகிந்தவுக்குவலியுறுத்தியுள்ளேன். ஆனால் ஊடகங்கள் அதனை திரிபுடுத்திவிட்டன.

மகிந்த ராஜபக்ச ஆட்சி காலத்தில் சுகாதார போசாக்குத்துறை அமைச்சராகப் பதவி வகித்தேன். மலையக மக்களுக்கு வேண்டிய பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்தேன்.

அதனடிப்படையில்புதியதலைமைஅமைச்சராக மகிந்த தெரிவு செய்யப்பட்டமைக்கு, அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தேன். ஆனால் ஊடகங்கள் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்தாக கூறியுள்ளன. மகிந்தவை சந்திப்பது அவரது கட்சியில் இணைவதற்காக மாத்திரம்தான்என்றதவறானஎண்ணத்தை மாற்றிகொள்ள வேண்டும் - என்றார். (5)



## சம்பந்தனுக்கு சாணக்கியமில்லை

### இப்படிச் சொல்கிறார் கருணா

கொழும்பு, ஒக். 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சாணக்கியமான அரசியல்வாதி எனப் பலராலும் கூறப்பட்டாலும் கடந்த அரச தலைவர் தேர்தலில் மேற்கொண்ட நடவடிக்கை போன்று முட்டாள்தனமான நடவடிக்கையை எவரும்முன்னெடுக்கமாட்டார்கள். இவ்வாறு கருணா அம்மான் என்று அழைக்கப்படும்விநாயகமூர்த்திமுரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கூட்டமைப்பினர்உண்மையில்மக்களுக்காகச்செயற்படுபவர்களாகஇருந்தால்அவர்கள் தமது பதவிகளையும் சலுகைகளையும் மக்களுக்காகப்பயன்படுத்தியிருக்கவேண்டும். அதைவிடுத்து தமது சுகபோக வாழ்க்கைக்காக அரசியல் சலுகைகளை அனுபவித்த கூட்டமைப்பை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை முன்னேற்றுவதற்குப் பல வாய்ப்புகள் இருந்தும் அவற்றையெல்லாம் நழுவ விட்டு மகிந்த குடும்பத்தைப் பழிவாங்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார். இதற்கு கூட்டமைப்பினரும் உடந்தையாக இருந்தனர். இவர்களது ஆட்சியில் தமிழ் மக்கள் பெற்றுக்கொண்ட ஒருவிடயத்தையாவது இவர்களால் பெருமையாகக் கூறமுடியுமா?

வட மாகாணசபையைக் கூட இவர்களால் ஒற்றுமையுடன் திறமையாக நடத்த முடியவில்லை. இவர்களது ஆட்சியில் மத்திய வங்கிக்கொள்ளை, விலைவாசிஉயர்வுபோன்ற பல விடயங்கள் நாட்டைப் பாதாளத்துக்குக் கொண்டுசென்றுள்ளன.

தற்போது நாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் முன்னாள் அரச தலைவர் மகிந்தவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் -என்றார். (5)

# அரச பணியாளர்கள் பொறுப்புடன் கடமைகளை நிறைவேற்றவேண்டும்

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் மேம்பாட்டுக்கான புதிய நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சந்தப்பத்தில் அமைச்சு திணைக் களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களிலும் பணியாளர் சபைக்கு சமமாகவும் நல்லுறவுடனும் தமது பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் அரச பணியாளர்கள் என்ற ரீதியில் நாட்டின் அபிவிருத்திக்காக தமது பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏதேனும் வழிகளில் ஒழுக்க எதிர்ப்பு செயற்பாடுகள் சீர்குலைவு நடவடிக்கையில் ஈடுபடும் எத்தகைய நபர்களுக்கு எதிராகவும் தராதரம் பாராது சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, அரச தகவல் திணைக்களமே அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நிறுவனம் என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட நாலக்க கலுவெள தெரிவித்தார்.

அரச தலைவர் ஊடக பிரிவு உள்ளிட்டவை எத்தகைய அரச தகவல்களை வெளியிட்டாலும் அரசின் உத்தியோக பூர்வ தகவல்களுக்கு அரச தகவல் திணைக்களம் பொறுப்பானதாகும். நாட்டு மக்களுக்கு அரசின் நிலைப்பாடு உள்ளிட்ட விடயங்களை உரிய முறையில் பொது மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு திணைக்களத்தை சார்ந்ததாகும் - என்றார். (5)





### தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக
#### மாணவர்கள் கவனவீர்ப்பு

கொழும்பு,ஒக்.30

'ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் தோட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக பத்தனை சிறிபாத கல்வியற் கல்லூரியில் கல்வி பயிலும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளினால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. ஹட்டன் நுவரெலியா முதன்மை வீதியில் ஆரம்பமான இந்த போராட்டத்தில், சுமார் 500ற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். மாணவர்கள் தாம் இப்போராட்டத்தை முன்னெடுத்தமைக்கான காரணம் தொடர்பில் தெரிவிக்கையில்,

எமது தாய், தந்தையர்கள் தோட்டத்தில் பணிபுரிந்து அவர்கள் பெறும் சம்பளத்தின் ஊடாகவே மேல் படிப்பினை நாம் கற்று வருகின்றோம். இந்த நிலையில் எமது தாய், தந்தையினர் சம்பள உயுர்வாக ஆயிரம் ரூபாவை கோரி போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர். இவர்களின் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும், எங்கள் கல்வியில் நாங்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகவும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இந்த கவனவீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தோம் எனத் தெரிவித்தனர்.

### முகப்புத்தக களியாட்ட நிகழ்வு பெண் உட்பட 58 பேர் கைது

கொழும்பு,ஒக்.30

முகப்புத்தகக் களியாட்ட நிகழ்வொன்றில் பெண் ஒருவர் உட்பட 58 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஹப்புதளை, ஹெரகல வீதியின் விகாரகல பகுதியில் வாடகை வீடு ஒன்றில் இடம்பெற்ற முகப்புத்தக களியாட்ட நிகழ்வொன்றின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து ஹெரோயின், கஞ்சா, போதை மாத்திரை, மதுபானம் மற்றும் பல்வேறு வகையான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பதுளை, இரத்தினபுரி, பஸரை மற்றும் நீர் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஹப்புதளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மகிந்தானந்தாவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.30

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால்' தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்தி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது. இருப்பினும் நீதிபதி நேற்று விடுமுறை என்பதால், இந்த வழக்கை நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.ஏ.ஆர் ஹெய்யன்துடுவ உத்தரவிட்டுள்ளார்.

மகிந்தானந்த அளுத்கமகே அமைச்சராக இருந்த காலத்தில் சட்டவிரோதமாக பெறப்பட்ட 274 இலட்சம் ரூபா பணத்தைப் பயன்படுத்தி பொரள்ளை கிங்சி வீதியில் வீடொன்றைக் கொள்வனவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## கைக்குண்டுடன் இருவர் கைது

கொழும்பு,ஒக்.30

வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டு ஒன்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இங்கிரிய நகரில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உந்துருளியை கொள்ளையிட்ட இருவர் பாரவூர்தியில் பயணிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

பாரவூர்த்தியை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, அதில் இருந்த ஒருவர் தப்பிச் சென்ற நிலையில், ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அகலவத்தை மற்றும் பத்பேரிய பகுதிகளை சேர்ந்த 28 மற்றும் 36 வயதான சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வாகன விபத்தில் இருவர் சாவு

கொழும்பு,ஒக்.30

கொழும்பு காலி முதன்மை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எகொட உயனவில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த உந்துருளி, வீதி ஊடாக பயணித்த பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானது. சம்பவத்தில் படுகாயமடைந்த பாதசாரி மற்றும் உந்துருளி சாரதியும் பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சைப் பயனின்றி இருவரும் உயிரிழந்தனர்.

48 வயதான பாதசாரியும், உந்துருளி சாரதியான 21 வயது இளைஞருமே விபத்தில் உயிரிழந்தனர்.

### கடமையிலிருந்த பொலிஸார் மீது உந்துருளி மோதி விபத்து

கொழும்பு,ஒக்.30

பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸார் மீது உந்துருளி மோதியதில் பொலிஸார் உட்பட மூவர் காயமடைந்தனர். இந்தச்சம்பவம் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சொறிக்கல் முனை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது.

கடமையில் இருந்த பொலிஸார் மீது வீரச்சோலை பகுதியிலிருந்து தலைக்கவசம் இன்றி பல்சர் ரக உந்துருளியில் பயணித்த இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்ட வேளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் மீது நேருக்கு நேர் வேண்டுமென்றே உந்துருளியை செலுத்தியதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் இளைஞர்கள் இருவரையும் கைது செய்தபோது மதுபோதையில் இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் உந்துருளியில் பயணித்த கிருஷ்ணகாமினி மனோஜ் ,பிரான்ஸிஸ் நிஷாந்தன் உட்பட, சம்பவத்தின் போது படுகாயமடைந்த சவளக்கடை பொலிஸாரும் கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# காணாமல் ஆக்கப்பட்டோரினது உறவுகளுடன் யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் சந்திப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை ஒப்படைக்குமாறும், அவர்களின் நிலை தொடர்பில் வெளிப்படுத்துமாறும் கோரி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை போராட்டத்தின் 601ஆவது நாளான நேற்றுமுன்தினம் யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் சந்தித்தது.**

யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழக இயக்குநர் அருட்பணி ஜே. மவுலிஸ் அடிகள், பருத்தித்துறை மறைமாவட்ட முதல்வரும் பொதுநிலையினர் கழக இணைப்பாளருமாகிய அருட்பணி ஜோர்ஜ் அடிகள், அளம்பில் பங்குத்தந்தை அருட்பணி வசந்தன் அடிகள் ஆகியோருடன் யாழ். மறைமாவட்டப் பொது நிலையினர் கழக உறுப்பினர்களும் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

"600 நாள்களைக் கடந்தும் எமது பிள்ளைகள், உறவுகளைக் கண்டடைய வேண்டுமென்ற இலக்குடன் தொடர்ந்து போராடி வருகின்றோம். பொதுஅமைப்புக்கள், சமய அமைப்புக்கள் எம்மில் காட்டும் அக்கறையையிட்டு ஆறுதல் அடைகின்றோம். எனினும் அரசியல்கட்சிகள் சமய, பொதுஅமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து எமக்குரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (ம-135)





யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழகமும் முல்லைத்தீவு மறைக்கோட்ட பொது நிலையினர் கழகமும் இணைந்து நடத்திய ஒன்றுகூடல் நிகழ்வு முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பொது நிலையினர் கழகத்தின் யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி ஜே. மவுலிஸ் அடிகள், மற்றும் அருட்தந்தையர்கள் பொதுநிலையினர் கழக மறைக்கோட்டத் தலைவர்கள் ஆகியோர் நிகழ்வின் ஒருபகுதியாக மரக்கன்றுகளை நட்டுவைத்தனர். (ம-135)

## மூத்தவிநாயகர் சனசமூக நிலைய சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள்

கொடிகாமம், ஒக். 30

மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தின் சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் லயன்ஸ் கழக அனுசரணையுடன் மூத்தவிநாயகர் சனசமூக நிலைய ஏற்பாட்டில் சனசமூக நிலையத் தலைவர் நவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக லயன்ஸ் கழகத் தலைவர் அருள்நேசன், லயன்ஸ் கழகச் செயலர் உலகநாதன், மாநகரசபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-159)





நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் உதவும் கரங்கள் அமைப்பால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவனொருவனுக்கு துவிச்சக்கரவண்டியொன்று அண்மையில் வழங்கப்பட்டது. (ம)



இமையாணன் அ.த.க. வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வித்தியாலய முதல்வர் சி. சிவசங்கர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவனும் வடமாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளருமான பா. முகுந்தன் கந்துகொண்டார். (ம-108)

## புலமைப்பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 30

**உடுவில் மல்வத்தை**
**றோ.க.த.க. பாடசாலை**
சிறீதரன் பவிசன் - 168.

**சிந்மய பாரதி வித்தி**
சபேசரூபன் தக்சிகா - 164

**சிறிபாரதி வித்தி.**
சியானா சிவானந்தராசா - 167,
கிசானி கிருஷ்ணகுமார் - 166. (ம)

## நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் - வலிகாமம் பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் நிறுவுனர் சு. நடேசு, முன்னாள் பொதுமுகாமையாளர் க. சந்திரராசா ஆகியோரது நினைவுதினம் நாளை இடம்பெறவுள்ளது.

கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் கொத்தணித் தலைவர் செ. செல்வராசா தலைமையில் காலை 10.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-63)

## வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தால் அதிபர் போட்டிப் பரீட்சைக்கான சிறப்புக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் காலை 9 மணிக்கு இந்த வகுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

கொழும்புத்துறை, ஒக். 30

வலைப்பாடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து தோற்றி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

வலைப்பாடு புனித அன்னமாள் ஆலய நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி அலோய் அருள்நேசகுமார் கலந்து கொண்டு மாணவர்களை மதிப்புறுத்தினார். (ம-135)

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடத்தில்

# உலர்வலய விவசாயம் பற்றி பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு

**யாழ்ப்பாணம், ஒக். 30**

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயப் பீடத்தில் "உலர்வலய விவசாயத்துக்கான பன்முகத்தன்மை கொண்ட தொழில்நுட்பம்" என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.**

2015ஆம் ஆண்டு முதல் இந்த ஆராய்ச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த வருட மாநாட்டின் முதன்மை விருந்தினராக அமைச்சர் கலாநிதி சரத் அமனுகம கலந்து கொள்ளவுள்ளார்.

கலாநிதி டபிள்யு.எம்.டபிள்யு. வீரக்கோன் மதிப்புறு விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளதுடன் "தேசிய உணவூட்டலுக்கானபுதிய பயிராக்கவியல் தொழில்நுட்பங்கள்" எனும் தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்த மாநாட்டின் முதன்மைப் பேச்சாளராக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கே.என். செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார். அவர் "மானாவாரி விவசாயத்தின் சவால்களும் தீர்வுகளும்" எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

மேலும் றுகுண பல்கலைக் கழக பேராசிரியர்களான மங்கள டி.சொய்சா மற்றும் கே.கே.ஐ.யு.அருணகுமார ஆகியோர் முறையே "பூகோளமயமாதல் மற்றும் நீடித்த அபிவிருத்திக்கான பசுமைப் பொருளாதார மாற்றம்" "சக்தி நெருக்கடி உணவுப் பாதுகாப்பு மற்றும் நுண் அல்கா அடிப்படையிலான உயிர்வாயு அபிவிருத்தி" எனும் தலைப்புக்களிலும், ஐக்கிய இராச்சியத்தின் புருனல் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி என்.மணிவண்ணன் "மின்னியல்முறையிலானகிருமிநாசினி தெளிப்பு பீடைக் கட்டுப்பாட்டினை இலங்கை விவசாயத்தில் அறிமுகப்படுத்தல்" எனும் தொனிப்பொருளிலும், பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சி.எம்.பி. டெமற்றவேவ 'விலங்கு மரபணு வளர்ச்சியின் புதிய சவால்கள்" எனும் தலைப்பிலும், கென்யாநாட்டுநைரோபி பல்கலைக் கழக பேராசிரியர் பிரான்சிஸ் எம்.முட்டுவ "ஒன்றிணைக்கப்பட்ட வறட்சிச் சுட்டியைப் பயன்படுத்தி வறட்சிக் கணிப்பு மற்றும் எதிர்வுகூறல்" என்ற தொனிப்பொருளிலும் முதன்மை உரையாற்றவுள்ளனர். 63 ஆய்வுக்கட்டுரைகளும் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ம)



## யாழ். பொதுநூலகத்தின் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 30

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

கடந்த 26ஆம் திகதி இந்தக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ் மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்தார். மேற்படி கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நூலகத்தின் தற்போதைய நிலை, தேவைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் நூலக நிர்வாகத்தினருடன் மாநகர முதல்வர் கலந்துரையாடினார். (ம)



யாழ்ப்பாணம் அரியாலையில் அமைந்துள்ள ஞானதீபம் 'இளையோர் திறன் விருத்தி மையத்தின்' வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், மாணவன் ஒருவரால் (சித்தார்த்தன்) எழுதப்பட்ட 'கரைதொடாத அலைகள்' நூல் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட் கலந்து கொண்டார். நிகழ்வின் ஒரு பகுதியாக புதிய வகுப்பறைக் கட்டடத்தொகுதிக்கான அடிக்கல் நடும் வைபவமும் இடம்பெற்றது. (ம-8)

## பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஒக் 30

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் பாடசாலை முதல்வர் திருமதி பு.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிறேமதாஸ், சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் நே.பிரதீபன், மதிப்புறு விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியை திருமதி சுகுணசோதி சின்னையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-159)



அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் அதிபர் அலுவலகம் அண்மையில் சீரமைக்கப்பட்டது. பாடசாலையின் பழைய மாணவனும் யாழ் பாரதி பதிப்பகப் பணிப்பாளருமான சி.சதீஸால் அண்மையில் அது திறந்து வைக்கப்பட்டது. (ம-36)

## பரிசளிப்பும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஒக். 30

ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தால் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும் நாளை நடைபெறவுள்ளன.

ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூட மண்டபத்தில் ஓவியக்கூட இயக்குனர் திருமதி யோகமணி அழகரட்ணம் தலைமையில் மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.


சிறப்பு விருந்தினர்களாக டிறிபேக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் க.அருந்தவபாலன், தென்மராட்சி வலயக்கல்வி அழகியல் துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுனில் ஆரியர்த்தினா, ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களான ந.திரு வாசகன், சி. சிவதாசன், செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (ம)



சில்லாலை பங்கு இளையோர்களின் இளையோர் தினம் சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு அகஸ்ரின் அடிகளாரின் நெறிப்படுத்தலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு இளையோர் மன்ற கொடியேற்றலுடன் நிகழ்வுகளுகள் ஆரம்பமாகின. கொடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் தலைமையில் இளையோர் தின சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-222)



யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவி யோகநாதலிங்கம் லக்ஸிகா சரண மாணவர்களுக்கான உயர் விருதான 'அரச தலைவர் விருதை' அண்மையில் பெற்றுக் கொண்டார். (ம)



வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸினால் சண்டிலிப்பாயில் உள்ள பயனாளிகளுக்கு 5 ஈருருளிகள் அண்மையில் வழங்கப்பட்டன. வலிமேற்கு பிரதேச சபை மண்டபத்தில் வைத்து இந்த ஈருருளிகள் வழங்கப்பட்டன. (ம-63)

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்க அலவலகம் திறப்பு

முல்லைத்தீவு, ஒக் .30
முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரின் அலவலக திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.
முல்லைத்தீவு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் சின்னத்தம்பி லவகுசன் தலைமையில் நடந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாட்டச் செயலக பிரதம கணக்காளர் மிக்கல்பிள்ளை கேசுறெஜினோல்ட் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்.





## ‘உயிர்சாயி’ குறும்படம் வெளியீடு

புதுக்குடியிருப்பு, ஒக் .30
புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் இறையோர் மன்றத்தின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ‘உயிர்சாயி’ என்னும் குறும்படம் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை அருட்திரு சுதர்சன் அடிகளாரின் நெறிப்படுத்தலில் புனித சூசையப்பர் ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது.(222)

## விளையாட்டுக் கழகத்தினருக்கு சீருடைகள்

கொடிகாமம், ஒக். 30
கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சி இளைஞர் விளையாட்டுக் கழகத்தினருக்கு நேற்று முன்தினம் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன .
இலண்டனில் வதியும் தர்மலிங்கம் நாகராஜா 40 ஆயிரம் ரூபா நிதியினை வழங்கியிருந்தார். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் முப்பதாவது ஆண்டு நிகழ்வாக கடந்த செப்ரெம்பர்மாதம் முதலாம் திகதி அன்று பூநகரி, கிராஞ்சியில், வறிய குடும்பங்களைச் சேர்ந்த 15 மாணவர்களுக்கு புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனால் ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டபோது, பூநகரி இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த உதவி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது. (159)



## ஈருருளி வழங்கல்

வவுனியா,ஒக் .30
வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்று வரும் செல்வி. சதானந்தன் பவிதா என்கின்ற மாணவிக்கு நேற்று முன்தினம் அன்பாலயம் அவுஸ்ரேலியா அமைப்பினரால் போக்கு வரத்துச் சிரமத்தை நீக்குவதற்காக ஈருருளி ஒன்று வழங்கப்பட்டது. மாணவி பழம்பாசி கிராமத்திலிருந்து நெடுங்கேணிக்கு 7 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே கல்வி கற்று வருகின்றார். (222)



## நாடகமும், அரங்கியலும் பாடத்திற்கான செயலமர்வு

வவுனியா,ஒக் .30
வவுனியா விபுலானந்தா கல்லூரியின் அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தரம் 11 மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்துக்கான செயலமர்வு கடந்தவாரம் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் மதிவண்ணன் மற்றும் வெளிச்சம் அறக் கட்டளையின் தலைவர் பா.லம்போதரன் பொருளாளர் செ.மேனதாஸ் மற்றும் கல்லூரியின் பழைய மாணவன் வி.ஷகிப்நாத் போன்றோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். துஜானின் வழி நடத்தலில் இந்தச் செயலமர்வு இடம் பெற்றது. (110)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி, ஒக் .30
**கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகம் நேற்றையதினம் திறந்துவைக்கப்பட்டது.**




இந்த நிகழ்வு நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றிணைத்து குறித்த இணையம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அலுவலகம் நேற்றைய தினம் திறந்துவைக்கப் பட்டது.
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு அருகில் திருநகர் முதலாம் ஒழுங்கையில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித்த இணையத்தின் தலைவரான ச.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அலுவலகத்தின் பெயர் பலகையினை வேல்ள்ட் விசன் நிறுவனத்தின் கிளிநொச்சி முகாமையாளர் ரவீந்திரன் திறந்து வைத்தார். (6)



# வழிகாட்டல்க் கருத்தரங்கு

கிளிநொச்சி, ஒக் .30
ஊவாவெல்லச பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த வாரம் இடம்பெற்றது .
ஊவாவெல்லச பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் ஏற்பாட்டிலும் ,வழிநடத்தலிலும் உதயனின் ஊடக அனுசரணையுடன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது. மாணவர்களின் கணித மற்றும் விஞ்ஞான பாடங்களில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஒரு செயற்பாடாக இது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களால் கடந்த ஒரு வாரத்தில் வடக்கு மாகாணம் பூராகவும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வருகின்ற வாரம் மத்திய மலைநாட்டினை நோக்கி அவர்களின் பயணம் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

## சிறப்புக் கல்விக் கருத்தரங்கு

மாங்குளம்,ஒக் .30
2018 ஆம் வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சிறப்புக் கல்விக் கருத்தரங்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமானது.
இந்த விசேட கல்விக் கருத்தரங்கில் மாங்குளம் உயிரிழை அமைப்பின்பயனாளிகளின் மாணவர்கள் மற்றும் . மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (222)



# வவுனியாவில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம்

**வவுனியா,ஒக் .30**

**வவுனியா மாவட்டப் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை வவுனியாவில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.**





நாளாந்தச் சம்பளம் ஆயிரம் ரூபாவுக்காகப் போராடும் மலையகத் தொழிலாளர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டி வவுனியா மாவட்ட பொது அமைப்புகள் நேற்றுக் காலை 9.30 மணிக்கு வவுனியா மருத்துவமனைக்கு முன்பாக மனிதச் சங்கிலி போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது:

இலங்கை நாட்டின் மிக முக்கிய பொருளாதாரமாகவும், முதுகெலும்பாகவும் இருந்து வருவது பெருந்தோட்டத்தின் தேயிலை ஏற்றுமதிப் பொருளாதாரம் ஆகும்.

இப் பொருளாதாரம் நாட்டிற்குப் பெரிய ளவிலான அந்நியச் செலவாணியை பெற்றுத்தருகின்றது. ஆனால் தேயிலைக் கொழுந்துகளை பறிக்கின்ற இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்ந்தும் தோட்டக் கம்பனிகளாலும், மலையகப் பிற்போக்கு அரசியல் தலைமைகளினாலும் ஏமாற்றப்பட்டு, காட்டிக்கொடுக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில், மலையகத் தோட்டத் தொழிலாளார்கள் வீதியில் இறங்கித் தொடர்ந்து வீதிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால் அப்போராட்டத்தை தோட்டக் கம்பனிகள் சற்றுக்கூட கவனத்தில் எடுக்காத நிலைமையே தொடர்ந்து வருகின்றது.

ஆனால் அவ் தோட்டத் தொழிலாளார்கள் தமது அடிப்படைச் சம்பளமாக ஆயிரம் ரூபாவினை வலியுறுத்திப் போராடி வருகின்றனர். அப் போராட்டமானது இன்றைய சூழலில் நியாயமானதும், சரியானதும் ஆகும். அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியத்தை கேட்டுப்போராடி வருகின்ற அவர்களுக்கு வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் எனும் அடிப்படையில், எமது ஆதரவுக் கரங்களை நீட்டுகின்றோம். அதன் அடிப்படையில் இன்றைய நிலையில் வாழ்க்கைச் செலவு கூடியவாறு உள்ளது. சீனி 100 ரூபா, அரிசி 95 ரூபா ,கோதுமை மா 90 ரூபா, மண்ணெண்ணெய் 70 ரூபா, தேங்காய் எண்ணெய் 285 ரூபா, ஆகவே மலையகத் தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா கொடுக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தியே இன்றையதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா மாவட்டப் பொதுமருத்துவமனைக்கு முன்பு மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றைஏற்பாடுசெய்துள்ளோம். தொழிலாளர்களது நியாயமான போராட்டத்துக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைப்பதுடன், இல்லாதுவிடின் போராட்டங்களை தொடரவுள்ளதாகும் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்திஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராஜா,ஈரோஸ் அமைப்பாளர் மாணிக்கம் ஜெகன்,புதிய ஜனநாயகக் கட்சியின் செயலர் நி.பிரதீபன்,தமிழீழ விடுதலைக் கழகத்தின் அமைப்பாளர் யோகேந்திரன், மற்றும் உறுப்பினர்கள்,சிறிரெ லோ இளைஞரணியின் ப.கார்த்தீபன்,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்தோர், வவுனியா தெற்கு, செட்டிகுளம் பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழ் விருட்சத்தின் சந்திரகுமார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (110)

## மாமனிதர் நடராஜா ரவிராஜின் 12 ஆவது ஆண்டு நினைவு



யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 12 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்கள் நேற்று அவரது குடும்பத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக காணப்படும் மாமனிதரின் உருவச்சிலைக்கு உறவினர்கள் மற்றும் சாவகச்சரி நகரசபை உறப்பினர் யோ.ஜெயக்குமார் உள்ளிட்ட பலர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (9)

## புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் ஆண்டுப் பொதுக்கூட்டம்

மன்னார்,ஒக் .30

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் ஆண்டுப்பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவுக்குமான கூட்டம் நவம்பர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும், இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும், பழைய மாணவர்கள் யாரேனும் இச் சங்கத்தில் புதிதாகசேர விரும்பினால், முறையான விண்ணப்ப படிவத்தை பெற்று பூரணப் படுத்தி அதற்குரிய அங்கத்துவ பணத்தினை செலுத்தி உறுப்பினராகப் பொதுக் கூட்டத்திற்கு முன்போ அல்லது அன்றைய தினத்திலோ இணைந்துகொள்ள முடியும். என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவம் பெற விரும்பின்தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் (0777650611, 0768207528 ) அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாபெரும் தொழில்ச் சந்தை

வவுனியா.ஒக் .30

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலகமும், பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை இன்று செவ்வாய்கிழமை காலை 8 மணிதொடக்கம் மாலை 2 மணிவரை வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபறவுள்ளது. எனவே தொழில் ஒன்றை தேடுபவர்கள் குறித்த தொழிற் சந்தையில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டுகுழுவால் தெரிவிக்கப்படுகின்றது. (110)

## வறட்சி நிவாரண உலர் உணவுப் பொருள்கள் வழங்கல்

சாவகச்சேரி ஒக். 30

கொழும்பில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக இணைத்தலைமைகளின் வருகைக்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வறட்சி நிவாரண உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் நேற்று தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து நிலையங்களில் ஆரம்பமானது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதேசத்தில் 60 கிராம அலுவலர் பிரிவுகளில் 5 ஆயிரத்து 452 குடும்பங்களுக்கான வறட்சி நிவாரணப் பொருள்கள் இடர் முகாமைத்துவ அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. உலர்உணவுப்பொருள்கள் வழங்கல் பிரதேச இணைத் தலைமையினால் ஆரம்பித்து வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து அவை களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.



உலர்,உணவுப் பொதிகளுடன் அனுப்பப்பட்டிருந்த உருளைக் கிழங்கு மற்றும் முட்டை ஆகியவை பழுதடையக்கூடிய நிலமை காணப்பட்டதால் கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து நிலையங்களில் வைத்து வழங்கப்பட்டன.

பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் தலா ப்த்து முட்டைகளைக் கொண்ட பெட்டியின் அட்டையில் பொறிக்கப்பட்டிருந்த திகதி காலாவதியானதாக காணப்படவே பொதுமக்கள் சுகாதாரப் பகுதியினரிடம் முறையிட்டனர்.

சுகாதாரப் பகுதியினர் முட்டை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி யிருந்தனர்.

துறைசார் சார் அதிகாரிகளால் ஐந்து நிலையங்களிலும் முட்டைகள் சோதனையிடப்பட்டு முட்டை அட்டையில் பொறிக்கப்பட்டிருந்த திகதிகளில் திட்டமிட்டு மாற்றம் செய்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டு முட்டைகள் பழுதடையவில்லையெனவும் வழங்கப்படாத முட்டைகளை திருப்பி அனுப்பி விட்டு முட்டைக்குப் பதிலாக மீன்ரின் அல்லது வேறு பொருள்கள் வழங்குமாறு அறிக்கையிட்டுச் சென்றுள்ளனர்.

ஏனைய உலர் உணவுப் பொருள்கள் நேற்று ஐந்து நிலையங்களிலும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (9)





## முதியோர் தின நிகழ்வுகள்

முல்லைத்தீவு ,ஒக். 30

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான மாகாண முதியோர் தின நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதியோர்களின் கலை நிகழ்வுகளும் முதியோர் தினம் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

காலையில் முதியோர்களை மதிப்போம் என்னும் தொனிப் பொருளில் நடை பவனியும் இடம்பெற்றது. (9 ,159)




யாழ்ப்பாணம் நுழைவாயில் (கேற்வே) லயன்ஸ் கழகத்தால், லயன் பெ.திருச்செல்வத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை கொட்டடி சிறி மீனாட்சி முன்பள்ளி மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

## மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் வழங்கினார்

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவில் தெரிவு செய்யப்பட்ட 9 விவசாயிகளுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வேளாண் கருவிகள் நேற்று வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனால் வடக்கு மாகாண சபையின் 2018ஆம் ஆண்டுக்குரிய சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் இவை வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ. உகநாதன் தலைமையில் இவற்றை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நீர் இறைக்கும் இயந்திரம், நீர்க் குழாய் ஆகியன வழங்கப்பட்டன.

நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேசுவரன், பயிர்ப் பாதுகாப்பு பாடவிதான உத்தியோகத்தர் இ.தர்மதேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (4)



## சபை அனுமதியின்றிக் கட்டிய கட்டடப் பணி தடுத்து நிறுத்தம்

வலி.தென்மேற்கு, ஒக். 30

பிரதேச சபையின் அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடத்துக்கான கட்டுமானப் பணி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டடங்கள், சுற்று மதில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது குறித்துப் பிரதேச சபை உறுப்பினர்கள் மாதாந்தக் கூட்டங்களில் சுட்டிக் காட்டி வருகின்றனர் அதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக காரைநகர் செல்லும் முதன்மை வீதி காப்பெற் வீதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்த நிலையில் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினமும் மானிப்பாய் கிராமமும் நகரசபையாகவும், பண்டத்தரிப்பு பட்டினமும் பண்டத்தரிப்பு கிராமமும் பிரதேச சபையாகவும் தரமுயர்த்தபடவுள்ளன.

மானிப்பாய் பட்டினத்தில் முதன்மை வீதியில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள காணியில் பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டடம் அமைக்கப்படுவது குறித்துத் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற தவிசாளர் கட்டடத்துக்கான கட்டுமானப் பணியைத் தடுத்து நிறுத்தியுள்ளார். (4,115)

## போராட ஆரம்பித்து நேற்று 610 நாள்கள்

# கேப்பாப்பிலவுக் காணி விடுவிப்புக்காக மாணவர்களும் பொதுமக்களும் பேரணி

## மாவட்டச் செயலகத்தில் மனுவும் ஒப்படைப்பு

*முல்லைத்தீவு, ஒக். 30*

*கேப்பாப்பிலவு மக்கள் காணிவிடுவிப்புப் போராட்டத்தின் 610 ஆவது நாளில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கவனவீர்ப்புப் பேரணியை நேற்று நடத்தினர்.*




மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அவர்கள் கவனவீர்ப்பை நடத்தி இறுதியில் செயலகத்தில் மனுவும் கொடுத்தனர்.

கேப்பாப்பிலவு மக்கள் தங்கள் நிலங்களை விடுவிக்கக் கோரி தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் நேற்று 610 ஆவது நாளாகப் போரராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனைக் கருத்திற்கொண்டு அவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் கிருஸ்ணமேனன் தலைமையிலான மாணவர்களும் மற்றும் கேப்பாப்பிலவு மக்கள், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், பிரதேச சபைஉறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு நகரில் இருந்து பேரணியாகச் சென்ற போரராட்டக்காரர்கள் மாவட்டச் செயலகத்துக்குள் நுளைய முற்பட்டபோது பொலிஸார் தடுத்துநிறுத்தி, இருவரை மட்டும் உள்ளேசெல்ல அனுமதித்தனர். அவர்கள் உதவி மாவட்டச் செயலரிடம் மனுவைக் கையளித்தனர். (4,ரி3)

# ஆளுமையற்ற சபையாக வேலணை மாறிக்கொண்டிருக்கிறது

## சபையின் ரி.என்.ஏ., யு.என்.பி. உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30

வேலணைப் பிரதேச சபை ஆளுமை அற்ற சபையாக மாறிக்கொண்டு செல்கின்றது என்று சபை உறுப்பினர்கள் சிலர் சபையில் நேற்றுத் தெரிவித்தனர்.

வேலணைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு உப தவிசாளர் பொ.நடனசிகாமணி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது.

சபை ஆரம்பித்து ஏழு மாதங்கள் ஆகின்றன. சபையில் நிறைவேற்றப்பட்ட 50க்கும் அதிகமான தீர்மானங்கள் கிடப்பில் உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. நாம் சபைக்கு வெறுமனே வந்து கதைத்துவிட்டுப் போவது போல உள்ளது. செய்யப்பட்ட சில செயற்றிட்டங்கள் கட்சிக்கு ஆதரவாகவும், தீர்மானத்துக்கு எதிராகவும் அமைந்துள்ளன.

கடந்த சபை அமர்வில் அனுமதியற்ற கடல் அட்டை பண்ணைகள் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பத்துக்கும் அதிகமான கடல் அட்டை பண்ணைகள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டுமே சபை அனுமதி பெற்று நடைபெறுகிறது.

வேறு சில பண்ணைகளின் அனுமதி தொடர்பில் கட்சிஅலுவலகத்தில் சிபார்சு பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 11 தெரு மின் குமிழ்கள் வீதம் ஒதுக்கப்பட்டன. ஆனால் அவை தேவையின் நிமித்தம் உறுப்பினர்களின் சம்மதத்துடன் வேறு வட்டாரங்களுக்குப் பொருத்தப்பட்டன. உறுப்பினர்கள் சிலரின் அனுமதி இல்லாமலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட மின் குமிழ்கள் எடுக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் நடைமுறைக்கு வருவதில்லை. இதனால் ஆளுமையற்ற சபையாக மாறி கொண்டிருக்கிறது. ஆகவே கட்சி சார்பாக செயற்படாமல் தீர்மானங்கள் நடைமுறைக்கு வர வேண்டும் என்றனர்.

**சந்தைகள்**

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட சந்தைகள் சில நீண்ட காலம் செயற்படாமல் உள்ளன. அவை பயன்பாட்டுக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மண்டைதீவில் 2016 ஆம் ஆண்டு வாராந்த சந்தை அமைக்கப்பட்டது. இன்று வரையில் பயன்பாட்டுக்கு வரவில்லை. அது பயன்பாட்டுக்கு வர வேண்டும். அது தற்போது சந்தையாகக்காணப்படுவதால் அதனைக் குத்தகைக்கு எடுக்க யாரும் முன்வரவில்லை. அதனைக் கடையாக மாற்றி அமைக்கும் பட்சத்தில் அதனைக் குத்தகைக்கு எடுப்பதற்கு நபர்கள் தயாராக உள்ளார்கள். ஆகவே அதனைக் கடையாகமாற்றவேண்டும்என்றுதீர்மானிக்கப்பட்டது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புங்குடு தீவு சந்தையும் இன்னமும் பாவனைக்கு முழுமையாகவரவில்லை. ஏழுகடைகள், சந்தை மற்றும் கோழி இறைச்சிக் கடைத் தொகுதியாக அமைக்கப்பட்டது. ஆனால் நான்கு கடைகள் மாத்திரம் குத்தகைக்குப் போயுள்ளன. இன்னமும் சந்தை முழுமையாகப் பாவனைக்கு வரவில்லை ஆகவே இந்தச் சந்தை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபையில் சுட்டிக் காட்டப்பட்டது.

**உடற் பயிற்சி உபகரணங்கள்**

வேலணைப் பிரதேச சபையின் கீழ் உள்ள இரண்டு உடற் பயிற்சி நிலையங்களில் உடற் பயிற்சி உபகரணங்கள் சில காணாமல் போயுள்ளன. இந்த நிலை தொடராமல் இருப்பதற்கு உடற்பயிற்சிக் கூடங்கள் பாவனைக்கு வர வேண்டும் என்று சபைச் செயலர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பயிற்சியாளரை நியமித்து உடற் பயிற்சிக் கூடத்தை இயங்க வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

**மீன்களுக்கு நிர்ணய விலை**

மீன்வளம் மிக்க வேலணைப் பிரதேசத்தில் மக்களுக்கு மீன்கள் உரிய விலையில் கிடைப்பதில்லை. எமது மக்களுக்கு மீன்கள் நியாமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பிரதேச மீனவ சங்கங்கள் மற்றும் சமாசங்களுடன் கலந்துரையாடி ஒரு நிர்ணய விலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. (4,7)

# மாகாண சபையின் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க சட்ட ஏற்பாடுகள் எதுவுமில்லை

## அதிகாரிகள் கைவிரிக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஒக். 30

வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வில் நிறைவேற்றிய; ஊழியர்கள் நியமனம் பற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளோ அல்லது சுற்றறிக்கைகளோ எவையும் கிடையாது என்று அதிகாரிகள் கை விரித்து விட்டனர்.

வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட ஊழியர்களாக இருந்த ஊழியர்களை. நிரந்தர அரச சேவையின் கீழ் உள்வாங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தநிலையில் அவர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

தற்போதைய நடைமுறை விதிகளின் பிரகாரம் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்கும் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் சேவையாற்றி ஆவணம் உள்ளவர்களை மட்டுமே நியமிக்க முடியும். அவ்வாறு நியமிக்கப்படுபவர்களும் நியமனத் திகதி அன்று அல்லது சேவையின் பிரகாரம் முதல் சம்பளம் பெற்ற திகதியில் அரச சேவையில் இணையக்கூடியதான வயது எல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும். குறித்த பதவிக்கான கல்வித் தகமையைக் கொண்டிலுத்தல் வேண்டும். என்பவை கட்டாயமாக உள்ளன.

இந்த வகையில் கொழும்பு அரசின் அமைச்சர்களுக்கு முதலமைச்சர்கள் சமாந்தரம் என்ற வகையிலும் கொழும்பு அரசின் பிரதி அமைச்சர்களுக்கு மாகாண அமைச்சர்கள் சமாந்தரம் என்ற வகையிலும் மாகாணத்தின் 5 அமைச்சர்கள் மற்றும் அவைத் தலைவரின் பணியாளர்கள் தொடர்பிலேயே கவனம் செலுத்த முடியும். ஏனையோர் இதற்குள் உள்வாங்கப்பட முடியாது.

வடக்கு மாகாண சபையின் நான்கு அமைச்சர்கள் இடைநடுவே மாற்றப்பட்டுள்ளனர். இதனால் முன்பிருந்த அமைச்சர்களின் பணியாளர்களும் சந்தர்ப்பத்தை இழந்தனர். இறுதியாக இருந்த 4 அமைச்சர்களின் பணியாளர்களும் 5 ஆண்டு தகமையை கொண்டவர்கள் அல்ல. இறுதியில் அவைத் தலைவர் மற்றும் முதலமைச்சரின் பணியாளர்கள் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தக் கூடிய நிலமை ஏற்பட்டதனையடுத்து இருவரின் பணியாளர்களில் அவைத் தலைவரின் பணியாளர்கள் தொடர்ந்தும் பணியாற்றும் சந்தர்ப்பம் உண்டு.

இறுதியில் முன்னாள் முதலமைச்சரின் பணியாளர்கள் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் ஐவர் முதியவர்கள் என்ற நிலையிலும் மூவர் 5 ஆண்டு சேவைக்காலம் இல்லை என்ற நிலையிலும் உள்ள அதே நேரம் மூவர் மட்டுமே அனைத்தையும் தாண்டி நியமன வரையறையை எட்டிப்பிடித்தபோதும் குறித்த பணிக்கான கல்வித் தகமை போதாமை காரணமாக சாதாரண நியமனம் மட்டுமே கிட்டுமானால் 38 உறுப்பினர்களின் ஊழியர்களில் மூவருக்கே அரச நியமனத்தைப் பெற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது. (4,105)

---

## கட்டுமீறும் கசிப்பு உற்பத்தியை கல்லாறில் கட்டுப்படுத்துங்கள்

### பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 30

கல்லாறு கால் ஏக்கர் திட்டப் பகுதியில் கசிப்பு உற்பத்தியைக்கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமமே கல்லாறு கிராமம். குறித்த கிராமத்தில் தற்போது தொடர்ச்சியாக கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாகவும் அதனால் குடும்பங்களில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதாகவும் இளஞ்சமுதாயமும் பாதிக்கப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கசிப்பு உற்பத்தி செய்பவர்களைப் பொலிஸார் கைதுசெய்து கொண்டுசென்று உடனயே அவர்களை விடுதலை செய்வதால் அவர்கள் தொடர்ச்சியாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.


கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் தருமபுரம் பொலிஸாருடன் இணைந்து கிராம மட்ட அமைப்புகள் கசிப்பு உற்பத்தி செய்யும் வீடுகளுக்குச் சென்று எச்சரிக்கை விடுத்திருந்தன. கசிப்பு உற்பத்தியில் தொடர்ச்சியாக ஈடுபட்டால் கிராம அலுவலரால் வழங்கப்படுகின்ற உதவிகள் நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்கவிடம் கேட்டபோது மக்களின் கோரிக்கைக்கு இணங்க குறித்த பகுதிகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்கள் ஆதரவுதருமிடத்து அங்கு உற்பத்தியைக் கடுப்படுத்த முடியும் என்று தெரிவித்தார். (4,6)

---

*ரி.ஐ.டியினர் கொழும்பிலிருந்து வந்து மீள விசாரணை*

## கிளிநொச்சி திருவள்ளுவர் சிலையில் இருந்த 'ஈழம்' அழிக்கப்பட்டு 'சிறிலங்கா' என மாற்றம்



கிளிநொச்சி, ஒக். 30

கிளிநொச்சி கரைச்சி திருவள்ளுவர் சிலையில் காணப்பட்ட ஈழம் என்ற சொல் அழிக்கப்பட்டு சிறிலங்கா என்று மாற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான பகுதியில் திருவள்ளுவர் சிலை அமைப்பதற்குத் தமிழ்ச் சங்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. சிலையின் கீழ்ப் பகுதியில் காணப்பட்ட பூகோளத்தில் 'இலங்கை (ஈழம்)' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனை அவதானித்த புலனாய்வாளர்கள் அதனை நீக்குமாறு தெரிவித்ததற்கு இணங்க நீக்கப்பட்டது. பின்னர் மீளவும் குறித்த பகுதியில் ஈழம் என்று எழுதப்பட்டது. இதனால் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் கொழுப்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதில் சட்டத்துக்கு முரணாக எதுவும் இல்லை. பாடசாலைப் புத்தகங்கள் தொடக்கம் பாடல்களில் கூட 'ஈழம்' என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது. காரைநகர் சிவன் கோவிலை ஈழத்துச் சிதம்பரம் என்றே அழைக்கின்றார்கள். தேவாரங்கள், காப்பியங்கள் முதல் பல்வேறு சமய மற்றும் இலக்கியங்களில் ஈழம் என்ற சொல் தொன்று தொட்டு குறிப்பிடப்பட்டு வருகிறது.

இதனைதவிர வடக்கில் ஈழம், தமிழீழம் எனும் சொற்களுடன் ஆரம்பிக்கப்படுகின்ற பல அரசியல் கட்சிகள் சட்ட ரீதியாக இயங்கி வருகிறன. அது இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்களில் ஒன்று என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில் கடந்த இரு நாள்களுக்கு முன்னர்தான் இவ்வாறு ஈழம் என்ற சொல் நீக்கப்பட்டு 'சிறிலங்கா' என்று எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருவள்ளுவரின் திருக்குறள் உலகப் பொது மறை என்பதால் திருவள்ளுவரின் சிலையை உலகத்தின் மீது இருப்பது போன்று சிலை தாங்கியை வடிவமைக்க கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் தீர்மானித்து. அதன்படி உலக நாடுகள், கண்டங்கள், சமூத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்டு சிலை தாங்கியும் அமைக்கப்பட்டிருந்தது. இதில் இலங்கையை அதன் மற்றொரு பெயரான 'ஈழம்' என்று எழுதப்பட்டு அடைப்புக்குறிக்குள் இலங்கை என்று எழுதப்பட்டிருந்தது.

இதுவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்குச் சர்ச்சையாகக் காணப்பட்டது.

கிழமை கொழும்பிலிருந்து நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளை மற்றும் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் ஆகியோரை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

"பயங்கரவாத விசாரணைப் பிரிவின் விசாரணைகளின் பின்னர், தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக அதனை அழித்தோம்" என்று தெரிவித்தார்.

இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. திருவள்ளுவர் சிலையில் உள்ள பீடத்தில் இலங்கைக்கு எழுதப்பட்ட ஈழத்தை அழிக்க அறிவித்த பயங்கரவாதவிசாரரணைப்பிரிவினரையும் அதனை கேட்டு உடனடியாக அழித்த தமிழ்ச் சங்கத்தின் மீதும் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

முன்னரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பின் பெயரில் ஈழம் அழிக்கப்பட்டு மீண்டும் எழுதப்பட்டிருந்தது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேளமாலிகிதன், "தமக்குத் தெரியாமல் அவ்வாறு பெயர் மாற்றப்பட்டுள்ள. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார். (4,6,35)

---

## ஆவா குழுவால் அச்சுறுத்தலென அமைப்பாளர் முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக். 30

ஆவா குழுவினர் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று தெரிவித்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளரான நாகராஜன் முறைப்பாடு செய்துள்ளார். வவுனியா மாவட்ட தலைமை பொலிஸ் நிலையத்தில் அவர் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளராகவும் வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளருமாக உள்ளார். அவரது அலைபேசிக்கு நேற்றுமுன்தினம் இரவு அழைப்பு எடுத்த மர்மநபர்கள் "உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் தடைசெய்யப்பட்ட கழகங்களை இணைத்துச் செயற்படாவிட்டால் உன் மீது வாள்வீச்சு நடத்தப்படும். அண்மையில் வவுனியாவில் ஆவா குழுவின் துண்டுபிரசுரங்களை வெளியிட்டிருந்ததும் நாமே" என்று அச்சுறுத்தியுள்ளனர் என்று அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

" நாம் சொல்வதைக் கேட்காவிட்டால் வீட்டை விட்டு வெளியில் வரும்பொழுதே உன்மீதும் உன் குடும்பத்தினர் மீதும் எமது வாள்கள் பாயும்" என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்ததாகவும் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தாம் அவசர பொலிஸாரின் இலக்கமான 119க்குத் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்ததாகவும் பொலிஸார் வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாகராஜனின் மனைவி வவுனியா நகரசபை உறுப்பினராகவுள்ளார். (4,6,110)

---



மன்னார் சதொச வளாக அகழ்வில்

## 96ஆவது நாளான நேற்று 200ஆவது என்புக்கூடு மீட்பு

தலைமன்னார், ஒக். 30

மன்னார் சதொச விற்பனை நிலைய வளாக மனித புதைகுழி அகழ்வில், 96'ஆவது நாளான் நேற்று 200ஆவ மனித எலும்புக்கூடு அகழப்பட்டு மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது வரைக்கும் அங்கு ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று 207 மனிதஎலும்புக்கூடுகள் அடையாளமிடப்பட்டபோதும் 199 எலும்புக்கூடுகள் குழிக்குள்இருந்து வெளியேற்றப்பட்டிருந்தன. நேற்று 200ஆவது மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

மன்னார் மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவின் மேற்பார்வையில் சட்டமருத்துவ நிபுணர்டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தலைமையில் களனி பல்கலைக்கழகப் பேராசிரியர்ராஜ்சோமதேவா இணைந்து கொண்ட குழுவினர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் மன்னார் நகர் நுழைவாயில் பகுதியில் சதொச விற்பனை நிலைய கட்டுமானப் பணி வேலையில் ஈடுபட்டபோது எலும்புக்கூடு மீட்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அகழ்வு ஆரம்பமானது. (4,60)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இது என்ன நியாயம்?

பதவிநீக்கப்பட்டதாகஅறிவிக்கப்பட்டுள்ளதலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கவைஅந்தப்பதவியில் இருந்து அகற்றியமைக்கு என்ன காரணம் என்பதை நாட்டு மக்களுக்குக் கூறியிருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. சிலபலவிடயங்களைஅதில்அவர்சுட்டிக்காட்டியிருந்தார்.

2015ஆம் ஆண்டு தனது உயிரைப் பணயம் வைத்து அன்று பெற்றுக்கொண்ட அந்த அரசியல் வெற்றியைக் கொச்சைப் படுத்தும் வகையில் ஒழுக்கம்மிக்க அரசியலுக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்க நுழைந்தார் என்று மைத்திரி குற்றஞ்சாட்டினார். கூட்டுச் செயற்பாடற்ற, தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும் முரட்டுத்தனமான பிடிவாதம் மிக்கவர் ரணில் என்றும் திட்டியுள்ளார். அவரது அத்தகைய செயல்களால் பெரும் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டன என்றும் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற கொள்ளையே நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டது என்றும் அதற்கு ரணில் விக்கிரமசிங்கவே முழுப் பொறுப்பாளியுமாவார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

தன்னைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்து விசாரணை நடத்துவதற்குப் போதியளவிலான நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரச தலைவர் தனது உரையில் ரணில் விக்கிரமசிங்க மீது முன்வைத்த இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவற்றையும் மறுத்துரைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அவற்றில் பெருமளவு உண்மையும் உண்டு என்று ஏற்றுக்கொள்ளலாம். அரசதலைவர்சுட்டிக்காட்டியுள்ளஇந்தவிடயங்கள்அனைத்திலும் ரணிலின் மோசமான செயற்பாடுகளை முழு நாட்டு மக்களுமே அந்தந்தத் தருணங்களில் நேரடியாகவே கண்டுணர்ந்தவர் என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை.

ரணில்அப்படிப்பட்ட மனிதர், அவரால்நாட்டுக்குப்பெரும் பாதிப்பு ஏற்பட்டது என்பது உண்மை என்பதை ஏற்றுக் கொள்கின்ற அதேநேரத்தில் முற்றிலும் முரண்படும் ஒரே விடயம்,அரசதலைவரின்கூற்றுப்படிபெரும்குற்றவாளியான ரணிலுக்குப்பதிலாளியாகஅவரைவிடப்பெரியகுற்றவாளி என இதே மைத்திரிபால சிறிசேனவால் 2015ஆம் ஆண்டு மேடை மேடையாக அடையாளம் காட்டப்பட்ட மகிந்த ராஜபக்ச எப்படிப் பொருந்திப்போனார் என்பதுதான்.

அரசதலைவர்தனது உரையில் ரணிலின் குறைபாடுகளுக்கு எல்லாம் ஒரே தீர்வு மகிந்த ராஜபக்சதான் என்று கூறினாரே தவிர, எப்படி மகிந்த அதற்குப் பொருத்தமானார்என்பதைக் கூறாமல் தவிர்த்துவிட்டார்.

ஒழுக்கமிக்க மக்களாட்சி அரசியலுக்கு ஒவ்வாத வகையில் மகிந்த ராஜபக்சவும் அவரது குடும்பத்தினரும் செயற்படுகிறார்கள், மகிந்தவும் அவரது அண்ணன் தம்பிகளுமே நாட்டின் பொருளாதாரத்தில் 60 வீதத்தைக் கையாளும் அமைச்சுக்களைத் தம் வசம் வைத்துக்கொண்டு முறைகேடுகளில் ஈடுபடுகிறார்கள், நீதிக்குப் புறம்பானகொலைகள் எவற்றையும் ராஜபக்சாக்கள் கண்டுகொள்வதில்லை என்பதுடன் அவற்றில்பலவற்றின்பின்னணியில்அவர்களேஇருக்கிறார்கள்,நாட்டுக்குப்பொருந்தாதஅபிவிருத்தித்திட்டங்களுக்குக் கடன் மேல் கடன் வாங்கி நாட்டைப் பொருளாதார நெருக்கடிக்குள்தள்ளிவிட்டுள்ளார்கள், அபிவிருத்தி என்கிற பெயரில்மகிந்தகுடும்பமேகொள்ளையடிக்கிறது என்றெல்லாம் மகிந்தவைப்பற்றி 2015ஆம் ஆண்டு மேடை மேடையாக தானும் முழங்கினார் என்பதை மைத்திரி மறக்கமாட்டார்.

அதனடிப்படையிலேயே மகிந்த மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பலர் மீது தற்போதும் நீதி விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அப்படியிருக்கையில், ரணில் விக்கிரமசிங்கவைவிட மகிந்த எப்படிச்சிறந்த தெரிவானார் என்பதைநாட்டுமக்களிடம்இருந்துமறைத்துவிட்டார்அரச தலைவர்.

ஒருவர் கெட்டவர், பாதகமானவர் என்றால் அவரை நீக்கிவிட்டு நேர்மையானவர், சிறந்தவர் ஒருவரைப் பதவியில் அமர்த்துவதில் ஒரு நியாயம் இருக்க முடியும். ஆனால். ஒருவரைக் குற்றவாளி என்று குற்றஞ்சாட்டிக்கொண்டு அவரைவிடப் பெரிய குற்றவாளி எனக் குற்றஞ்சாட்டப்பட்டவரை அவரது இடத்தில்நியமிப்பதுஎந்தவகையில்நியாயமானது? மக்கள் இந்த நீதி நியாயத்தையெல்லாம் வீதிக்கு வந்து கேட்கமாட்டார்கள்என்கிறதுணிவில்தான் இப்படி நடந்துகொள்கிறார்களா?

# என் முன் எஞ்சியிருந்த ஒரே தீர்வு இதுதான்!

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக்கி, ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில். இருந்து நீக்கிய முடிவை எடுத்ததற்கான தன்பக்க விளக்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. "என்மீதான கொலைச் சதி பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் புலனாய்வுப் பிரிவினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அரசின் புலனாய்வுக் குழுக்களும் இதுவரைப் பெற்றுக்கொடுத்திருக்கின்ற தகவல்களின்படி இந்தச் சதித்திட்டம் மிகப் பாரதூரமானதாகவே இருக்கின்றது. இந்தப் பின்னணியில், இந்த அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்குப் பின்னால் என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய மிக முக்கியமான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில் என் முன் எஞ்சியிருந்த ஒரே தீர்வு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்திப் புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும்" என்றிருக்கிறார் அவர். அவரது உரையை அரச தலைவர் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது. அது இங்கே தரப்படுகிறது.

**அன்புக்குரிய பெற்றோர்களே! நண்பர்களே!**

உங்கள் முன் எனது கருத்துக்களை முன்வைப்பதற்குத் தீர்மானித்தமைக்குக் காரணம், கடந்த சில தினங்களாக இந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், நாட்டின் எதிர்காலத்தை வளமாக்கும் வகையில் நாம் பயணிக்க வேண்டிய திசையையும் தெளிவுபடுத்துவதற்காகவே ஆகும்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி உங்களின் ஏறத்தாழ 62இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொடுத்து என்னை அரச தலைவனாகப் பெரும் எதிர்பார்ப்புகளுடனேயே தேர்ந்தெடுத்தீர்கள். நாட்டையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபடும் நாம், எந்தக் கட்சி என்பதையோ, வலதுசாரி கட்சியா? இடதுசாரி கட்சியா? என்பதை விட நாம் சேவை செய்யும் நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கு நாம் செய்ய வேண்டிய மிகச் சிறந்த காரியம் என்ன என்பதையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2014ஆம் ஆண்டு பொது வேட்பாளராக என்னைத் தெரிவு செய்தபோது நான் முகங்கொடுக்க நேர்ந்த இக்கட்டான நிலைமையைப் பற்றி உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இந்த நாட்டு அரசியலில் எவருமே பொறுப்பேற்காத பாரதூரமான அரசியல் சவாலையே அன்று நான் பொறுப்பேற்றேன். அத்தோடு அது அரசியல் ரீதியாக மாத்திரமன்றி தனிப்பட்ட வகையில் எனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கும் ஏற்பட்ட பெரும் அச்சுறுதலுக்கு மத்தியிலேயே அன்று நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். அதேபோலவே 2018 ஒக்ரோபர் 26 ஆம் திகதி நான் மேற்கொண்ட தீர்மானமானது, 2014நவம்பர் 21 ஆம் திகதி நான் மேற்கொண்ட தீர்மானத்தை விட மிகப் பாரதூரமான, சவால்மிக்க, மிகவும் இக்கட்டான ஒரு தீர்மானம் ஆகும்.

**அரசியலுக்கு ஒவ்வாத செயல்களில் ரணில் ஈடுபட்டார்**

2015ஆம் ஆண்டு எனது உயிரைப் பணயம் வைத்து அன்று பெற்றுக்கொண்ட அந்த அரசியல் வெற்றியைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஒழுக்கமிக்க அரசியலுக்கு ஒவ்வாத அரசியல் செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்க பிரவேசித்தார். இலங்கையின் எதிர்காலத்தை அவர், அவருடன் நெருங்கிச் செயற்படும் மக்களின் உணர்வுகளை உணராத ஒரு சில செல்வந்தர்கள் குழுவினரின் களியாட்டச் செயற்பாடுகளாக்கிக் கொண்டார். குறிப்பாக 'நல்லாட்சி அரசு' எனும் கருப்பொருளை ரணில் விக்கிரமசிங்க மிக வெளிப்படையாகவே முறைகேடாகக் கையாண்டார். 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி நான் வெற்றியீட்டியதன் பின்னர் 9 ஆம் திகதி மாலையில் நான் அரச தலைவராகப் பதவியேற்றகையோடு ரணில் விக்கிரமசிங்கவுடன் நாடாளுமன்றத்தில் 47 உறுப்பினர்கள் மாத்திரமே இருந்த பின்னணியிலும் அவரை நான் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்தினேன். அந்த உன்னதமான நல்லாட்சிக் கோட்பாடுகளையும், நோக்கங்களையும், எதிர்பார்ப்புகளையும் ரணில் விக்கிரமசிங்க நாசமாக்கினார் என்பதை என்னைப் போலவே நீங்களும் கடந்த சில ஆண்டுகளாகப் பெற்ற அனுபவங்களின் மூலம் அறிந்திருப்பீர்கள் என நான் நம்புகின்றேன். நாட்டில் ஊழலும் மோசடியும் தலைதூக்கின. ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் கூட்டுக்கட்சிகளும் அதாவது அந்தச் சமயம் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் என 49 தரப்புக்கள் எம்முடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. அதன்மூலம் நாம் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் ஏற்படுத்திக் கொண்ட எதிர்பார்ப்புகளும் மிகத் தூய்மையான உயரிய உன்னத குறிக்கோள்களும் மிக அப்பட்டமான முறையில் துவம்சம் செய்யப்பட்டதுடன் நாட்டில் ஊழலும் மோசடியும் தலைதூக்கின.

**ஐக்கியதேசியக் கட்சியின் முன்னைய தலைவர்களைப்போல அதன் இன்றைய தலைவர்களுக்கு நல்லறிவு கிடைக்கவேண்டும்**

சில தினங்களுக்கு முன் டி.எஸ்.சேனாநாயக்க ஞாபகார்த்த நிகழ்வில் வெளியிட்ட கருத்து உங்களுக்கு ஞாபகம் இருக்கும். டி.எஸ்.சேனாநாயக்காவின் அரசியல் நோக்கு, டட்லி சேனாநாயக்காவின் அரசியல் நோக்கு, ரணசிங்க பிரேமதாசாவின் அரசியல் நோக்கு ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியை ஒரு பலமிக்க, பெரிய அரசியல் கட்சியாக எவ்வாறு உருவாக்கின என்பதையும் நமது கலாசாரம், நாட்டுப்பற்றுமிக்க நமது உற்பத்திகள் உட்பட அனைத்தையும் எந்தளவு பாதுகாத்தன என்பதையும் நாட்டின் தனித்துவம், ஒருமைப்பாடு ஆகிய எமது உயரிய தன்மைகளை அந்த மூத்த தலைவர்கள் எந்தளவுக்குப் பாதுகாத்தார்கள், அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள் என்பதையும் நான் கூறினேன். ஆகையால் நான் இப்போதும் பிரார்த்திப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர்களுக்கு டி.எஸ், டட்லி, ஜே.ஆர்.ஜயவர்தன, பிரேமதாச ஆகியோர் கடைப்பிடித்த அந்த அரசியல் நோக்குகள்மிக்க, இன்றைய உலகுக்குப் பொருந்துகின்ற ஒரு சமூகத்தை உருவாக்கத்தக்க அறிவு கிட்ட வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

**இணைந்து செயற்படும் தன்மை ரணிலிடம் இல்லை அது அரசியல் நெருக்கடியை உருவாக்கியது**

ரணில் விக்கிரமசிங்க பொதுவாகவே கூட்டுச் செயற்பாடற்ற, தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்கும் மிகவும் முரட்டுத்தனமான பிடிவாதமிக்க முறையிலேயே அரசில் செயற்பட்டார். அவரின் அந்தச் செயற்பாடுகள் ஒரு பெரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கின. கூட்டுத் தீர்மானங்கள், கலந்துரையாடல்கள், கருத்துப்பரிமாறல்கள் அற்ற நிலையில் அவரின் நெருங்கிய சகாக்களுடன் மாத்திரம் கலந்தாலோசித்து முடிவுகளை எடுத்ததன் காரணமாக ஒரு நாடு என்ற வகையில் எமக்குத் துரதிஷ்டமான நிலை ஏற்பட்டது. இங்கே இன்னொரு விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் கொள்கை ரீதியிலான அரசியல் பிளவையும், வேறுபாட்டையும் முரண்பாடுகளையும் நான் தெளிவாகக் கண்டேன். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கைக்கும் எனது அரசியல் கொள்கைக்கும் இடையில் கொள்கை ரீதியிலான மோதல் ஏற்பட்டது. அது மாத்திரமன்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் இடையில் பெரியளவில் கலாசார வேறுபாடுகளையும் நான் கண்டேன். அவருக்கும் எனக்கும் இடையிலான இந்த அரசியல் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள், அரசியல் கலாசார ரீதியிலான வேறுபாடுகள், தனிநபர் சார்ந்த வேறுபாடுகள் ஆகிய அனைத்தும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான நெருக்கடிகள் மிக மோசமாகுவதற்கு காரணமாக அமைந்தன. நான் ஏனைய மூத்த தலைவர்களுடன் கூடியிருந்த காலங்களில் நாம் இணைந்து செயற்படுவோம். கூட்டாகச் செயற்படுவோம். நாம் எடுக்கும் தீர்மானங்களைக் கலந்துரையாடி மேற்கொள்வோம்.

நல்லாட்சிக் கோட்பாடுகளை அடையும் வகையில் நாம் செயற்படுவோம் என நான் அவரிடம் பல தடவைகள் எடுத்துக் கூறினேன். எனினும் எனக்கு வாக்களித்த மக்களின் அந்த உன்னதமான அபிலாஷைகளை அவர் கவனத்தில் கொள்ளவில்லை. அவர் அப்படி நடந்ததையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன்.

### உருவாகி மூன்று மாதங்களுக்குள் நல்லாட்சியை மத்திய வங்கி ஊழல் சிதைத்துவிட்டது

இந்த நாட்டின் தலைமைத்துவத்தை நான் பொறுப்பேற்றது இந்த நாட்டை இலஞ்சம், ஊழல் அற்ற நல்லாட்சிக் கோட்பாடுகளை முதன்மைப்படுத்திய புத்தாக்கமிக்க மிகச் சிறந்ததோர் அரச நிர்வாகத்தை நிலை நாட்டுவதற்கே ஆகும். கடந்த கால அனுபவங்களுடன் தற்கால, எதிர்காலச் சவால்களை அறிந்து எமது நாட்டின் எதிர்காலத்தை மிகவும் உயரிய வகையில் எதிர்காலக் குறிக்கோள்களை அடையும் அதேவேளை, ஆன்மீக நல்லொழுக்கமிக்க சிறந்த கோட்பாடுகளுடன் முதன்மைப்படுத்திச் செயற்படுவதற்கு நான் தொடர்ந்தும் முயற்சித்து வந்ததுடன், அதற்காகப் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன். அநேகமான நேரங்களில் நான் சில அடிகள் பின்வாங்கியும் இருக்கின்றேன். கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் சில சமயங்களில் நான் சினத்துடன் கருத்துத் தெரிவித்ததை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அவ்வாறான வேளைகளில் நீங்கள் என்னைக் குறை கூறியதையும் நான் அறிவேன். சில வேளைகளில் நான் முதிர்ச்சியடையவில்லை என்றும் உணர்ச்சிவசப்படுவதாகவும் கூறியிருக்கின்றீர்கள். ஆயினும் அரசின் அந்தரங்கக் கலந்துரையாடல்களின் போதும் அமைச்சரவைக் கூட்டங்களிலும் கட்சித் தலைவர்களின் கூட்டங்களிலும் நான் எந்த அளவு பொறுமையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டேன் என்பதை எனது மனசாட்சி மட்டுமே அறியும். அந்த அர்ப்பணிப்பை நாட்டுக்காவும் நாட்டு மக்களுக்காகவுமே நான் செய்தேன். இருந்தபோதும் நீங்களும் ஏற்கனவே அறிந்தவாறு அந்த உன்னத குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி உருவாக்கிய இந்த நல்லாட்சி கருப்பொருளை, இந்த அரசை உருவாக்கி மூன்று மாதங்கள் முடிவதற்கு முன்னரே சிதைத்து விட்டார்கள். மத்திய வங்கியின் மகா கொள்ளை நாட்டைப் பெரிய பொருளாதாரப் பாதாளத்தில் தள்ளிவிட்டது. இலங்கை வரலாற்றில் அரச சொத்துக்கள் மீதான இத்தகைய கொள்ளையடிப்பை நாம் கேட்டுக்கூட இருக்கவில்லை. அந்தத் தூய்மையான நல்லாட்சி அரசியல் கோட்பாடுகள் இலஞ்ச, ஊழலற்ற அரச நிர்வாகத்தை முன்னெடுப்பதாக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை வெளிப்படையாகவே மீறினார்கள்.

### மத்திய வங்கி ஊழல் விடயத்தில் ரணில் செயற்பட்ட விதம்

அந்த மத்திய வங்கிச் சூறையாடல் சம்பந்தமாக நாட்டில் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள், எதிர்க்கட்சி, அரசியல் கட்சிகளின் சமூகத்துக்குப் பொறுப்புக்கூறும் பொது அமைப்புகள் ஆகியன குரல் எழுப்பியபோது அரசுக்குள் எந்தளவு பெரிய நெருக்கடியான நிலை ஏற்பட்டது என்பதை நான் அறிவேன். அந்தச் சம்பவத்துடன் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எவ்வாறு செயற்பட்டார்? அவரது நடத்தை எவ்வாறானதாக இருந்தது? என்பது பற்றி இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது. மிகுந்த பதற்றத்துடனேயே அவர் செயற்பட்டார். அந்தச் சமயம் மத்திய வங்கியின் பணிக்குழாமைச் சந்திப்பதற்காக நான் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்த போது ரணில் விக்கிரமசிங்க எனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு ஓடி வந்து மிகுந்த பதற்றத்துடன் அவர் என்னிடம் கூறினார். மத்திய வங்கி எனது கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றது. அதாவது வர்த்தமானிமூலம் எனது கட்டுப்பாட்டுக்குக் கீழேயே இருக்கின்றது அதனால் நீங்கள் எதற்காக மத்திய வங்கிக்குப் போக வேண்டும் என என்னிடம் வினவினார். அப்போது நான் அவரிடம் உங்களுக்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்த வங்கி கையளிக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை ஆனால் நான் இந்த நாட்டின் அரச தலைவர் அல்லவா எனக்கு அங்கு செல்வதற்கு உரிமை இருக்கின்றதல்லவா எனக் கூறினேன். அவ்வாறு கூறிவிட்டு இன்னும் சொற்ப நேரத்தில் மத்திய வங்கிக்குச் செல்லப் போகிறேன் எனக் கூறினேன். அத்தோடு அவர் எனது வீட்டைவிட்டு வெளியேறினார்.



> 2015ஆம் ஆண்டு எனது உயிரைப் பணயம் வைத்து அன்று பெற்றுக்கொண்ட அந்த அரசியல் வெற்றியைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஒழுக்கமிக்க அரசியலுக்கு ஒவ்வாத அரசியல் செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்க பிரவேசித்தார். இலங்கையின் எதிர்காலத்தை அவர், அவருடன் நெருங்கிச் செயற்படும் மக்களின் உணர்வுகளை உணராத ஒரு சில செல்வந்தர்கள் குழுவினரின் களியாட்டச் செயற்பாடுகளாக்கிக் கொண்டார். குறிப்பாக 'நல்லாட்சி அரசு' எனும் கருப்பொருளை ரணில் விக்கிரமசிங்க மிக வெளிப்படையாகவே முறைகேடாகக் கையாண்டார்.

சொற்ப நேரத்தின் பின் நான் மத்திய வங்கியைச் சென்றடைந்தபோது மத்திய வங்கி நிதி மோசடி காரணமாக விடுமுறையில் இருந்த மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் என்னை வெற்றிலை கொடுத்து வரவேற்பதற்கு மத்திய வங்கி வாசலில் காத்திருந்தார். அவர் எவ்வாறு அங்கே வந்தார் என நான் ஆச்சரியப்பட்டேன்.

அப்போது அவர்கள் மிகவும் பதற்றத்துடன் நடந்துகொண்ட விதத்தையும் பதற்றமடைந்திருந்த அவர்களது மனோ நிலையையும் அப்போது நான் தெளிவாகக் கண்டேன். அந்தச் சம்பவத்தால் நாட்டில் பெரியளவு பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது. அதற்குத் தீர்வு காணும் வகையிலும் மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்கும் வகையிலுமே அரச தலைவர் ஆணைக்குழுவை நியமித்தேன்.

அரச தலைவர் ஆணைக்குழுவை நியமித்து அதன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் என்னைக் குறை கூறியவாறு ஏன் ஆணைக்குழுவை நியமித்தீர்கள் என என்னிடம் வினவினார்கள். அப்படிச் செய்ததன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நான் அவமதிப்பை ஏற்படுத்தினேன் என்பதே அவர்களது எண்ணமாக இருந்தது. அதற்கு நான் அந்தச் சம்பவத்தின் உண்மையை அறிவதற்கும் மக்களின் கோரிக்கைக்குச் செவிமடுக்கவுமே நான் இந்த ஆணைக்குழுவை நியமித்தேன் எனக் கூறினேன். மத்திய வங்கியின் அந்தச் சம்பவமே பொருளாதார ரீதியில் இன்னும் எம்மால் தலை தூக்க முடியாத மிக மோசமான பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்திய காரணியாக இருக்கின்றது.

### எனது அதிகாரத்தைக் கையிலெடுத்துச் செயற்பட்டார் நன்றியுடையவனாதலால் மௌனமாக இருந்தேன்

இந்த வருடம் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் கிடைத்த பெறுபேறுகளை அரசின் குறைபாடுகளைத் திருத்திக் கொள்ள மக்கள் வழங்கிய ஒரு தீர்ப்பாகவே நான் கருதுகின்றேன். ஆகையால் அதன்போது ரணில் விக்கிரமசிங்கவையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களையும் அழைத்து நாங்கள் மூன்று வருடங்களாக மேற்கொண்ட செயற்பாடுகளைப் பற்றி மக்கள் இப்போது தமது தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். நாங்கள் இப்போது எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறினேன். அத்தோடு தலைமை அமைச்சரிடம் நீங்கள் எனது அதிகாரத்தையும் கையிலெடுத்துச் செயற்பட்டீர்கள் என்னை அதிகாரத்தில் அமர்த்தும் செயற்பாட்டுக்கு நீங்கள் முன்னின்று உழைத்ததால் அதற்கு நன்றி உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் மௌனமாக இருந்தேன் எனக் கூறினேன். அந்த நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்ற உயரிய பண்பினை நான் பின்பற்றிய தால் ஒருபுறத்தில் நாட்டுக்குப் பெரிய தீங்கு விளைவிக்கப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் மறுபுறத்தில் ரணில் விக்கிரம சிங்கவுக்குத் தான் விரும்பியவாறு சில வேளைகளில் அரச தலைவர் அதிகாரங்களைக் கூடப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவருக்கு நான் அதிகாரத்தைக் கொடுத்திருந்தேன். இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? கடந்த மூன்று வருட காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்கள் காரணமாக மிக மோசமான அவல நிலையே ஏற்பட்டிருக்கின்றது. எதிர்வரும் காலங்களில் அவ்வப்போது அந்த விடயங்க ளைப்பற்றி நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என நான் எண்ணியிருக்கின்றேன்.

### கொலைச் சதியே பதவி மாற்றத்துக்கு முக்கிய காரணி

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்துவதற்கும் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதற்குமான முடிவை நான் எடுத்ததற்கான மிக முக்கியமான காரணத்தை நான் உங்களுக்கு விளக்கிக் கூற விரும்புகின்றேன். கடந்த சில தினங்களாக ஊடகங்களில் தோன்றிய நாமல் குமார எனும் நபர் என்னையும் கோத்தாபய ராஜபக்சவையும் கொலை செய்யவிருக்கும் சதித்திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்டார்.

அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நான் பணித்தேன். ஆனால் பொலிஸ்மா அதிபர் முதலில் அந்த விசாரணைகளைக் குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவினரிடம் கையளித்திருக்கவில்லை. பொலிஸின் வேறொரு பிரிவினரிடமே அதைக் கையளித்திருந்தார். அதன்போது அந்த விசாரணைகளின் மீது நம்பிக்கை கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதை நான் உணர்ந்தேன். கொலைச் சதித் திட்டங்களைப் பற்றி விசாரணை ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலங்கள் கடப்பதற்கு முன்பாகவே பொலிஸ்மா அதிபர் அந்தத் தகவல்களை வெளியிட்ட நபர் சாட்சியமாகக் கையளித்த ஒலிநாடாக்கள் சந்தேகமானவை என அறிவித்தார். நாட்டின் தலைவரைக் கொலை செய்யும் சதித்திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்ட ஒலிநாடா மீது எந்தவிதமான தொழிநுட்பவிசாரணையையும் மேற்கொள்ளாது அந்த ஒலிநாடா சந்தேகத்துக்குரியது எனக்கூறும் அளவுக்குப் பொலிஸ்மா அதிபரின் அந்தக் கீழ்த்தரமான செயற்பாடு இருந்தது. அது ஒரு பொலிஸ்மா அதிபருக்கு உகந்ததா என மதிப்புடன் கேட்டுக் கொள்கின்றேன். இந்தச் சதி பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் புலனாய்வுப் பிரிவினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் அரசின் புலனாய்வுக் குழுக்களும் இதுவரைப் பெற்றுக்கொடுத்திருக்கின்ற தகவல்களின்படி இந்தச் சதித்திட்டம் மிகப் பாரதூரமானதாகவே இருக்கின்றது. நாட்டு மக்களுக்கு இதுவரை அறியக் கிடைக்காத பெருமளவு தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அரசின் அமைச்சர் ஒருவர் பற்றிய தகவல்களையும் இந்த நபர் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

அதேநேரத்தில் இந்த விசாரணைகளுக்குப் பாதகமான முறையில் பலவிதமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்புமிக்க சில அதிகாரிகள் இந்த விசாரணைகளின் முக்கியமான திருப்புமுனைகளில் கைநழுவிச் செல்லும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் இந்த அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்குப் பின்னால் என்னைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் பற்றிய மிக முக்கியமான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில் என் முன் எஞ்சியிருந்த ஒரே தீர்வு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை அழைத்து அவரைத் தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்திப் புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும்.

### அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்

இந்தப் புதிய அரசுடன் இணைந்துகொள்ளுமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற மதிப்புக்குரிய 225 அங்கத்தவர்களுக்கும் வெளிப்படையாக நான் அழைப்பு விடுக்கின்றேன். மிகத் தூய்மையான எண்ணத்துடன் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் அரசியல் நெருக்கடி இப்போது பெருமளவு தணிந்திருக்கின்ற நேரத்தில் எமது நாட்டின் எதிர்காலத்துக்காக நான் எடுத்திருக்கும் இந்தத் தீர்மானத்துடன் உங்களதும் எனதும் இந்த உன்னத தாய் நாட்டுக்காக அந்த உன்னத குறிக்கோளை அடைந்து ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி, மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்தி, ஊடக சுதந்தி ரத்தை உறுதிப்படுத்தி, மக்களின் வரப்பிரசாதங்களைப் பலப்படுத்தி வளமான பொருளாதாரம் மிக்க பண்புமிக்க மிகவும் ஒழுக்கமான சமூகத்தைக் கட்டியெழுப்ப இந்தப் புதிய அரசுக்கு ஒத்துழைப்புத் தருமாறு நான் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

### ரணில் பொறுப்பேற்க வேண்டும்

கடந்த கால கசப்பான அனுபவங்களைப் பற்றி நான் இங்கே மீண்டும் குறிப்பிட வேண்டும். அர்ஜுன் மகேந்திரனை இந்த நாட்டுக்கு அழைத்துவந்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வேண்டிய பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்குக் காரணம் யாவரும் அறிந்தவாறு அர்ஜுன் மகேந்திரன் ரணில் விக்கிரமசிங்கவின் மிகவும் நெங்கிய நண்பன் என்பதனாலேயே ஆகும்.

(16ஆம் பக்கம் பார்க்க...)



## கால்பந்துக் கழக உரிமையாளர் உட்பட நால்வர் உலங்கு வானூர்தி வெடித்துச் சிதறியதால் சாவு

லண்டன்.ஒக்.30
இங்கிலாந்து லெய்செஸ்டர் சிட்டி அணியின் உரிமையாளர் ஸ்ரீவதன பிரபா உலங்கு வானூர்தி வெடித்துச் சிதறியதால் சாவடைந்திருக்கின்றார். இந்தச் சம்பவம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இங்கிலாந்தில் உள்ள பிரபல கால்பந்து விளையாட்டுக் கழகங்களில் ஒன்று லெய் செஸ்டர் சிட்டி. 2015 2016ம் ஆண்டு நடந்த பிரிமியர் 'லீக்' போட்டியில் அந்தக் கழகம் சம்பியன்' பட்டம் பெற்றது. லெய்செஸ்டர் சிட்டி எப்.சி. அணியின் உரிமையாளர் விச்சை ஸ்ரீவதன பிரபா. தாய்லாந்தைச் சேர்ந்த செல்வந்தரான இவர் 2010ஆம் ஆண்டு அந்தக் கால்பந்துக் கழகத்தை விலைக்கு வாங்கினார். லெய்செஸ்டர்சிட்டி வெஸ்ட் ஹாம் கிளப் அணிகள் மோதிய போட்டி நேற்று நடந்தது.

இந்த ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிந்தது. இந்தப் போட்டி முடிந்த சிறிது நேரத்தில் லெய்செஸ்டர் சிட்டி அணியின் உரிமையாளர், கிங்பவர் விளையாட்டரங்கில் இருந்து உலங்கு வானூர்தியில் புறப்பட்டார். புறப்பட்ட சில வினாடிகளிலேயே அது விபத்துக்குள்ளானது. விளையாட்ட ரங்குக்கு முன்பாக உள்ள தரிப்புப் பகுதியில் அது விழுந்து வெடித்துத் தீப்பற்றி எரிந்தது. இதில் விச்சை ஸ்ரீவதன பிரபா சாவடைந்தார் அவருடன் மேலும் 4 பேர் சாவடைந்தனர்.

உலங்கு வானூர்தி வெடித்துச் சிதறியதில்விளையாட்டரங்குக்கு முன்பாகப் பெரும் நெருப்புக் கோளம் ஏற்பட்டது. போட்டியைப் பார்த்து விட்டு வெளியேறிக் கொண்டு இருந்த கால்பந்து இரசிகர்கள் இதை பார்த்து பீதி அடைந்து ஓடினார்கள். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



## பறக்க ஆரம்பித்த 13ஆவது நிமிடத் இந்தோனேசியாவில் பெரும் சோக



அண்மைக்காலமாக இந்தோனேசிய இயற்கைப் பேரிடர்கள் பலவற்றையும் எதிர்கொண்டு பல இழப்புக்களைச் சந்தித்து வருகின்றது. சுமத்ரா தீவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மாணவர்கள் உட்பட 22 பேர் பரிதாபமாக சாவடைந்திருந்தனர்.

பாலுத்தீவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தாலும் அதன் பின்னர் ஏற்பட்ட சுனாமியாலும் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்திருந்தனர். பின்னர் அங்குள்ள தீவு ஒன்றில் எரிமலை வெடித்துச் சிதறியதில் மக்கள் பாதிக்கப்பட்டனர். இயற்கை அழிவுகளின் வரிசையில் இப்போது வானூர்தி விபத்து நடந்திருக்கிறது.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து விமானிகள், பயணிகள் அடங்கலாக 188பேருடன் பயணத்தை ஆரம்பித்த குறித்த வானூர்தி கடலில் விழுந்த செய்தி வெளியானதைக் கேட்ட வானூர்திப் பயணிகளின் உறவினர்கள் சோகத்தில் உறைந்தனர்.

இந்த வானூர்தி ஜகார்த்தாவில் இருந்து நேற்றுக் காலை 6.20 மணிக்குப் புறப்பட்டு வானில் பறந்த 13 நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்திருக்கிறது. வானூர்திப் பயணத்தின்படி காலை 7.20 மணிக்கு பினாங் நகரை அந்த வானூர்தி அடைந்திருக்க வேண்டும். ஆனால், வானூர்தி கடலில் விழுந்து மூழ்கியிருக்கிறது. இதை வானூர்தி நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர் யூசுப் லத்தீப் செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

வானூர்திகடலில்விழுந்ததையடுத்து பயணிகளைக் காப்பாற்றும் வகையில் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தியுள்ளது இந்தோனேசிய அரசு. ஜகார்த்தாவின் வடகடல்பகுதியில் உள்ள தன்ஜுங் பிரியோக் எனும் பகுதியில் வானூர்தியின் உடைந்த பாகங்கள் மிதப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மீட்புப்படையினர் மற்றும் இந்தோனேசிய கடற்படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். மேலும், விமானம் விழுந்த பகுதியில் இருக்கும் கப்பல்களை மீட்புப்பணிக்கு பயன்படுத்தவும் இந்தோனேசிய அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### லயன் எயார்லைன்ஸ் வானூர்திச் சேவை


அதிகத் திறன் வாய்ந்த போயிங் 737 மேக்ஸ் வகை வானூர்திச் சேவை 2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. லயன் எயார்லைன்ஸின் மலேசியப் பிரிவான மலிண்டோ எயார், பன்னாட்டுச் சேவையை முதலில் தொடங்கியது. இந்தோனேசியாவின் நவீனமான மற்றும் மிகப்பெரிய எயார்லைன்ஸ் சேவைகளில் ஒன்று லயன் எயார்லைன்ஸ் ஆகும்.

### இந்தோனேசியாவில் தொடர் சோகம்

2013ஆம் ஆண்டில் போயிங் 737 800 ரக ஜெட் வானூர்தி, பாலி தீவு அருகே தரையிறங்கும்போது கடலில் விழுந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது வானூர்தியில் இருந்த 108 பேர் உயிர் பிழைத்ததும் நினைவு கூறத்தக்கது. சமீபத்தில் இந்தோனேசியாவில் மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டு, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அலையில் சிக்கி 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சாவடைந்த சோகம் நிகழ்ந்தது. அந்தச் சோகம் மறைவதற்குள் அடுத்த துயரச் சம்பவம் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அயர்லாந்தின் அதிபராக மீண்டும் மிக்கேல் ஹிக்கின்ஸ்!

டப்ளின்.ஒக்.30
அயர்லாந்தின் புதிய அதிபராக மிக்கேல் ஹிக்கின்ஸ் 2ஆவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார். அயர்லாந்து நாட்டில் கடந்த 26ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் அதிபர் மிக்கேல் ஹிக்கின்ஸ் மீண்டும் போட்டியிட்டார். சுயேச்சையாகப் போட்டியிட்ட அவரை எதிர்த்துப் பீட்டர் கேசி, சியான் கலாகெர் உள்ளிட்ட 5 பேர் போட்டியிட்டனர். இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் அதிபர் மிக்கேல் ஹிக்கின்ஸ் 55.8 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் தொடர்ந்து 2ஆவது முறையாகவும் அதிபராகத் தெரிவு



செய்யப்பட்டு இருக்கிறார். 1966ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு அதிபர் ஒருவர் தொடர்ந்து 2ஆவது முறை போட்டியிட்டது இதுவே முதல் முறை. அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் தொழில் அதிபரான பீட்டர் கேசி 23.25 சதவீத வாக்குகளையும், சியான் கலாகெர் 6.41 சதவீத வாக்குகளையும் பெற்றனர்.

அங்கு தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்பிலும் அதிபர் மிக்கேல் ஹிக்கின்ஸ்தான் முன்னிலை பெற்றிருந்தார். அவரை அயர்லாந்தில்உள்ள முக்கியமான 3 கட்சிகளும் ஆதரித்தன. அங்கு அதிபரின் பதவிக்காலம் 7 ஆண்டுகள் ஆகும். அந்த நாட்டின் சட்டப்படி ஒருவர் 2 முறைக்கு மேல் அதிபர் ஆக முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ். அமைப்பு தாக்குத

டமாஸ்கஸ்.ஒக்.30
சிரியாவில் ஐ.எஸ். ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிரிய அரச படையினர், குர்து இனப் போராளிகள் அடங்கலாக 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம் ஐ.எஸ். ஆயுததாரிகளும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அங்கு ஈராக் எல்லையில் டெயிர் அல் ஜோர் நகரையொட்டிய பகுதிகளில் 4ஆயிரம் வரையிலான ஐ.எஸ். ஆயுததாரிகள் பதுங்கி உள்ளனர். சிரிய அரச படையினருடன் அமெரிக்க கூட்டுப்படைகள் இணைந்து அவர்களை எதிர்த்துச் சண்டையிட்டு வந்தன. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமையன்றும், சனிக்கிழமையன்றும் சிரிய அரச படையினருக்கும், குர்து இனப் போராளிகளுக்கும் எதிராக ஐ.எஸ். ஆயுததாரிகள் கடுமையாகத் தாக்குதல் நடத்தினர். ஐ.எஸ். ஆயுததாரிகளின் இந்தத் தாக்குதலில் சிரிய அரச படையினர், குர்து இனப் போராளிகள் என எல்லாமுமாக 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





# ...டத்தில் கடலில் விழுந்த வானூர்தி
# ...ாகம் பயணித்த அனைவரும் சாவு

ஜகார்த்தா.ஒக்.30

இந்தோனேசியாவின் வானூர்தியான 'விமான் ஜேடி 610' பறக்க ஆரம்பித்த 13 நிமிடங்களிலே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்து, கடலில் விழுந்துள்ளது. இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து பினாங்கு நகருக்கு 'லயன் எயார்லைன்ஸ்' நிறுவனத்தின் 'விமான் ஜேடி 610' என்ற வானூர்தி நேற்றுக் காலை புறப்பட்டது. இந்த வானூர்தி 'போயிங் 737 மேக்ஸ் 8' வகையைச் சேர்ந்தது. இதில் பயணிகள், ஊழியர்கள் என எல்லாமாக 188 பேர் பயணித்த நிலையில், வானில் பறந்த 13நிமிடங்களில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை அது இழந்தது. அதைத் தொடர்ந்து வானூர்தி கடலில் விழுந்தது கண்டுபிடிக்கப்பட்டது.





# அளவுக்கு அதிகமாக மருந்தை வழங்கிய தாதி ஜேர்மனியில் 100பேரை கொன்ற சம்பவம்!

பெர்லின்.ஒக்.30

ஜேர்மனியில் நோயாளிகளுக்கு மருத்துவர்கள் பரிந்துரைக்கின்ற அளவிலும் அதிகமான அளவு, வீரிய சக்தி கொண்ட மருந்தைக் கொடுத்திருக்கிறார் தாதி ஒருவர். இதனால் 100 பேர்வரையில் சாவடைந்திருக்கின்றனர். இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜேர்மனியை சேர்ந்த தாதியான (ஆண்) நீல்ஸ் ஹேஜெல் (வயது41) ஓல்டன்பெர்க் மற்றும் டெல்மென் ஹார்ஸ்ட் நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் பணிபுரிந்தவர். இவர் தனது பணியின்போது நோயாளிகளுக்கு அளவுக்கு மீறி ஊசி மருந்து மற்றும் மாத்திரைகளைக் கொடுத்து வந்தார். அதில் பலர் உயிரிழந்துள்ளனர் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டில் டெல்மென் ஹார்ஸ்ட் மருத்துவமனையில் நோயாளிக்கு மருத்துவர் பரிந்துரைக்காத அளவுக்கு அதிகமான வீரிய சக்தி கொண்ட ஊசி போட்ட போதே இவர் கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கிறார். அதன் போது கைது செய்யப்பட்ட அவருக்கு 2008ஆம் ஆண்டில் 7ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப் பட்டது. இதற்கிடையே இவரது சிகிச்சையின் காரணமாக மேலும் பலர் உயிரிழந்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்படி டெல்மென் ஹார்ஸ்ட் மருத்துவமனையில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை 65 பேரும், ஓல்டன்பர்க் மருத்துவமனையில 35 பேரும் இவரால் உயிரிழந்தமை தெரியவந்தது. இந்தக் கொலைகள் குறித்து ஓல்டன்பெர்க் நகர நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது. உலகப் போருக்குப் பிறகு ஜேர்மனியில் நடந்த மிகப் பெரிய குற்றச் சம்பவமாக இது கருதப்படுகிறது.

# ...குதல் சிரியாவில் 70 பேர் சாவு




# ஜமாலின் உடல் எங்கே ?

அங்கரா ஒக். 30

சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கொலை செய்யப்பட்டமை உறுதியாகிவிட்ட நிலையில், அவருடைய உடலைத்தேடும் நடவடிக்கை தற்போது ஆரம்பித்துள்ளது. ஜமாலின் உடலைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி துருக்கி அதிபர் கேட்டுள்ளார். ஜமால் கொலை செய்யப்பட்டு அவருடைய தலையை, உடலை, கால்களைத் தனித்தனியே 3 பொதிகளாக்கி, கருப்பு நிறப் பைகளில் போட்டு கறுப்பு நிறக் கண்ணாடியில் மூடப்பட்டு ஒரு சிற்றூர்தியில் (வான்) ஏற்றப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கொலையுடன் சம்பத்தப்பட்ட முக்கிய சந்தேக நபரான 'கேர்ணல்' சலா மொகமட் அல் துபாய்ஜி தான் இந்தப்பொதி செய்யும் வேலையை மேற்கொண்டவர். கொலை நடந்த குறிப்பிட்ட அந்த அறையை அவர் சுத்தம் செய்திருந்த போதிலும் அதைச் சரியாகச் செய்யாத காரணத்தால் அங்கு கிடைத்த தடயங்களைத் துருக்கி பொலிசார் கைப்பற்றியுள்ளனர். அங்கு கைப்பற்றப்பட்ட தடயங்களின் அடிப்படையில் ஜமாலின் உடலைத் தேடும் பணி நடந்து வருகின்றது.





(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**மத்திய வங்கி மோசடி விவகாரம் தண்டனை வழங்குவதற்குப் 15வருடங்கள் எடுக்கும்!**

கடந்த சில வருடங்களாக நாட்டின் தேசிய கைத்தொழில் துறை நலிவடைந்து சென்றிருக்கின்றது. அவற்றை ஊக்குவிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் அரசிடமிருந்து போதுமான அளவு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. வெளிநாட்டு முதலீடுகளில் மாத்திரம் நம்பிக்கை வைத்து உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களையும், உள்நாட்டு வர்த்தகர்களையும் நலிவடையச் செய்யும் பொருளாதாரக் கொள்கையே முக்கியமாக இங்கே செயற்படுத்தப்பட்டது. இந்தப் பொருளாதாரக் கொள்கையின் குறைபாடுகள் ஒருபுறத்தில் இருக்க மறுபுறத்தில் இந்தப் பொருளாதாரத்தைச் சிதைத்த மேற்குறிப்பிட்ட மத்திய வங்கிக் கொள்ளையின் குற்றவாளிகளுக்குத் துரிதமாகத் தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்க இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கான சட்டம் மீதான திருத்தங்கள் தொடர்பில் கடந்த வாரம் நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் மூலம் என்ன நடந்தது என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தீர்களா? என நான் உங்களிடம் வினவ விரும்புகின்றேன். சட்ட நிபுணர்கள், சட்டமா அதிபர் திணைக்களம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட இந்த விசாரணைகளை நடத்திய அனைத்து அதிகாரிகளும் இந்த வருட முற்பகுதியிலேயே இப்போது இருக்கின்ற சட்டதிட்டங்களுக்கு அமைய மத்திய வங்கிக் கொள்ளையின் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டுமாயின் அதற்குக் குறைந்தபட்சம் 15 வருடங்களுக்கு மேல் செல்லும் எனத் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்கள் கொள்ளையடித்த பணத்தை மீளப் பெறுவதற்கும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கும் 15 வருடங்களுக்கு முன் இயலாத காரியம் என்பதுகுறித்துச் சட்ட நிபுணர்கள் எனக்கு விளக்கம ளித்திருக்கின்றார்கள். அதற்குத் தீர்வாக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியன இந்த விசாரணையை ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்து மக்களின் இந்தப் பெருந்தொகைப் பணத்தை மீண்டும் அரசு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஒரு வருடத்துக்குள் விசாரணைகளை நடத்தி முடித்துப் பெறுபேறுகளைப் பெறுவதற்கு இயலும் வகையில் இலஞ்ச, ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களைப் பற்றி எமக்கு அறியத் தரப்பட்டது. குறிப்பிட்ட அந்த மாற்றங்களைச் செய்து இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பே அரச தலைவர் அலுவலகம் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அதை அனுப்பி வைத்தோம்.

இவ்வாறான அனைத்து செயற்பாடுகளுக்கும் எனக்கிருந்த ஒரே மாற்றுவழி மகிந்த ராஜபக்சவைப் புதிய தலைமை அமைச்சராக நியமித்துப் புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும். மகிந்த ராஜபக்சவைப் புதிய தலைமை அமைச்சராக்கிப் பதவியில் அமர்த்தி புதிய அரசை அமைப்பது இலங்கை அரசியல் யாப்புக்கு முரணான செயலாகுமென ரணில் விக்கிர மசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்துகின்றது. என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானமானது சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளின்படி அரசியல் யாப்புக்கு அமைவாக எந்தவித முரண்பாடுகளும் அற்ற விதத்திலேயே பதவிப் பிரமாண மும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மையும் புதிய அரசை உருவாக்குவதும் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த செயற்பாடுகள் அரசியல் யாப்புக்கு முரனானவை என்ற குற்றச்சாட்டை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

ஐந்து மாதங்கள் கடந்தும் அவை இன்னும் நடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த ஆவணம் ச்பாநாயகர் அலுவலகத்தின் பெட்டிகளுக்குள் சென்றுவிட்டது. இதைப்பற்றி நான் மிகத் தீவிரமாக விசாரித்தேன். இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களிடமும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடமும் வினவினேன். அதற்கமைய கடந்த வாரம் நாடாளுமன்றத்தின் முன் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சட்டத் சீர்திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

ஆயினும் அதற்கான நாடாளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொடுப்பதைத் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டிருக்கின்றது. அவ்வாறு பிற்போடப்பட்டது ஏன்? எவரின் தேவைக்காக? எவரின் தலையீட்டால்? இதனால் பொதுமக்களுக்குச் சொந்தமான இந்தப் பெருந்தொகைப் பணம் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் கிடைக்காது போகின்றது.

குற்றாவளிகளுக்குத் தண்டனை வழங்க 15 முதல் 20 வருடங்கள் வரை செல்லும். இந்தச் சீர்திருத்தம் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டதன் நோக்கம் இதுவே.

**ஊழல் நிறைந்த கொடுக்கல் வாங்கலில் ஈ.ஏ.பி. நிறுவனம்**

கடந்த காலங்களில் ஈ.ஏ.பி. நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் பற்றிய ஒரு சம்பவத்தை நீங்கள் ஊடகங்களில் கண்டிருப்பீர்கள். அந்த நிறுவனம் வெளிநாட்டு வர்த்தகர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விலைமனுக் கோரல் இல்லாத ஊழல் நிறைந்த ஒரு கொடுக்கல் வாங்கலாகவெ ஈ.ஏ.பி. நிறுவனத்தின் செயற்பாடுகள் இருக்கின்றன. இதைப் பற்றியும் எதிர்வரும் காலங்களில் விரிவான விசாரணைகளை நடத்த எண்ணியிருக்கின்றேன். பெறுமதி மிக்க சிறப்பு விலைமனுக் கோரல்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. கட்டட நிர்மாணப் பணிகளும் விலைமனுக் கோரலின்றி கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வில்லமனுக் கோரல்கள் அற்ற விதத்தில் அமைச்சரவைக்கு அவசரமான ஆவணங்களாக சமர்ப்பிக்கப்பட்டு அவை மீதான எதிர்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாது இந்தப் பெரிய நிர்மாணப் பணிகள் அந்த நிறுவனங்க ளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கண்டி அதிவேக வீதி அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

**ரணிலின் பொருளாதார, அரசியல் கொள்கைகளை அப்புறப்படுத்த வேண்டும்**

கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட காணி பற்றிய சிறப்பு விதிமுறைகள் சட்டம் மற்றும் காணி வங்கியை ஸ்தாபிப்பதற்கான சட்டத்துக்கு நான் எனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து அவற்றைப் பிற்போட்டேன். அமைச்சரவையில் பெரும்பாலும் அமைச்சர்கள் இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றார்கள்.

கடந்த வாரம் முன்வைக்கப்பட்ட காணிகள் பற்றிய இந்தச் சிறப்புச் ஏற்பாடுகளைக் கொண்ட சட்டம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுமாயின் இந்த நாட்டின் அனைத்து நிலங்களையும் எந்தவொரு தங்கு தடைகளுமின்றி வெளிநாட்டு வர்த்தகர்களால், சொந்தமாகவே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். டி.எஸ்.சேனாநாயக்க, காமினி திசாநாயக்க, பண்டாரநாயக்க ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றங்கள் ஒட்டுமொத்தமாகவே இதனால் அழிந்துவிடும். ரணில் விக்கிரம சிங்கவின் பொருளாதார மற்றும் அரசியல் கொள்கையின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட இந்த நாட்டின் காணி உரிமை பற்றிய இந்தச் சிறப்புச் சட்ட ஏற்பாடுகளை முழுமையாக நாம் அப்புறப்படுத்த வேண்டும்.

**ரணிலின் முரட்டுத்தனமான தீர்மானங்களே அனைத்துக்கும் காரணம்**

அதேபோன்று இங்கு இன்னொரு விடயத்தையும் நான் குறிப்பிட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க வால் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பொருளாதார முகா மைத்துவ சபை பெரிய ஊழல்களைக் கொண்டதாகும். அதை நீக்கம் செய்வது பெரும் சவாலாகவே இருந்தது. இருப்பினும் கடும் முயற்சியின் பின்னர் அதை நான் நீக்கம் செய்தேன். அந்தச் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் ஊழல் மிக்கவையாக இருந்தன. அதற்கான ஒரு மாற்றுத்திட்டமாகவே நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யும் வகையில் நான் தேசிய பொருளாதார சபையை உருவாக்கினேன். அந்தத் தேசிய பொருளாதார சபையைப் பலவீனப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்.

அந்தப் பொருளாதார சபைக்கு நியமிக்கப்பட்ட பொருளாதார நிபுணருக்கான மாதாந்தக் கொடுப்பனவு உலக அங்கீகாரத்தைப் பெற்ற எம்முடன் தொடர்புகளை வைத்திருக்கும் சிறப்புப் பன்னாட்டு நிதி நிறுவனம் மூலமே வழங்கப்பட்டது. அந்தப் பன்னாட்டு நிதி நிறுவனம் பெற்றுக் கொடுத்து வந்த மாதாந்தக் கொடுப்பனவு ரணில் விக்கிர மசிங்க அந்த நிறுவ னத்துக்குப் பெற்றுக்கொடுத்த ஆலோசனைக்கமைய நிறுத்தப்பட்டது. அவ்வாறு தேசிய பொருளாதார சபையைப் பலவீனப்படுத்துவதற்கும் அதன் செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தன்னாலான அனைத்தையும் அவர் செய்து வந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் முரட்டுத்தனமான தீர்மானங்களே இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாக அமைந்தன என்பதை நான் தெளிவாகக் கூற வேண்டும்.

**நான் எடுத்த தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது அல்ல**

இவ்வாறான அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எனக்கிருந்த ஒரே மாற்றுவழி மகிந்த ராஜபக்சவைப் புதிய தலைமை அமைச்சராக நியமித்துப் புதிய அரசை அமைப்பது மாத்திரமே ஆகும். மகிந்த ராஜபக்சவைப் புதிய தலைமை அமைச்சராக்கிப் பதவியில் அமர்த்தி புதிய அரசை அமைப்பது இலங்கை அரசியல் யாப்புக்கு முரணான செயலாகுமென ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்துகின்றது. என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானமானது சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளின்படி, அரசியல் யாப்புக்கு அமைவாக, எந்தவித முரண்பாடுகளும் அற்ற விதத்திலேயே பதவிப் பிரமாணமும் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மையும் புதிய அரசை உருவாக்குவதும் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்தச் செயற்பாடுகள் அரசியல் யாப்புக்கு முரனானவை என்ற குற்றச்சாட்டை நான் முழுமையாக நிராகரிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் இன்று நிலவுகின்ற அரசியல் நிலைமையின்படி இந்த நாட்டின் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை, வான்படை, படைத்தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பு எனக்குப் பெற்றுத்தரும் ஒத்துழைப்பைக் கொண்டு நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பலப்படுத்தி ஜனநாயகக் கட்டமைப்பைப் பலப்படுத்தி நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை இலகுவாக முன்னெடுப்பதற்கு வசதியளிக்கும் வகையில் இந்த அனைத்துத் தரப்புகளும் அவர்களது கடமைகளை முன்னெடுத்து வருவதையிட்டு அந்த அனைவருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஐக்கியதேசியக் கட்சியினரின் அர்ப்பணிப்புக்களை நினைவுகூர்கிறேன் நல்ல தலைவரைப் பெறுவீர்கள் என்று நம்புகின்றேன்**

எனது இந்த உரையைப் பூர்த்தி செய்யும் நேரத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் என்னை அரசதலைவராக நியமிப்பதில் பெரியளவிலான அர்ப்பணிப்புகளைச் செய்தார்கள் என்பதை நினைவு கூரும் அதே நேரம், இந்தத் தாய் நாட்டின் சுபீட்சத்துக்காக அன்று நாம் ஏற்படுத்திக் கொண்ட குறிக்கோள்களை அடைய நாம் அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் எனக் கூறிக்கொள்வதுடன் உங்களுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நன்நோக்குமிக்க தேசப்பற்று மிக்க நாட்டின் சாதாரண குடிமகனின் வேதனைகளை உணர்கின்ற சேனாநாயக்க, ஜெயவர்த்தன, பிரேமதாச ஆகியோரின் தூரநோக்கையும் குறிக்கோள்களையும் பாராட்டுகின்ற ஒரு தலைவரை எதிர்காலத்தில் நீங்கள் பெறுவீர்களாயின் நாங்கள் அனைவரும் எதிர்பார்க்கின்ற அந்த உன்னத குறிக்கோளை அடைய முடியும் என நான் நம்புகின்றேன். ஆகையால் எனது நாட்டுக்காகவும் எனது அன்புக்குரிய மக்களுக்காகவும் நான் மேற்கொண்ட இந்த அரசியல் தீர்மானத்தால் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்துச் சுபீட்சமான பொருளாதாரத்துடன் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப உயரிய ஆன்மீக சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவோம் எனக்கூறிக் கொள்வதுடன் அதற்காக நாட்டு மக்களையும், அனைத்து அரச ஊழியர்களையும், சகல அரசியல்வாதிகளையும், மதிப்புக்குரிய மகா சங்கத்தினரையும் ஏனைய மதத் தலைவர்களையும், மிகுந்த கௌரவத்துடன் அழைப்பதுடன் இந்தப் பணிகளை இனிதே நிறைவேற்றுவதற்கு உங்களது உத்துழைப்பையும் ஆசீர்வாதத்தையும் நல்குமாறு மிகுந்த கௌரவத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

# உழைத்து வாழவேண்டும்




சந்திரவனக் காட்டுப் பகுதி மழையின்றி வறண்டு போனது. காடு வளம் பெறும் என்று காத்திருந்த முயலுக்கும் பச்சோந்திக்கும் நம்பிக்கை போய்விட்டது.
இரண்டும் உணவின்றித் தவித்தன. இனியும் இங்கே வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்துகொண்டன.
எனவே வேறு செழிப்பான பகுதிக்குப் போய் வசிக்கலாம் என்று தீர்மானித்து, இரண்டும் புறப்பட்டன. வெகுதூரம் பயணித்த பிறகு வழியில் ஒரு குரங்கைச் சந்தித்தன. முயலும் பச்சோந்தியும் குரங்கிடம் "அண்ணா! நாங்கள் வசித்த பகுதி வறண்டு போய்விட்டது. செழிப்பான பகுதி ஏதேனும் அருகில் இருக்கிறதா?" என்று கேட்டன.
"சற்றுத் தொலைவில் செழிப்பான காடு இருக்கிறது. நான் அங்கேதான் வசிக்கிறேன். எங்கள் சிங்க ராஜா நன்றாக ஆட்சி நடத்துகிறார். அங்கே போய் நீங்கள் வசிக்கலாம்" என்றது குரங்கு.
முயலும் பச்சோந்தியும் குரங்கு சொன்ன காட்டுக்கு வந்து சேர்ந்தன. காடு செழிப்பாகவே இருந்தது. அப்போது சூரியன் மறைந்து இருட்டிவிட்டதால் அவை இரண்டும் ஒரு மரப்பொந்தில் தங்கின.
"நாம் இன்றிரவு இங்கே தங்கிக்கொள்ளலாம். நாளை முதல் இந்தக் காட்டிலேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நிரந்தரமாக வாழலாம்" என்றது முயல். மறுநாள் முயலும் பச்சோந்தியும் ஆளுக்கொரு திசையில் வேலை தேடிச் சென்றன. மாலை இரண்டும் மரப்பொந்துக்கு வந்தன. "பச்சோந்தி, எனக்கு வேலை கிடைத்து விட்டது. மண்ணைத் தோண்டிக் கிழங்கு, கடலை எடுக்கும் வேலை" என்றது முயல்.
"அப்படியா! எனக்கு அரசவையில் அதிகாரியாக வேலை கிடைத்திருக்கிறது" என்று பொய் சொன்னது பச்சோந்தி.
மறுநாளிலிருந்து முயல் வேலைக்குச் சென்றுவந்தது. பச்சோந்தி எங்கோ கிளம்பிச் சென்றது. அது எங்கே செல்கிறது என்று யாருக்கும் தெரியாது. இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.
ஒருநாள் காட்டில் முயல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த குரங்கு, "அன்று உன்னுடன் வந்த பச்சோந்தியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்க ராஜா தண்டனை கொடுக்கக் காத்திருக்கிறார்" என்று சொன்னது. அதைக் கேட்டு முயலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.
"என்ன, கட்டி வைத்திருக்கிறார்களா? அவன் என்ன தவறு செய்தான்?" என்று சொல்லிக்கொண்டே, பச்சோந்தியைக் கட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஓடியது முயல். பச்சோந்தி தலை குனிந்தபடி நின்றிருந்தது.
முயல் நேராகச் சிங்க ராஜாவிடம் போய், "அரசே! இவன் என் நண்பன். இவன் என்ன தவறு செய்தான்?" என்று பணிவாகக் கேட்டது.
"ஓ... இவன் உன் நண்பன்தானா? இவன் கடந்த ஒரு மாதமாக நம் காட்டில் பலரும் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கும் உணவுகளைத் திருடித் தின்று வந்திருக்கிறான். யாராலும் இவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் இவன் இடத்துக்குத் தகுந்தாற்போல தன் நிறத்தை மாற்றிவிடுகிறான். இன்று காய்ந்த இலைச் சருகுகளோடு சருகாக மறைந்து உணவைத் திருடித் தின்று கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அடித்த காற்றில் சருகுகள் பறந்து போய்விட்டன. இவன் மாட்டிக்கொண்டான். இவனுக்குக் கசையடி கொடுக்கப் போகிறேன்" என்றது சிங்கம்.
முயல் பச்சோந்தியைத் திரும்பிப் பார்த்தது.
"நண்பா, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு மாதமாக வேலைக்குப் போகவில்லை. என் உடலின் நிறத்தை மாற்றும் திறமையை வைத்து உணவைத் திருடித் தின்றேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதது பச்சோந்தி.
பச்சோந்தியின் மீது இரக்கம் கொண்ட முயல் சிங்கத்திடம், "அரசே! இவனை மன்னித்துவிடுங்கள். இனி இவன் திருட மாட்டான். ஏதேனும் இவனுக்கு வேலை கொடுங்கள்" என்று கேட்டது.
"நீ இங்கு வந்த ஒரு மாதத்திலேயே நல்ல உழைப்பாளி என்று தெரிந்துகொண்டேன். உனக்காகப் பச்சோந்தியை மன்னிக்கிறேன். இவன் நம் உளவுத்துறையில் பணிபுரியட்டும். எதிரிகளின் கண்ணில் படாமல் மறைந்திருந்து உளவு பார்த்துவரட்டும். ஒருவன் தனக்கு இருக்கும் திறமையை நல்வழியில் பயன்படுத்தினால் எப்போதும் பெரும் புகழும் கிடைக்கும். தீய வழியில் பயன்படுத்தினால் தீமைதான் நடக்கும்" என்றது சிங்கம்.
பச்சோந்தியும் திருடுவதை விட்டுவிட்டு, உழைத்து வாழ ஆரம்பித்தது.

## எதிர்ப்பாற் சொற்கள்


| | |
|---|---|
| ஆசிரியன் | - ஆசிரியை |
| நாயகன் | - நாயகி |
| பெரியப்பா | - பெரியம்மா |
| பாடகன் | - பாடகி |
| நிபுணன் | - நிபுணை |
| செல்வன் | - செல்வி |
| அண்ணன் | - அண்ணி |
| இடையன் | - இடைச்சி |
| ஒருவன் | - ஒருத்தி |
| கரியன் | - கருயள் |
| குயவன் | - குயத்தி |
| சீமான் | - சீமாட்டி |
| நடிகன் | - நடிகை |
| நம்பி | - நங்கை |
| பாக்கியவான் | - பாக்கியவதி |
| பிக்கு | - பிக்குனி |
| அடியான் | - அடியாள் |
| நல்லான் | - நல்லாள் |
| உத்தமன் | - உத்தமி |
| சிறுவன் | - சிறுமி |
| தலைவன் | - தலைவி |
| தேவன் | - தேவி |

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | |
|---|---|
| அழுகை | - சிரிப்பு |
| அரிய | - எளிய |
| அகப்படல் | - தப்புதல் |
| அருகில் | - தொலைவில் |
| அழகு | - அவலட்சணம் |
| அரசன் | - ஆண்டி |
| அசல் | - போலி |
| ஆக்கம் | - கேடு அழிவு |
| ஆண்டாள் | - அடிமை |
| ஆடவர் | -பெண்டிர் |
| ஆவேசம் | - சாந்தம் |
| இறங்கு | - ஏறு |
| இளமை | - முதுமை |
| இணை | - பிரி |
| இறக்கம் | - ஏற்றம் |
| இசை | - வசை |
| உலோபி | - வள்ளல் |
| ஊடல் | - கூடல் |
| ஐயம் | - துணிவு |
| கீழ்மை | - மேன்மை |
| கூடுதல் | - பிரிதல் |




## துனிஷியா



1. வட ஆபிரிக்காவில் உள்ள நாடு. இதன் வடக்கில் ஆஞ்செலா முனை (Cape Angela) உள்ளது.
2. கொலோசியம் போன்ற கட்டடம் புகழ்பெற்றது.
3. 2011ஆம் ஆண்டில் இங்கு ஏற்பட்ட மக்கள் புரட்சி வெற்றி பெற்றது.
4. இந்த நாட்டின் 40 சதவிகிதப் பரப்பு சஹாரா பாலைவனம்.
6. தேள்களும் பாம்புகளும் இங்கு அதிகம்.
7. ஆயிரத்து 300 கி.மீ. தூரத்துக்குக் கடற்கரை அமைந்துள்ள நாடு.
8. கால்பந்து மிகப் பிரபலமான விளையாட்டு.
9. இந்த நாட்டைச் சேர்ந்த முகமது கம்மவுடி நான்கு ஒலிம்பிக் பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்.
10. 1956ஆம் ஆண்டு பிரான்ஸிடமிருந்து விடுதலை பெற்ற நாடு.




## வர்ணம் தீட்டுவோம்





## கிவி






கிவி என்ற பெயரில் ஒரு பறவையும் இருக்கிறது. ஒரு பழமும் இருக்கிறது. நியூசிலாந்தின் தேசியப் பறவை கிவி.
கோழி அளவுள்ள சிறிய பறவை. அலகு நீளமாக இருக்கும். பறக்க இயலாத பறவைகளில் இதுவும் ஒன்று. இரவு நேரத்தில் இரை தேடிச் செல்லும்.
பழுப்புத் தோலும் பச்சைச் சதையும் சிறிய கறுப்பு விதைகளுமாக இருக்கக்கூடியது கிவிப்பழம். புளிப்புச் சுவையுடன் இருக்கும் இந்தப் பழத்தில் விற்றமின் ஏ, சி, இ போன்ற சத்துகள் அதிகம் இருக்கின்றன. ஆனால், விலைதான் அதிகம். சீனா, சிலி, நியூசிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அதிகம் விளைகின்றன.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடும் பேச்சுத்திறனின் முக்கியத்துவமும்

மா.தியாகராஜன்


முதன் முதலில் மனித இனம் தோன்றிய போதும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி வளர்ந்த போதும், ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள வழியேதும் கிடையாது. பின்பு, நாளடைவில் அவனின் அறிவுத் தூண்டுதலால் செய்கை மூலம் கருத்தைப் பரிமாறிக் கொண்டான். தொடர்ந்து ஒலிக்குறிப்பு, வரிவடிவக் குறியீடு என வளர்ச்சி பெற்றுள்ளான். அறிவு வளர்ச்சிக்கும் கருத்துப் பகிர்வுக்கும் மொழி இன்றைய காலநகர்வில் இன்றியமையாததாகிவிட்டது.

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அவரவர்களுக்கு அவரவர் தாய்மொழி சிறப்புக்குரியது. தாய்மொழி மூலம் கற்றுத் தேர்வதே சிறந்தது. அத்தகைய நோக்கில் "அமிழ்தினும் இனிய தமிழ் மொழியை" தாய்மொழியாய்க் கொண்டவர்கள் அம்மொழியைச் சிறந்த முறையில் பேசி மகிழ்ந்திருந்திட நன்முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.



**பேச்சு அற்புதமான சுவாத்தியம்!**

உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் பேச்சு மொழி உண்டு. ஒலியைக் குறிப்பிட்ட ஒழுங்கில் உச்சரிப்பதே பேச்சு. மனிதன் எல்லாத் தேவைகளையும் ஒருவரை ஒருவர் சார்ந்தே பூர்த்தி செய்து கொள்கிறான். அதற்குப் பேச்சுத்தான் துணைபுரிகிறது. பேச்சு மனிதனுக்கு 'மூச்சு'ப் போன்றது என்று சொல்வது மிகையல்ல. அத்த



கையப் பேச்சில் தேர்ச்சிப் பெறுவது மாணவப் பருவத்தில் நன்மை பயக்கும். பாடசாலைச் சூழலில் பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதன் மூலம் சிறந்த மொழி ஆற்றலையும், ஆளுமைப் பண்பையும், தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளமுடியும். மாணவர்கள் பேச்சுத் திறனுடையவர்கள் ஆவதற்கு ஆசிரியர்கள் மிகுந்த திறனையும், ஆர்வத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**தேமதுரத் தமிழோசையில் நல்ல தேர்ச்சி வேண்டும்**

மகாகவி பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று கூறியதன் வாயிலாகத் தமிழை இனிய மொழி என்று கூறினார். அவர் மேலும், "தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்றார்.

அத்தகைய தமிழ் மொழியை அதன் சுவை, ஓசை குறையாமல் போற்றி வளர்ப்பதே ஆசிரியர்களின் கடமையாக இருக்க வேண்டும். ஆங்கில மோகம் தலை விரித்தாடும் இக்காலகட்டத்தில் மொழியாசிரியர்கள், புத்தம் புதிய உத்திகளாலும் தளராத உழைப்பினாலும் மட்டுமே மாணவர்களை ஆர்வமுடன் தமிழைப் பேச வைக்க இயலும். இல்லையென்றால் பேசுகின்ற ஆர்வம் குறைந்து போய் விடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்டுக் காட்டிய வழிமுறைகளில் திறன்களின் வேறுபாடுகள் விரிவடைகிறது. இத்தகைய திறன்களை வளர்த்துக் கொள்ள ஆர்வமும், புத்தம் புதிய சிந்தனையும் இருக்க வேண்டியதொரு நல்ல சூழலும் திறமையான வழிகாட்டலும் மாணவனுக்கு அமைதல் வேண்டும்.

**பேச்சுப் பயிற்சிக்குரிய செயல்பாடுகள்**

'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற சான்றோர் வாக்கை நாம் மறத்தல் கூடாது.

பாத்திரத்தில் இருந்தால் தான் பரிமாற முடியும். அதாவது 'சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்'. நிறையச் சொற்களை அறிந்திருந்தால் தான் அவற்றைப் பயன்படுத்திப் பேச முடியும். இத்தகைய சொற்களை நிறையப் பெறுவதற்குப் பாடசாலைச் சூழலில் பல்வேறு பயிற்சிகளை ஆசிரியர்கள் அறிமுகம் செய்தல் வேண்டும்.

எமது பகுதியில் நடைபெறுகின்ற விழாக்கள் குறித்து மாணவர்களை உரையாடும் படி தயார் செய்தால் அவர்கள் மிகவும் ஆர்வமும் அத்தகைய உரையாடலில் பங்கேற்றுப் பேசவும் தொடங்குவார்கள்.

திருவிழாவில் கண்ட நிகழ்ச்சிகள், விளையாட்டுச் சாதனங்களின் பெயர்கள், நடனங்களின் வகை, அவற்றின் சிறப்பு அல்லது வரலாறு என இத்தகைய கோணங்களில் மாணவர்கள் உரையாடலைத் தொடங்கும் போது, ஒருவக்கொருவர் ஆர்வமுடன் சலிப்பின்றித் தங்கள் கருத்துக்களைக் கூட கூறுவர். இதன் மூலம், மாணவர்களின் மனதில் உற்சாகம், கற்கும் ஆர்வம் நிரம்பி வழியும் என்பதில் ஐயமே கிடையாது.

அதேபோன்று மாணவர்களின் பேச்சுப் பயிற்சியைத் துரிதமாக்கவும் என்றும் நினைவில் நிற்கும் படியும் வளர்ப்பதற்கு அவர்கள் கண்டு இரசித்த பறவைகள், விலங்குகள் முதலியவற்றைப் பற்றி உரையாடச் செய்வது மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

**எடுத்துக்காட்டு**

•பருந்து, புறா, மயில்,காகம்
•சிங்கம்,மாடு,புலி,யானை

இவை போன்ற மற்றப் பறவைகளின் பட்டியல்களை மாணவர்கள் தயாரிக்க வேண்டும். பின்பு, அதைப் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்தல் வேண்டும். இதன்படி 'பருந்து மேலே பறந்து சென்றது' என்ற சொற்றொடரில் 'ரு', 'ற' வேறுபாட்டை மாணவர்கள் எளிதில் உணர முடியும்.


'சிங்கையில் சிறந்தது சிங்க நடனம்' என்ற இந்தத் தொடரில், சிங்கை சிங்கம் என்ற சொற்றொடரின் தன்மையை உணர்ந்த மாணவர்கள் எதுகை மோனை (முதலெழுத்து ஒன்றாய் அமைவது மோனை, இரண்டாம் எழுத்து ஒன்றுவது எதுகை) முதலிய இலக்கணச் சிறப்பையும் அறிந்து கொள்கிறார்கள்.

'ஜல்லிக் கட்டுக்காளை துள்ளிக்கிட்டு ஒடுது' என்ற சொற்றொடரை உச்சரிக்கும் போது, 'ல', 'ள' என்ற வேறுபாட்டுடன் உச்சரிக்க கற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வாறு ர, ற, ள, ழ, ண, ந, ன முதலிய எழுத்துக்களை அதன் தன்மையறிந்து ஒலிக்கும் முறையை அறிந்து நுட்பமாக ஒலிக்க வேண்டும் என்பதை அறிகிறார்கள். இல்லையென்றால், பேச்சில் பிழை ஏற்படும் வாய்ப்பு உண்டு என்பதை அவர்கள் அறிய முடிகிறது. அதற்கு ஆசிரியர்கள்,

•பலம், பவளம், பழம்
•பணம், நலம், மனம்

முதலிய சொற்களை முறையான ஒலிக் குறிப்புகளோடு உச்சரிக்கும் பயிற்சியை வழங்க வேண்டும்.



**பேச்சுப் பயிற்சிக்கு மேலும் சில வழிமுறைகள்**

•ஊரின் பெயர்கள், ஆறுகளின் பெயர்கள் குறித்து விவாதம் அல்லது உரையாடல் நடத்துதல்.

•மாணவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டுகளைப் (அவரவர்களுக்குப் பிடித்த) பற்றிக் கலந்துரையாடல் செய்யச் சொல்லலாம்.

•தொலைக்காட்சிகளில் கண்டு சுவைத்து, மகிழ்ந்த நிகழ்ச்சிகளை உரையாடச் செய்யலாம். இது பற்றி மாணவர்கள் உரையாடும் போது, ஆசிரியர் துணை நின்று ஒருவர் கூறும் கருத்தை மற்றவர் ஒட்டியும் வெட்டியும் பேசுமாறு வழிகாட்டுதல் மிகவும் நலமாகும். இதன் மூலம் உடனுக்குடன் சிந்திக்கும் ஆற்றலையும் மாணவர்கள் பெறுகிறார்கள்.

•விளையாட்டு மைதானத்தில் 'கிரிக்கெட்' எனும் மட்டைப் பந்தாட்டம் நடைபெறுகிறது அல்லது கால்பந்து ஆட்டம் நடைபெறுகிறது அல்லது பாடசாலையின் ஆண்டு விழா நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஒரு வர்ணனை செய்யச் சொல்லலாம். இதனால் கண்ணால் காணும் நிகழ்ச்சியை உடனே மனதில் நிறுத்தி, அதை பிறருக்கு விளங்குபடி எடுத்துரைக்கும் ஆற்றலை மாணவன் பெறுகிறான். இத்தகைய நிகழ்வின் மூலம், 'பெறுதல், தருதல்', 'படித்தல்,படைத்தல்' ஆகிய இரு நிகழ்வுகள் ஒரே சமயத்தில் மாணவரிடம் நடைபெறுகிறது. இதனால் மாணவர்களின் ஆற்றல் பெருகுகிறது.

•பாடசாலையில் நடைபெறும் இறைவழிபாட்டுக் கூட்டம், வகுப்பறைக் கூட்டம், இலக்கியக் கூட்டம் ஆகியவை பற்றி உரையாடச் செய்யலாம்.

**வரைதலும் அறிதலும்**

மாணக்கர்களை அவர்கள் விரும்பும் படத்தை வரையச் செய்து அதற்கு எதிரே அதன் பெயரை, எழுத்துக்களை மாற்றி எழுதி முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் சொல்லச் சொல்லி உற்சாகப் படுத்தலாம்.

**உதாரணம்,**

•குழந்தைகளுக்குப் பிடிக்கும் 'பு' இனிப்'பு'.
•வானில் வரும் 'லா' நி'லா'.
•வீட்டில் வளர்க்கும் 'னை' பூ'னை'

இப்படிப்பட்ட விளையாட்டுமுறைகளாலும் பேச்சுத்திறன் மிளிரும்.

**சொல்லகராதியின் பயன்**

அகராதி என்பது சொற்களஞ்சியம், சொற்பட்டியல் என்பதாகும். நிறைவான் சொற்களை அறிந்து வைத்திருப்பதன் மூலம், உரையாடலின் போது தங்கு தடையின்றி புதிய புதிய சொற்களைக் கையாண்டு இனிமையாகப் பேச முடியும். திரும்பத் திரும்ப ஒரே சொல்லைப் பயன்படுத்தும் நிலை ஏற்படாமல் இருக்கும். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் இத்தனை சொற்களை அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலை வர வேண்டும். ஆம், இத்தகைய வழிகளையும், ஆசிரியர்களுக்கு அவ்வப் போது ஏற்படுகின்ற நல்ல பவங்களையும் பயன்படுத்தி தாய் மொழியாம் தமிழ்மொழியை மாணவர்கள் செம்மையுடன் பேசிவாழ வழி செய்வோம்!

## மரண அறிவித்தல்

### நடராஜா ஜெகதீஸ்வரன்



கிளிநொச்சி ஜெயந்திநகரைப் பிறப்பிடமாகவும்; கனடாவை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஜெகதீஸ்வரன் 24.10.2018 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - அன்னபூரணம் (அனலைதீவு) தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினசபாபதி - நாகரெட்ணம் (நயினாதீவு) தம்பதிகளின் அன்பு மருமகனும், யசோதாவின் அன்புக் கணவரும், அஜய், ஜெயனி ஆகியோரின் அன்புத் தந்தையும், உருத்திராதேவி, செந்தாமரைச்செல்வி (ஜேர்மனி), இந்திராதேவி, காலஞ்சென்ற நகுலேஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற றஞ்சன், சந்திரநாதன் (ஜேர்மனி), அரியரெட்ணம், கலைமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சதாசிவம், தங்கம்மா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், சுகிர்தா, மனோகர், சசிகரன், ஸ்ரீராகவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீதரன், பாலசுப்பிரமணியம், கணேசராஜா, சுபாஜினி, பவானி, நித்தியானந்தன், சதானந்தன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :- குடும்பத்தினர்.**

(CS/20906)(11,17)

## கணக்காளர் தேவை

விற்பனை விநியோக நிறுவனத்துக்கு
- *தகுதி வாய்ந்த கணக்காளர்,*
- *முகாமைத்துவ உதவியாளர்*

*மற்றும் களஞ்சியப்பொறுப்பாளர்* தேவை.
ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயது 25 - 50 வரை.
முன்னனுபவம் விரும்பத்தக்கது.

**021 221 3788**

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரிலுள்ள **Flowers Shop** ஒன்றுக்குப் பெண் வேலையாள்கள் தேவை.

**077 400 5023, 075 300 5023**

## வீடு வாடகைக்குண்டு

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அமைந்துள்ள வீடொன்று வாடகைக்கு உள்ளது. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 0777 763436**

(CS 20914/15(17)

Galaxy Star

வெற்றி வாரம் **275** / திகதி **28.10.2018**

வெற்றி இலக்கங்கள்

**04** **02 25 32 40**

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப்பொதி

**ரூ. 2,707,576/-**


## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் பண்டத்தரிப்பு

### ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்** :- 04
**உத்தேச ஆதன இல** :- 37/10
**வீதி** :- சென்பற்றிமா டச்சு வீதி
**கிராம சேவையாளர் பிரிவு** :- J/146, பண்டத்தரிப்பு

வட்டாரம் 04, சென்பற்றிமா டச்சு வீதி, உத்தேச ஆதன இல. 37/10 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை J/146 கிராம சேவகர் பிரிவிலுள்ள **"தெவரியவளை"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 1 கொண்ட இவ்வாதனம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த நீக்கிலான் சின்னப்புவும் பெண் திரேசம்மாவும் ஆகிய அவர்களால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டு அவர்களின் மகளாகிய சின்னப்பு அக்கினேசம்மா அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் க.வ.பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 13008 ஆம் இலக்க 05.03.1983 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.A.கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2018/181 ஆம் இலக்க 03.04.2018 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது **" தெவரியவளை"** நிலப்பரப்பு 1 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னப்பு அக்கினேசம்மா எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.





**அ.ஜெயநேசன்,**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு**
**பிரதேச்சபை,**
**மானிப்பாய்.**

(CS/20905)(11,17)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை வினோகரன்



பூவுலகில் 01.01.1981 — மண்ணுலகில் 18.10.2011

திதி:- 30.10.2018 (ஷஷ்டி)

ஆண்டுகள் ஏழு ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது என்றென்றும் அழகான உன் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**இடைக்குறிச்சி மேற்கு, வரணி.** **குடும்பத்தினர்.**

(CS/630)(11,17)

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி பரம்சோதி தேவகுஞ்சரி

### (இடப்பிட்டி - காரைநகர்)



தோற்றம்
**03.09.1961**

மறைவு
**16.11.2011**


திதி:- ஷஷ்டி (30.10.2018)

**குடும்பத்தினர்.**
**(வெங்கடேஸ்வரா)**

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(CS/20740)(11,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 28 . 08 . 1946

இறப்பு 28 . 10 . 2018

### குமரேசு சந்திரகுமார்

**(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் H-N-B)**

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஹற்றனை வதிவிடமாகவும், முல்லைத்தீவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட குமரேசு சந்திரகுமார் 28.10.2018 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு - மனோன்மணி தம்பதிகளின் சிரேஸ்ர புத்திரனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பாலசுந்தரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பாலகௌரியின் அன்புக் கணவரும், மயூரன் ( H - N - B - மன்னார்), Dr.விதுரன் (முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தை யும், யாழினி, சுபா (சட்டத்தரணி - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணன், வாமணன், ஆதிரா ஆகியோரின் ஆசைப் பேரனும், காந்தரூபன், ஸ்டெலா சுகுணா, ஜோஜெயந்திரன் ஆகியோரின் சகோதரரும், பகீரதன், பிரகலாதனன், உதயகுமாரி, காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் திலீபன், குமணன், அல்லி, புவனா ஆகியோரின் மைத்துனரும், கபிலன், முகிலன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இல.51, இலந்தக்குளம் வீதி, அரியாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.51, இலந்தக்குளம் வீதி,**
**அரியாலை**

(CS/20904)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

---

**வேலையாள் தேவை**

**Samsung Singhagiri**
சுன்னாகம் **Showroom**
இற்கு 18 - 30 வயதுக்குட்பட்ட
ஆண் வேலையாள்கள் தேவை.
**077 800 7447**

(CS/20907)(11,17)

---

**கடை வாடகைக்கு உண்டு**

உடுவில் மகளிர்
கல்லூரிக்கு முன்பாக
**077 430 3618,**
**077 868 9597 (சிவா)**

(CS/202480)(11)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உதயம் 13 . 12 . 1939

மறைவு 09 . 11 . 2017

### அமரர் நடராசா சிரோன்மணி

(சிரோன் அக்கா)

**திதி வெண்பா**

**ஐப்பசி மாத தேய்பிறை புனர்பூச நட்சத்திர சஷ்டி திதி**

ஆண்டொன்று மறைந்து விட்டது அம்மா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது

**வசீகரன் இல்லம்,**
**கோப்பாய் வீதி,**
**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

**குடும்பத்தினர்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தம்பு பிரியகுமார்



அன்னை மடியில்
08.01.1977

ஆண்டவன் அடியில்
30.10.2017

நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எமது கவலைகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கும்,

**அன்பு மனைவி,**
**மகன், மகள்மார்.**
**168/4, புகையிரத**
**நிலைய வீதி, சுன்னாகம்.**

(CS 204530)(11,17)

---

## பிறந்த நாள் நினைவலைகள்



மலர்வு 30.10.1985

உதிர்வு 18.05.2018

அமரர்

### கோபாலபிள்ளை குகன்

எங்கள் நந்தவனத்தில் பூத்துக் குலுங்கிய புன்னகை
மலரே இன்று நீ இம் மண்ணிலே மலர்ந்த நன் நாள்
அல்லவா! நாம் நடுச்சாமம் கண்விழித்து
நல்வாழ்த்துக்கூற முடியவில்லையே
நாள்கள் நூற்றுஅறுபத்து ஆறு கடந்தது
உந்தன் பூமுகம் எம்மைப்பிரிந்து அகவை
முப்பத்துமூன்றில் எம்முடன் அகமகிழ வாராயோ
கடமை நிறைவேற்றி மனை திரும்புவாயென
காத்திருந்த விழிகளில் காரிருள் சூழ்ந்தது
உன்னைச்சுமந்து சென்ற வண்டியின் அதிவேகம் கண்டு
தடுமாறினாய் மெல்லப்போ என நீயுரைக்க
விரைந்து சென்று விதி முடித்தான் சாரதி
உண்மை, நீதி, நேர்மை, ஊமையாய் உறங்கிட பூநகரி
மண்ணிலே எங்கள் மலை சரிந்ததுவோ நிலைமாறும்
இவ்வுலகில் நிலை தடுமாறினோம் பார்க்கும்
இடமெல்லாம் உன் ஞாபகம் நெஞ்சிலே பாசமலரே
எங்கு சென்றாயோ
உனை ஈன்றவள் தினமும் கதறித் துடிக்கிறாள்
இம்மண்ணில் மீண்டும் வந்து மலர்வாயா
எம் மனையில் எம்முடன் மகிழ்வாயா.

**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**என்றும் ஆறாத்துயரில் : குடும்பத்தினர்.**

(வேலணை மேற்கு — 8)

---

## 71 ஆவது அகவை நாளில் நெஞ்சகலா நினைவு



அன்னை மடியில் 30 – 10 – 1947

ஆண்டவன் அடியில் 11 – 02 – 2018

அமரர்

### திருமதி சரோஜா ஈஸ்வரதாசன்

மறைந்தும் மறையாத எங்கள் இதய தெய்வத்தின்
71 ஆவது பிறந்த தினத்தில் அம்மாவை
நினைந்துருகி அன்பு மலர்களைக் காணிக்கையாக்குகிறோம்

180/2, சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்

## புதிய...

கொழும்பு, ஒக். 30

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசில் 12 அமைச்சர்களும், ஒரு இராஜாங்க அமைச்சரும், ஒரு பிரதி அமைச்சரும் நேற்றுப் பதவியேற்றார்கள். அரச தலைவர் செயகத்தில் நேற்று மாலை 7 மணிக்கு இந்தப் பதவியேற்பு இடம் பெற்றது.

ரணில் தலைமையிலான கூட்டு அரசு, மைத்திரிபால சிறிசேனவால் கவிழ்க்கப்பட்டது. மகிந்த ராஜபக்ச தலைமைமை அமைச்சராக நியமிக்கப்பட்டு புதிய அரசு அமைக்கப்பட்டது. 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக கூட்டு அரசு இல்லாத சந்தர்ப்பத்தில் 30பேரே அமைச்சர்களாகப் பதவி வகிக்க முடியும். இருப்பினும் நேற்றைய தினம் 12பேர் மாத்திரமே பதவியேற்றுள்ளனர். மகிந்த ராஜபக்ச தலைமையில் ஏற்கனவே இயங்கிய கூட்டு எதிரணியிலிருந்தோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீன அணியிலிருந்தோ எவரும் அமைச்சர்களாக நியமிக்கப்படவில்லை.

புதிய அமைச்சரவையில், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தாவிய இருவருக்கு அமைச்சுப் பதவிகளும், ஒருவருக்கு இராஜாங்க அமைச்சும் மற்றொருவருக்கு பிரதி அமைச்சும் வழங்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் அமைச்சரவை தகுதியுள்ள அமைச்சர்களாக 12பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சராக மகிந்த ராஜபக்ச, போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வா, அயலுறவுத்துறை அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சராக மகிந்த சமரசிங்க, விவசாய அமைச்சராக மகிந்த அமரவீர, மின்வலு மற்றும் புதுப்பிக்கதக்க வலுசக்தி அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய, கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சராக கலாநிதி விஜயதாச ராஜபக்ச, மீன்பிடி, நீரியல்வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சராக விஜித் விஜயமுனி சொய்சா, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக ஆறுமுகம் தொண்டமான், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா, மாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக பைசர் முஸ்தபா, சுற்றுலாத்துறை மற்றும் வனசீவராசிகள் அமைச்சராக வசந்த சேனாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக வடிவேல் சுரேஸும், சுற்றுலாத்துறை மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சராக ஆனந்த அளுத்கமகேயும் நியமிக்கப்பட்டுள்ளனர். (5,61)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3102 திகதி: 2018.10.29 திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
16 20 22 65 K | 54 | 48,121,265/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பதன்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1513
சீட்டிழுப்பு திகதி 29.10.2018
வெற்றி இலக்கங்கள் 03 10 39 57 ஆங்கில எழுத்து T
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 20, 557, 592/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பதன்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 418
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2018.10.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 64,478,345/-
வெற்றி இலக்கங்கள் 10 38 55 58 ஆங்கில எழுத்து I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழைப்பதன்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## பெண் எழுதுவினைஞர் தேவை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் **பகுதி நேர பெண் எழுது வினைஞர்** பதவி வெற்றிடத்தினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு **அல்லது மீள்நிரப்பும் பொருட்டு 07.11.2018 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.**

▾ கீழ்க்காணும் தகைமையுள்ள பெண் விண்ணப்பதாரிகள் தங்களின் சுயவிவரக் கோவையுடனும், தகைமைச் சான்றிதழ்களுடனும் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

### கல்வித் தகைமைகள்

- க.பொ.த.சாதாரணதரம் / க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- கணினிக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் மற்றும் ஏனைய விடயங்கள் பேசித்தீர்மானிக்கப்படும்.

**பருத்தித்துறை, பிரதேச செயலகம்/ கரவெட்டி பிரதேச செயலகம் மற்றும் வைத்தியசாலைக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவார்கள்.**

**மேலும் தொடர்புகளுக்கு:-**
**செயலாளர்**
**T.P:- 076 377 9531**

(CS/00635) (11,17)

HOME LOAN வீட்டுக் கடன்



பாசமும், நேசமும் நிறைந்த கனவு இல்லத்தை நனவாக்கிடுங்கள்

பீப்பள்ஸ் லீசிங் "செனசும் பியச" வீட்டுக்கடன் திட்டம் மூலம் உங்கள் வீட்டுக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள். வீடொன்றைக் கட்டுவதற்கு, வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு, வீடொன்றை புதுப்பித்துக்கொள்வதற்கு, வீட்டின் ஒரு பகுதியை கட்டியெழுப்புவதற்கு, மாடி வீடுகளை கொள்வனவு செய்வதற்கு, (முழுமையான அல்லது நிர்மாணிக்கப்படும்) அல்லது காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு இப்போது பல இலகுவான கடன் திட்டங்களை பீப்பள்ஸ் லீசிங் நிறுவனம் உங்களுக்கு வழங்குகிறது.

- மாறாத வட்டி வீதங்கள்
- உங்கள் வருமானத்திற்கு ஏற்றவகையில் மாதந்த தவணையை திட்டமிடுதல்
- இலவச காப்புறுதி
- காணியை விடுவித்துக்கொள்வதற்கு வேறொரு காணியை இழப்பீடாக சமர்ப்பிக்கும் ஆற்றல்
- எந்தவொரு தருணத்திலும் பணத்தைச் செலுத்தி கடன் தவணையை அல்லது காலத்தை குறைத்துக்கொள்ள முடியும்
- கடன் தொகையை வேறு ஒருவருக்கு மாற்றும் வசதி
- கடனை மீள் செலுத்துவதற்கு 5 வருடங்கள் வரையான கால அவகாசம்

இல. 1161, மருதானை வீதி, கொழும்பு 08
HOTLINE 0112 206 300
PEOPLE'S LEASING




HNB தங்க வரத்திடமிருந்து மூன்று மாதங்கள் முழுதும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலிற்கும் புதுமை தந்திடும் பல பரிசுகள்!




**மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்தினை நாடுங்கள் அல்லது 2 462 462 ற்கு அழையுங்கள்.**

கையிருப்பு உள்ளவரை மட்டுமே. ஆகக் குறைந்த கடன்தொகை ரூ.10,000/- ஆக இருத்தல் வேண்டும்.

HNB அடகு சேவை

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
பிச் ரேட்டிங் AA-(lka)
Hatton National Bank PLC - PQ 82

## விழிநீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
**திருமதி வ. சிவநேசன்**
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்

அவர்கள் 17.10.2018 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**ஆசிரியர் நலன்புரிக் கழகம் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திவச அழைப்பும்



தோற்றம்
06.06.1936

மறைவு
10.11.2017

கடந்த 10.11.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### கைலாயசுந்தரம் அன்னலக்ஷ்மி

அவர்களின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலியும், திவச நிகழ்வும் நாளை (31.10.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் மதியபோசனமும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலியதனை, தொண்டைமானாறு
021 205 5617, 077 749 8439
K.சந்திரகுமார்
K.சாந்தினி, K. பகீரதி

## அவசரமாக...

கொழும்பு, ஒக். 30

கொழும்பு அரசியல் குழப்பம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை திடீரென தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்ப ட்டதை தொடர்ந்து கொழும்பு அரசியலில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய நிலைக்கு மகிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவரும் தள்ளப்பட்டுள்ளனர். கூட்டமைப்பின் ஆதரவை இரண்டு தரப்பும் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றது. யாரை ஆதரிப்பது என்ற முடிவை கூட்டமைப்பு இதுவரையில் எடுக்கவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு, நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நேற்று மாலை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா /கரணவாய் தாமோதரா வித்தியாலய மாணவி
செல்வி
**லக்ஷ்மிகாந்தன் லக்ஷனா**
புள்ளி - 170
பெற்ற அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**Congratulations!**

வாழ்த்துவோர் :
பெரியப்பா - ந. கிருஷ்ணகுமார்
பெரியம்மா - கி. ஜெயந்தினி
சகோதரி - கி. சஜானி
சகோதரன் - கி. சஹானன்

12, நொத்தாரிசு வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்வு



கிளி/கோணாவில்
காந்தி ஆரம்ப வித்தியாலய
ஆசிரியர்
திருமதி
**சாந்தகுமாரி இராசலிங்கம்**
அவர்களின் மைத்துனர்

### முருகையா திருநாவுக்கரசு

23.10.2018 அன்று மறைவுச் செய்தியைக் கேட்டு துயருற்று இருக்கும் ஆசிரியரது குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் துயரினை பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர்பகிர்வு, பாடசாலைச் சமூகம்
கிளி/ கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம்

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெகதீஸ்வரி சிவசண்முகராஜா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர் - நல்லூர் சாதனா பாடசாலை)*



அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராய், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி சிவசண்முகராஜா நேற்று (29.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் (பிரதமகுரு அநுராதபுரம் கதிரேசன் கோவில்) - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - சிவபாக்கியம் (தபால் அஞ்சலகர்) தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசண்முகராஜா (விற்பனைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் சுமங்கலி (கௌரி - லண்டன்) அன்புத் தாயாரும் சண்முகநாதன் சர்வாநந்தனின் (லண்டன்) அன்பு மாமியாரும் பாலமகேஸ்வரி விஸ்வலிங்கம் (திருகோணமலை), நமசிவாயம் (கொழும்பு சுப்பிரமணியம் கொம்பனி மருந்துக்கடை), யசோதா மகேந்திரன் (ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரி), சிவஸ்ரீ கேதீஸ்வரக் குருக்கள் (அநுராதபுரம்), கோமளாதேவி விசாகப்பெருமாள் (பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை பிரதம முகாமைத்துவ உதவியாளர்), சியாமளா (வவுனியா மாவட்ட செயலக நெசவுப் போதனா ஆசிரியர்), பத்மாசனி உபேந்திரன் (ஆசிரியர் - கோப்பாய் மகா வித்தியாலயம்), வாசுகி கேதீஸ்வரன் (ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் - திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைதேகி சிவசெந்தில்நாதன், வைகுந்தன் லதா, கேதுசன், ஆரபி, ஆதித்தியா, வர்ஷனி, மிதிலா ஆகியோரின் பெரியம்மாவும் சுபஹரி, மாதங்கி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிகல்யா, நிஷங்கா, ஹரினன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, விசாகப் பெருமாள் (இந்து) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**021 223 2478** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி பூமணி சேனாதிராஜா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சேனாதிராஜா நேற்று (29.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சேனாதிராஜாவின் அன்பு மனைவியும் செல்வராஜா, தேவராஜா, சந்திரமலர் காலஞ்சென்ற சந்திரமோகன் ஆகியோரின் அன்புத்தாயாரும் திவ்வியமனோகரனின் மாமியாரும் பிரதீபன் (பிரதான புகையிரத நிலைய அதிபர், யாழ்ப்பாணம்), அகிலன், நிதர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மதுசன், ஹரிசாயினி, விசாகன், சங்கீத் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**தி. பிரதீபன் (பேரன் 070 322 2271)**
**தி. நிதர்சன் (077 7570 105)**

## கூட்டமைப்பின்...

யாழ்ப்பாணம், ஒக்.30

தற்போதைய நெருக்கடியான அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு முடிவும் அதன் நாடாளுமன்றக் குழுவால் அல்லாமல் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவால்தான் எடுக்கப்படவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியிடம் வலியுறுத்தியுள்ளது ரெலோ. இந்தக் கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் ரெலோ தனித்தே முடிவுகளை எடுக்கும் என்று ரெலோ செயலாளர் சட்டத்தரணி என். சிறிகாந்தா தெரிவித்தார்.

கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் முடிவு என்ன என்று பலரும் எதிர்பார்த்துள்ள நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசாவை நேற்றிரவு யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள தனது இல்லத்தில் அவசரமாகச் சந்தித்துப் பேசினார் சிறிகாந்தா. மாவை சேனாதிராசா கொழும்புக்குச் செல்லும் வழியில் 15 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சத்திப்பில் இன்றைய சூழ்நிலையில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு மட்டுமே எல்லா முடிவுகளையும் எடுக்கக்கூடாது என்று தான் வலியுறுத்தினார் என்று சிறிகாந்தா் தெரிவித்தார்.

சந்திப்புத் தொடர்பில் சிறிகாந்தா தெரிவித்ததாவது: தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையுடன் கூடிய ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். நாளை (இன்று) இடம்பெற உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுடன்றக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக விவாதிக்கலாம், ஆனால் இது தொடர்பான முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதியுயர் பீடமான ஒருங்கிணைப்புக் குழுவே எடுக்க வேண்டும். அவ்வாறு ஒருங்கணைப்புக் குழு கூடாமல் நாடாளுமன்றக் குழு முடிவெடுக்குமாக இருந்தால், அது பாதகாமான முடிவாக இருந்தால் எமது கட்சி தனியான முடிவு எடுக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படும். எனவே உடனடியாக ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டுமாறு அந்தச் சந்திப்பில் வலிறுயுத்தினேன் என்றார்.

"சந்திப்பு இடம்பெற்றது. நாளை (இன்று) இடம்பெறவுள்ள தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் கதைக்க வேண்டிய ஆரோக்கியமான விடயங்கள் தொடர்பிலும், கட்சி அரசியல் தொடர்பிலான ஆரோக்கிமான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன" என்று இந்தச் சந்திப்புக் குறித்துத் தெரிவித்தார். (உ21,26)

## பங்குச்...

சுட்டி 112.22 புள்ளிகளால் உயர்வடைந்து 5 ஆயிரத்து 944 புள்ளியாகவும், ஸ்டாண்டர்ட் அன்ட் புவோ்ஸ் சிறிலங்கா 20 விலைச் சுட்டி 54.92 புள்ளிகளால் உயர்வடைந்து 3 ஆயிர்து 52.25 புள்ளியாகவும் காணப்பட்டது. பங்குகளின் மொத்தப் புரள்வு 4.16 பில்லியன்·ரூபா ஆகவும் காணப்பட்டது.

நேற்றைய பங்கு வர்த்தகத்தில் 145 நிறுவனங்களின் பங்குகள் விலை அதிகரிப்பினையும், 108 நிறுவனங்களின் பங்குகள் விலை மாற்றமின்றியும் இருந்தன. அதேவேளை 24 நிறுவனங்களின் பங்குகளின் விலைகளில் மட்டுமே வீழ்ச்சியடைந்திருந்தன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாவில் 173.08 ஆகக் காணப்பட்டது. அது நேற்று உயர்வடைந்து 174.30 ரூபாவாகியது. (5)

## அரசியல்கைதி...

கொழும்பு, ஒக். 30

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்போவதாகஅறிக்கை வெளியிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, மகசின்சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்று ஒரு அரசியல் கைதியுடன் மாத்திரம் 15 நிமிடங்கள் சந்திப்பை மேற்கொண்டுள்ளார்.

தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச பதவியேற்ற பின்னர், தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அறிக்கை வெளியிட்டிருந்தார். இதற்கு அமைவாக நேற்றைய தினம் அரசியல் கைதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

நேற்று மதியம் 12 மணியளவில் மகசின் சிறைச்சாலைக்குச் சென்ற நாமல் ராஜபக்ச, ஓர் அரசியல் கைதியை மாத்திரம் அழைத்து சுமார் 15 நிமிடங்கள் பேசியுள்ளார். அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமது அமைச்சரவையில் பேசுவதாக மாத்திரம் பதிலளித்து விட்டு அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். (5)

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதர் கனகரத்தினம்



மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கனகரத்தினம் நேற்று (29.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்னம்மா தம்பதியரின் மூத்தமகனும் மாது சிரோன்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியை), சௌந்தரமணி, ஜெயமணி, விவேகானந்தன் (கனடா), வித்தியானந்தன் (ஓய்வு பெற்ற நூலகர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் பிறேமச்சந்திராவின் அன்புக்கணவரும் விமலாம்பிகை (கனடா), கிருஷ்ணகுமாரி(ஓய்வுபெற்றமுகாமைத்துவ உதவியாளர்) ஆகியோரின் அன்புமைத்துனரும் வித்தியா (கனடா), வாகீசன் (கனடா), பரதன் (படப்பிடிப்புக்கலைஞர்), விசாகன் (நீர்ப்பாசனத்திணைக்களம்), சொரூபி (மாணவி, நுண்கலைப்பீடம் யாழ். பல்கலை க்கழகம்), ராகவன் ஆகியோரின் அன்புப்பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோயிலடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல் : வே. நித்தியானந்தன்
(காந்தன், சகோதரர்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1958



மறைவு 29 . 10 . 2018

### திருமதி சுசிலாதேவி பத்மநாதன்


நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி பத்மநாதன் நேற்று (29.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 520 5829

தகவல் :
குடும்பத்தினர்.



### சிவஸ்ரீ சிவச்சாமிக்குருக்கள் கமலநாதசர்மா

மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவச்சாமிக் குருக்கள் கமலநாதசர்மா நேற்று (29.10.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சிவாச்சாமிக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திருமதி ச. இந்திராதேவி, சிவஸ்ரீ சி. சபாநாதக்குருக்கள், திருமதி சோ. நீலாயதாட்சி, திருமதி ந. காயத்திரி, சிவஸ்ரீ சி. ஜெயந்திநாதக்குருக்கள், சிவஸ்ரீ சி. பத்மநாபக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஸ்ரீ ந . சண்முகரத்தினக்குருக்கள், திருமதி ச. விமலாம்பிகை, சிவஸ்ரீ கு. சோமசுந்தரக்குருக்கள், சிவஸ்ரீ பா. நகுலேஸ்வரசர்மா, திருமதி ஜெ. மோகனாம்பிகை, திருமதி ப. கல்யாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை இலக்கம் 74, பிறவுண் வீதி நீராவியடி யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 280 2627

## மரண அறிவித்தல்

### பரன் சுவர்னா



தோற்றம் 19.12.2000 மறைவு 28.10.2018

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரன் சுவர்னா கடந்த (28.10.2018) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் பரன் (பெரியவவா) - ஜெயந்தினி தம்பதிகளின் பாசமிகு மகளும் சுலக்ஷன், சுலக்ஷனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பொன்மணி, காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் புவனேஸ்வரி (றஞ்சி) தம்பதிகளின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பரன் (பெரியவவா)
077 9819650

சாடியடி, ஏழாலை மத்தி.

(CS 20919/15/18)




**மேடம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது அவசியம். லாபம் சீராக இருக்கும்.

**இடபம்:** யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நண்பரின் வழிகாட்டுதல் நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பிறரிடம் சொல்ல வேண்டாம். மனைவியால் வளர்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தியளிக்கும்.

**சிங்கம்:** உங்கள் பேச்சு செயலில் முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராகஇருக்கும். பிராணிகளிடம் விலகுவது நல்லது. பெற்றோரின்

**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழிலில் உருவாகிற சிரமங்களை சரிசெய்வது அவசியம். லாபம் சுமார். உடல்நிலை அதிருப்தியளிக்கலாம்.

**துலாம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான அளவில் வளர்ச்சி பெறும்.

**விருச்சிகம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சிறப்பாக இருக்கும். அமோக ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழிலில் அதிக உழைப்பினால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சுயலாபத்திற்காக சிலர் உதவ முன்வரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** தாமதமாகிய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த மறைமுகப் போட்டி குறையும். அதிக பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்ததை விட ஆதாயம் கூடும்,

## சர்வாதிகார...

கொழும்பு, ஒக். 30

அரசமைப்புக்கு முரணாக, சர்வாதிகார ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியமை மற்றும் மகிந்த ராஜபக்சவை பதவியில் அமர்த்தியமை தொடர்பில் நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் சிறப்புரையாற்றியிருந்தார்.

இந்த நிலையில் அலரிமாளிகையில் நேற்று மாலை 5.30மணிக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். தலைமை அமைச்சர் என்ற பெயர்ப் பலகை பொருத்தப்பட்ட மேடையிலிருந்தே அவர் நாட்டு மக்களுக்கான உரையை நிகழ்த்தினார்;. இதன்போது அலரிமாளிகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பெருமளவானோர் திரண்டிருந்தனர்.

அங்கு அவர் தெரிவித்ததாவது, 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி அனைத்து அரசியல் கட்சிகளும், மறைந்த மாதுளுவாவே தேரர், முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க, சர்வமத தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் ஆகிய அனைத்துத் தரப்புக்களும் கூட்டிணைந்து மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக நியமித்து அரச தலைவராக்கினார்கள்.

அதற்குப் பின்னர் என்னைதலைமை அமைச்சராக நியமித்தார்கள். அரசை முன்னெடுத்துச் சென்றோம். 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவின் பிரகாரம் செப்ரெம்பர் முதலாம் திகதி தலைமைஅமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டேன். நாம் கூட்டு அரசையே முன்னெடுத்துச் சென்றோம். இந்த நாட்டு மக்களின் ஜனநாயகத்தினை உறுதிப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் பலவற்றை நிறுவினோம். தகவலறியும் சட்டம், கணக்காய்வுச் சட்டம் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நாட்டில் ஜனநாயகம், சுதந்திரம் என்பன போதுமான அளவு நிலைநாட்ட ப்பட்டது. பல்வேறு தரப்பினரினதும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்குநடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஊடக சுதந்திரத்தினை உறுதிப்படுத்தினோம். ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டது. பொருளாதாரத்தினை வேகமான முன்னெடுத்துச் செல்வதற்கான பெரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை அரச தலைவர் மைத்திரி மேற்கொண்ட உரையில் எனக்கும் அமைச்சரவைக்கும் உண்மைக்குப் புறம்பான விடயங்களை முன்வைத்து குற்றம்சுமத்தினார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நான் நிராகரிக்கின்றேன். 19 ஆவது சீர்திருத்தத்தினை நிறைவேற்றியதன் பின்னர் நாட்டில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட அரசதலைவர் முறைமையானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சரைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தில் அரசமைப்பின் 42(4) சரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை வெல்லக்கூடிய உறுப்பினரே நியமிக்கப்பட வேண்டும். மகிந்த ராஜபக்சவின் நியமனம் அரசமைப்புக்கு முரணானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, தன்னை படுகொலை செய்வதற்கான காரணங்கள் வெளியாகியமை போன்றவற்றின் காரணமாக தனக்கு இருந்த ஒரேயொரு மாற்றுவழி முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமிப்பதாகும் என்று கூறியுள்ளார்.

அரசமைப்பின் 42(4) சரத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை வெல்லக்கூடிய உறுப்பினரே நியமிக்கப்பட வேண்டும். பெரும்பான்மையில்லாத ஒருவரான மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தமை குறித்து நான் கவலையடைகின்றேன். மக்களை மறந்து தவறான செயலை மேற்கொண்டுள்ளமையை மூடிமறைப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால, சிறு பிள்ளைகளால் கூட நம்ப முடியாத கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை காணக்கூடியதாக இருக்கவில்லை. அரச ஊடகங்களின் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலம், ஊடக சுதந்திரத்தின் நிலைமையை நேரடியாகவே கண்டுகொள்ள முடியுமாக இருக்கின்றது. இது எதிர்காலத்தில் ஊடக சுதந்திரம் எவ்வாறு இருக்கும் என்பதற்கும் உதாரணமாக உள்ளது.

தற்போது எமது நாடு முகம்கொடுத்துள்ள நெருக்கடியான நிலமைக்கு நாடாளுமன்றத்திலேயே தீர்வுகள் உள்ளன. அதனால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறும் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். அவசரமாக நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையானது நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு முரணானது என்று சபாநாயர் கடிதம் மூலம் அரச தலைவருக்கு அறிவித்துள்ளார். தற்போது இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறே கோரிக்கை விடுத்துள்ளன. பன்னாடடுத் தரப்புக்களும் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து அரசமைப்புக்கு அமைவாக செயற்படுமாறே கோரிக்கை விடுத்துள்ளன. அதன்பிரகாரம் நாடாளுமன்றத்தினை உடன் கூட்டுமாறு மீண்டும் சபாநாயகரிடத்தில் கோரிக்கை விடுக்கின்றேன்.

தற்போது நாட்டில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் ஆரம்பித்து விட்டது. அரச இயந்திரம் முழுமையாக செயலிழந்து விட்டது. மிகக் கடினமான தருணங்களுக்கு முகம்கொடுத்து நிர்வகித்து வந்த பொருளாதார நிலமைகள் தற்போது தலைகீழாகின்றன. இவ்வாறன நிலமைகள் ஏற்படுவதானது எமது எதிகாலத்துக்குப் பாதிப்பாக அமையும். ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள எமது பங்காளிக்கட்சிகளும் நாடாளுமன்றத்தினை பிரதிநிதித்து வப்படுத்தும் ஏனைய கட்சிகளும் ஜனநாயகத்தினை நிலைநாட்ட வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கின்றன. அரசமைப்புக்கு முரணான, சர்வாதிகார ஆட்சியை எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதிக்க முடியாது. எம்முடன் பன்னாட்டுத் தரப்புக்களும் உள்ளன. குறுகிய நலன்களை மையப்படுத்திய அர்சியலுக்குள் சிக்காது எதிர்கலம் தொடர்பில் சிந்தித்து அனைவரும் செயற்பட வேண்டும். அதற்காக எம்முடன் அணிதிரள வேண்டும் என்றார். (5,31)

## தலையை...

மற்றும் மாமியாரையும் இதே போன்று கொட்டனால் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தி விட்டு குருதி சொட்டச் சொட்ட அவர்களை இழுத்துச் சென்று பற்றைக்குள் மறைத்து வைத்தார் எனக் குற்றஞ்சாட்டப்படும் மருமகனைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற இந்தப் பயங்கரத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கொலைப் பகுதியில் இருந்த சில வீடுகள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடத்தனை மாளிகைத்திடல் கிராமத்திலேயே சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பகுதியில் உள்ள பனை வடலிக் கூடலின் அருகில் மருமகனால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மாமனாரும் மாமியாரும் போர்வையால் சுற்றிக் கட்டப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை மீட்கப்பட்டனர். முன்னதாக குறித்த குடும்பத்தினரது மருமகன் அங்குள்ள வீடுகளில் புகுந்து அட்டகாசம் செய்துள்ளார். அந்தத் தகவலை குடும்பத்தி னருக்குத் தெரியப்படுத்த மக்கள் வந்தபோதே கணவன் மனைவி இருவரும் போர்வையால் சுற்றிக்கட்டப்பட்டு வீசப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விரைந்த பொலிஸார் இருவரையும் மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர்கள் மாற்றப்பட்டனர். ம.சித்திரவடிவேல் (வயது 56) அவரது மனைவியான சி.ஜெயந்தி (வயது 43) ஆகிய இருவருமே இவ்வாறு காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 700 மீற்றர் தூரத்தில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த குடும்பத் தலைவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். வீட்டு முற்றத்தில் அவரது மனைவி படு காயங்களுக்குள்ளாகி சுயநினைவின்றியநிலையில் மீட்கப்பட்டார். அவர்களது மகன் அதிகாலையில் படிப்பதற்கு எழுந்த போதே தாய் முற்றத்தில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்ததையும் தந்தை கொலையுண்டு கிடந்ததமையையும் கண்டுள்ளார். அயலவர்களின் துணையுடன் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பரஞ்சோதி ஜெயசிறி (வயது 66) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார். மனைவியான ஜெயசிறி நிர்மலாதேவி (வயது 56) படுகாயமங்களுடன் சுயநினைவின்றி மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ இடங்களில் இருந்து கோடரி, கத்தி ஒன்று மற்றும் குருதிக் கறை படிந்த போர்வை, குருதிக் கறை படிந்த கொட்டன் என்பன பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

"அதிகாலை படிப்பதற்காக எழுப்பி விடும் தந்தை நேற்று எழுப்பிவிடவில்லை. அதிகாலை 4 மணிக்கு நித்திரையில் இருந்து எழுந்த நான் வீட்டிற்கு வெளியில் சென்ற போது முற்றத்தில் முனகல் சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்தபோதே அம்மா என்பது தெரிந்தது. அதிர்அந்துபோன நான் கத்திக்கொண்டே அப்பாவைத் தேடி ஓடியபோது வீட்டின் விறாந்தையில் அவரும் குருதி வழிந்தோடிய நிலையில் பேச்சு மூச்சு அற்று காணப்பட்டார்" என்று கொலையுண்டவரின் மகன் தெரிவித்தார்.

(உ21,26)

## அந்தர்...

கொழும்பு, ஒக். 30

கொழும்பு அரசியல் களத்தில் 24 மணி நேரத்தில், ரணில் தரப்பிடமிருந்து மகிந்த அணிக்குச் சென்று மீண்டும் ரணில் தரப்புக்கு திரும்பி, மீண்டும் மகிந்த அணிக்குச் சென்றுள்ளனர் வசந்த சேனநாயக்கா மற்றும் வடிவேல் சுரேஸ் ஆகியோர்.

தலைமை அமைச்சராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்சவை, வடிவேல் சுரேஸ் நேற்றுமுன்தினம் காலை சந்தித்தார். அவர் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்ததாக நேற்றுச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் நேற்றுக் காலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்ததுடன், தனது ஆதரவு ரணிலுக்குத்தான் என்றும் மகிந்தவை சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்ததை அவருக்கான ஆதரவு என்று ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிட்டுள்ளதாகவும் அலரிமாளிகையில் வைத்து வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் நேற்றுமாலை அரசுடன் இணைந்து கொண்ட வடிவேல் சுரேஸ் பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சராக நியமிக்க ப்பட்டுள்ளார்.

இதேபோன்று வசந்த சேனநாயக்காவும், மகிந்த ஆதரவு தெரிவித்திருந்தார். வெளிநாட்டிலிருந்து நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பியிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்த நிலையில் நேற்று மாலை பதவியேற்ற புதிய அமைச்சரவையில் வனவளம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக அவர் நியமிக்க ப்பட்டுள்ளார்.

இதேபோன்று மகிந்த அணியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த 2007ஆம் ஆண்டு தாவிய விஜயதாச ராஜபக்ச மகிந்த அணியுடன் நேற்று மீண்டும் இணைந்து கொண்டார். நேற்றுப் பதவியேற்ற புதிய அமைச்சரவையில் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. (5)

## மைத்திரிக்கு...

கொழும்பு, ஒக். 30

ஜனநாயகத்தை விரும்புகின்ற அனைத்து மக்களும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டமை அரசமைப்புக்கும் நாட்டின் ஜனநாயத்துக்கும் முரணான செயற்பாடு என்று தொடர்ச்சியாக சுட்டி காட்டி வருகின்றோம். அதனை வலியுறுத்தும் வகையில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. ஜனநாயகத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்புக்களும் கலந்து கொள்ள வேண்டும்.

இன்று மதியம் 12.30 மணிக்கு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இந்தப் போராட்டம் நடைபெறும் - என்றார். (5)

## நாடாளுமன்றத்தை...

அதிகாரத்தைப் பயன்படுத்தி அதற்கு முன்பாகவே நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக ஆராய்வதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நகர்வுகளை அடுத்து கொழும்பு அரசியலில் மேலும் நெருக்கடி அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டுச் சமூகம் உள்ளிட்ட பல தரப்புக்களும் உடனடியாக நாடாளுமன்றத்தை சபாநாயகர் கூட்ட வேண்டும் என்றும் அவருக்கு அதற்குரிய அதிகாரங்கள் உள்ளன என்றும் கூறியுள்ளன. தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே வலியுறுத்தியிருந்தார். அதுபோன்று நாடாளுமன்றத்தைக் உடன் கூட்டுமாறு எதிர்க் கட்சித் தலைவரான இரா.சம்பந்தரும் சபாநாயகரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு அரசியலில் திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால், தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டு புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டார். தனது பதவி நீக்கம் அரசமைப்புக்கு முரணானது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். ஆனால் அரசமைப்பின் ஊடாகத் தனக்குக் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தியே ரணிலைத் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலக்கினார் என்று அரச தலைவரும் தெரிவித்து வருகிறார். இதனால் கொழும்பு அரசியலில் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

நாடாளுமன்றத்தைக் கூட்டிப் பெரும்பான்மையை நிரூபிக்க தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்திருந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நாடாளுமன்றத்தை முடக்கினார். அதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெருந்தொகைப் பணம் கொடுத்து வாங்குவதற்கான திரைமறைவுப் பேரங்கள் நடந்து வருகின்றன. இது மக்களாட்சித் தத்துவத்தையே பாதிக்கும் என்பதால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுவதே சரியானது என்று அரசியல் அவதானிகளும் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகச் சமூகம் நாடாளுமன்றத்தைக் கூட்டி, அரசமைப்புக்கு அமைவாகச் செயற்படுமாறு கூறியுள்ளன. இதன் அடுத்தகட்டமாக அமெரிக்கா மற்றும் ஐ.நா. பிரதிநிதிகள், சபாநாயகரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

126 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடன், சபாநாயகர் கருவுக்கு நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணியிலேயே நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகர் கரு ஜயசூரியா, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை காலை 11 மணிக்கு கூட்டியுள்ளார். இதன்போது, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டும் முடிவை அவர் எடுக்கக்கூடும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சபாநாயகர் அப்படியொரு முடிவை எடுத்தால், அரச தலைவரின் நாடாளுமன்ற முடக்க உத்தரவை மீறியதாகவே அமையும். சபநாயகரின் முடிவுக்கு அமைவாக, அரச தலைவர் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு அனுமதிப்பாரா? அல்லது தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனைச் செயற்படுத்தவிடாமல் தடுப்பாரா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. சிலவேளைகளில் இந்த அதிகார மோதலைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தும் நிலைக்கும் கொண்டுபோய்விடும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கொழும்பு அரசியல் நெருக்கடி இதனால் மேலும் அதிகரித்துள்ளது. (உ-5)

## இலங்கை...

கொழும்பு, ஒக். 30

இலங்கை நிலவரங்கள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ், அரசமைப்பு விதிகளை பின்பற்றுமாறு அரசைக் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக, ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர், ஸ்டீபன் டுஜாரிக் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் பிந்திய நிலவரங்களை, ஐ.நா. பொதுச்செயலர் பெரிய கரிசனையுடன் கவனித்து வருகிறார். ஜனநாயக பெறுமானங்களை மதிக்குமாறும், அரசமைப்பு விதிகளையும், செயல்முறைகளையும் பின்பற்றுமாறும், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தி, அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அரசை அவர் கோருகிறார்.

அனைத்துத் தரப்பினரும், கட்டுப்பாட்டுடனும், நெருக்கடியான நிலைக்கு அமைதியான முறையில் தீர்வு காணுமாறும் அவர் கோருகிறார், என்று அதில் தெரிவித்துள்ளார். (5)

## மாகாணசபைத்...

கொழும்பு, ஒக். 30

புதிய அரசின் கீழ் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக வெகுவிரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவிருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம, சந்தகிரிகொட வயல்வெளியில் இடம்பெற்ற தேசிய ஏர்பூட்டு விழாவில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசியல் தலைமைத்துவமும் வழிகாட்டலுமின்றி இன்று ஆறு மாகாண சபைகளின் உத்தியோகத்தர்கள் சிரமத்துக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர். சுற்றறிக்கைகள் காரணமாக அதிகாரிகளின் சேவைகள் வரையறுக்கப்படுகின்றமையினால் சிறந்த மக்கள் நேய சேவைகளை வழங்குவதற்கு அரசியல் தலைமைத்துவம் அவசியமாகும்.

வெகுவிரைவில் மாகாண சபை தேர்தலை நடத்துதல் தொடர்பாக இன்றோ அல்லது நாளையோ தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடவுள்ளேன் என்றார்.

மாகாணசபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்சிகளும் இணங்கியிருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலை இழுத்தடிக்கும் நோக்குடன் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## வடக்கு...

கொழும்பு, ஒக். 30

கடந்த மூன்றரை ஆண்டுகளாக பொறுப்பு வகித்தவர்களால் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முடியாமல் போய்விட்டதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய ஏர்பூட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்காயினும் தெற்காயினும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் வாழும் மக்களின் பிரச்சினைகளுக்குத் துரித தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு கடந்த மூன்றரை வருட காலமாக பொறுப்பு வகித்தவர்களுக்கு இயலாது போயுள்ளது. வடக்கு மக்களுக்காக நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டம் அமைச்சரவைக் கலந்துரையாடலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கை சுமையினை குறைத்து, நாட்டில் பொருளாதார சுபீட்சத்தைக் கட்டியெழுப்பி, சிறந்த ஒழுக்கப் பண்புடைய அரச நிர்வாகத்தை பலப்படுத்தும் அதேவேளை, தேசியத்துக்கு மதிப்பளித்து முன்னோக்கிச் செல்ல சகலரும் ஒன்றிணைய வேண்டும். அதன்பொருட்டு புதிய அரசுடன் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் நட்புடனும் இணைந்துகொள்ளுமாறு சகல அரசியல்வாதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும், சர்வ மதத் தலைவர்களுக்கும், ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்கள், சமல் ராஜபக்ச, மகிந்த அமரவீர, சான் விஜயலால் டி சில்வா, அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் பெருந்தொகையான பிரதேச விவசாயிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். (5)

## சம்பந்தன்...

கொழும்பு, ஒக். 30

தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்சவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் இன்று நேரடிச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. கூட்டமைப்பின் அவசர கூட்டத்துக்கு முன்னதாக இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சராகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ச கடந்த சனிக்கிழமை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருந்தார். கூட்டமைப்பின் இரண்டு நிபந்தனைகளையும் குறிப்பிட்ட சம்பந்தன், இது தொடர்பில் நேரில் சந்தித்துப் பேசுவதற்கும் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்சவுக்கும், இரா.சம்பந்தனுக்கும் இடையில் இன்று காலை சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பில் பேசப்படும் என்றும் தெரியவருகின்றது. (5)

## அமித்...

கொழும்பு, ஒக். 30

கண்டி வன்முறை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஹாசோன் பலகாய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்க பிணையில் நேற்று விடுவிக்கப்பட் டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நேற்றுக் கடமையேற்றார். அமித் வீரசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கண்டி வன்முறை விவகாரம் தொடர்பான விசாரணை தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது, அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். கடந்த 7 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் நேற்றைய தினம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கண்டி திகன வன்முறைச் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரியாக அமித் வீரசிங்க அடையாளப்படுத்தப்பட்டு அவருடன் சேர்த்து 18 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## நாடாளுமன்றத்தை உடன்...

கொழும்பு, ஒக். 30

இலங்கை நிலவரங்கள் குறித்து கரிசனையுடன் கவனித்து வருவதாக தெரிவித்துள்ள அமெரிக்கா, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் அழுத்தம் கொடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், ஹீதர் நுவேட் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலவரங்களை அமெரிக்கா தொடர்ந்தும் கரிசனையுடன் கவனித்து வருகிறது. நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் சபாநாயகருக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்.

யார் அரசுக்கு தலைமையேற்பது என்பதை உறுதி செய்யும் பொறுப்புக்களை நிறைவேற்ற, மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை, அனுமதிக்க வேண்டும், என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (5)

## இலங்கை அரசியல்...

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் அண்மைய நிகழ்வுகளை யிட்டு கனடா மிகவும் கவலையடைந்துள்ளது. நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இவ்வாறு கனடியத் தூதுவர் டேவிட் மக்கினன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் அண்மைய நிகழ்வுகளையிட்டு கனடா மிகவும் கவலையடைந்துள்ளது, நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிப்பது, அனைத்து தரப்புகளும், அரசமைப்பை பின்பற்றுமாறும், வன்முறைகளில் இருந்து விலகியிருக்குமாறும் நாங்கள் கோருகிறோம்.

பொறுப்புக்கூறல், நிலைமாறுகால நீதி, தண்டனையில் இருந்து தப்பித்தலை முடிவுக்குக் கொண்டு வருதல், குறித்து தனது சொந்த மக்களுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (5)

## மகிந்தவின்...

கொழும்பு, ஒக். 30

அண்மையில் கலைக்கப்பட்ட அமைச்சரவையில் பெற்றோலிய வளங்கள் அமைச்சராகப் பணியாற்றிய அர்ஜுன ரணதுங்க நேற்று மாலை கைது செய்யப்பட்டார். சில மணி நேரங்களில் 5 லட்சம் ரூபா ஆள் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

தெமட்டகொட பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார். இருவர் காயமடைந்தனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்றிருந்த அர்ஜுன ரணதுங்கவை மகிந்த ராஜபக்ச ஆதரவு தொழிற்சங்கத்தினர் முற்றுகையிட்டு தாக்க முற்பட்டனர். அப்போது, அவரது பாதுகாவலர்கள் சுட்டதில் உயிரிழப்பு நிகழ்ந்தது.

இந்த நிலையில், அர்ஜுன ரணதுங்கவை கைது செய்யக் கோரி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சில தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தன. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் நெருக்கடி ஏற்பட்டது.

அதேவேளை, நேற்று முற்பகல் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற மகிந்த ராஜபக்ச, தெமட்டகொட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எந்தப் பதவியில் இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்தே, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அர்ஜுன ரணதுங்கவை கைது செய்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்டார் என்ற குற்றச்சாட்டு ரணதுங்க மீது சுமத்தப்பட்டது. ரணதுங்க கைதானதைத் தொடர்ந்து பெற்றோலிய தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளன.

இதேவேளை அர்ஜுனவின் மெய்ப்பாதுகாவலரை அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## மகிந்த...

கொழும்பு, ஓக். 30

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 22 ஆவது தலைமை அமைச்சராக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்று மதியம் 12 மணிக்கு உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். கொழும்பில் அமைந்துள்ள தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்கள் இந்தப் பங்கேற்ற போதும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதில் கலந்து கொள்ளவில்லை.

மகிந்தராஜபக்சவின் ஆதரவாளர்கள் தலைமை அமைச்சர் செயலகத்தில் நேற்றுக் குவிந்திருந்தனர். மகிந்த ராஜபக்ச கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு வந்தபோது, தேசியக் கொடிகளைக் காண்பித்து பெரும் சத்தமிட்டனர். (5)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மட அணி இன்று மோதவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-23)

# ஏஞ்சல், யாழ். மத்தி இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையால் நடத்தப்படும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இன்று மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத்திடலில் மாலை 4.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)







## தேசியமட்ட தட்டெறிதலில் வடக்குக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 30

மாத்தறையில் நடைபெற்ற 30ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் பெண்கள் பிரிவு தட்டெறிதலில் வடக்கு மாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இந்தப் போட்டியில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுஜிவா 28.64 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 9.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணி மோதவுள்ளது. (ம-23)



## ஆஸ்திரேலியாவை வழித்துத்துடைத்த பாகிஸ்தான் அணி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி20 தொடரில் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று 3:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது பாகிஸ்தான் அணி.

முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை பாகிஸ்தான் அணி ஏற்கனவே உறுதிப்படுத்தியிருந்த நிலையில் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைக் குவித்தது. அசாம் அதிகபட்சமாக 50 ஓட்டங்களையும், பர்கான் 39 ஓட்டங்களையும், ஹபீஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மிச்செல் மார்ஸ் 2 இலக்குகளை அதிகபட்சமாகக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 117 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை வழித்துத் துடைத்தது பாகிஸ்தான் அணி. (ம)

## கொக்குவில் இந்து அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் பிபிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

தேஸ்ரன் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோசப் அணி மோதியது. 56:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# றோயல் பாடும்மீன் இறுதியில் மோதல்






யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் ரி.பி.பத்மநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இன்றைய நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## மீசாலை வீரசிங்கம் மத்திக்கு தங்கம்

யாழ். ஒக். 30
இலங்கைப் பாடசாலைகள் பளு தூக்கல் சம்மேளனம் நடத்திய தேசியமட்ட பளுதூக்கலில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சு.திவானுஜன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட பளு தூக்கல் தொடர் கேகாலை டிப்பிட்டிய இராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான பளுதூக்கலில் 94 கிலோவுக்கு மேற்பட்ட எடைப் பிரிவில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சு.திவானுஜன் 107 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
குறித்த பாடசாலைக்கு தேசிய மட்ட பளுதூக்கலில் கிடைத்த முதலாவது பதக்கம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)




## ஸ்வெட்டலினா சம்பியனானார்




உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் பெண்கள் பிரிவில் உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்வெட்டலினா கிண்ணம் வென்றார்.
பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளைத் தெரிவுசெய்து ஆண்டின் இறுதியில் தொடரொன்று நடத்தப்படும் இந்தத் தொடர் உலக சம்பியன்ஷிப் என்று அழைக்கப்படுகிறது.
சிங்கப்பூரில் நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஸ்வெட்டலினாவை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ் மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஸ்ரீபன்ஸ். எனினும் அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஸ்வெட்டலினா அந்த செற்களை முறையே 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றார். (ம)


## றொனால்டோ அதிரடி யுவென்டாஸ் வெற்றி

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றொனால்டோவின் அதிரடி ஆட்டத்தால் யுவென்டாஸ் வெற்றிபெற்றது.
யுவென்டாஸ் அணியை எதிர்த்து எம்போலி மோதியது. ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் எம்போலியின் கோலைப் பதிவுசெய்தார் பிரான்சிஸ்கோ. 54ஆவது நிமிடத்தில் யுவென்டாஸின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் றொனால்டோ. 1:1 என்ற நிலையில் ஆட்டம் நகர்ந்து சென்றது. 70ஆவது நிமிடத்தில் றொனால்டோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யுவென்டாஸ். (ம)




## ரியல் மட்ரிட்டை நொறுக்கியது பார்சிலோனர் அணி

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட்டை மிகமிக இலகுவாக வென்றது பார்சிலோனா அணி.
பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி இந்த ஆட்டத்தில் விளையாடியிருக்கவில்லை. இதனால் ரியல்மட்ரிட் அணி இந்த ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் என்ற கருத்துக்கணிப்பு வலுவாக இருந்தது. எனினும் ஆட்டத்தின் ஆரம்பம் முதல் துல்லியமான பந்துப்பரிமாற்றங்களால் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது பார்சிலோனா அணி.
11ஆவது நிமிடத்தில் கவுட்டினோ பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.




30ஆவது நிமிடத்தில் சுவாரஸ் கோலொன்றைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வலுவான ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா அணி.
இரண்டாம் பாதி ஆரம்பித்து சில நிமிடங்களில், அதாவது 50ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் மார்செலோ.
அதன் பின்னர் பார்சிலோனா பேரெழுச்சி கண்டது. 75ஆவது, 83ஆவது நிமிடங்களில் சுவாரஸ் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்து ஹற்றிக் கண்டார். விடால் 87 ஆவது நிமிடத்தில் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 5:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அபாரமான வெற்றிபெற்றது. (ம)

# இந்திய - அணி இமாலய வெற்றி!


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் 224 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி. கிண்ணத்தைக் கைப்பற்றுவதையும் அது உறுதி செய்தது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் ரோகித். இந்தத் தொடரில் ஏனைய மூன்று ஆட்டங்களையும் பார்க்கையில் நேற்று சிறந்த ஆரம்பம் கொடுத்தது ஆரம்ப இணை. 8 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் எதையும் இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். தொடர்ந்து மூன்று சதங்களைப் பதிவுசெய்த அணித் தலைவர் கோக்லி நேற்று 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் ரோகித், ராயிடு இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினார்கள். சதம் கடந்தார் ரோகித். ராயிடு அதிரடியாக விளையாடி அரைச் சதம் கடந்தார். 131 பந்துகளில் 150 ஓட்டங்களை எட்டினார் ரோகித் சர்மா. அவர் 162 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ராயிடு 100 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார். முடிவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 377 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் றோச் 2 இலக்குகளையும், நேர்ஸ், பவல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓட்டங்களில் ஆரம்ப வீரர் பவலை இழந்தது. ஹோப் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ரண்அவுட் செய்யப்பட்டார். கேம்ராஜ் 14 ஓட்டங்களுடன் புவனேஸ்வர் குமாரின் பந்துவீச்சிலும், சாமுவேல்ஸ் 18 ஓட்டங்களுடன் கலீல் அஹமட் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர். தீவுகளின் நம்பிக்கை நட்சத்திரம் ஹெட்மயரால் முடிந்தது 13 ஓட்டங்கள் மட்டுமே. மத்திய வீரரான றோவ்மன் பவலை ஓர் ஓட்டத்துடன் போல்ட் செய்தார் கலீல் அகமட். மத்திய வரிசையில் கோல்டர் நிலைத்து நின்றார். எனினும் மறுமுனையில் இலக்குகள் மளமளவெனச் சரிந்தன. முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 153 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 224 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரின் நான்கு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இந்திய அணி 2:1 என்று தற்போது முன்னிலையில் (ஓர் ஆட்டம் சமநிலையானது) உள்ளது. அடுத்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை இழக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்படாது. (ம)






வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள தனியார் பார்சல் சேவை நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

உணவு, தங்குமிடம் இலவசம்.

தொடர்பு - 077 386 6250

(C 8203/15/18)


## சங்காவின் சாதனை தப்பியது!

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஒரு நாள் ஆட்டங்களில் தொடர்ச்சியாக நான்கு சதங்களைப் பதிவுசெய்தவர் என்ற சங்காவின் சாதனையை இந்திய அணியின் தலைவர் கோக்லி முறியடிப்பாரா என்ற எதிர்பார்ப்பு நேற்று இருந்தது. ஆனால் கோக்லி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததை அடுத்து சங்காவின் சாதனை தப்பியது.

மேற்கிந்தியத் தீவுகள் - இந்தியா அணி களுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதல் மூன்று ஆட்டங்களிலும் கோக்லி சதம் கடந்தார். நான்காவது ஆட்டமான நேற்றும் அவர் சதம் கடந்தால் சங்காவின் சாதனையை முறியடிப்பார் என்பதால் கோக்லியின் இன்னிங்ஸில் நேற்றுப் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. எனினும் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சங்காவின் சாதனையைத் தவறவிட்டார் கோக்லி. (ம)


EASY WAY English

ரூபா 800 விலைக்கழிவுடன்

முழுமையாக தமிழ்மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஒரேயொரு புத்தகப்பொதி

அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்க திரு. தொம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட 16 புத்தகங்கள் கொண்ட பாடப்புத்தகப்பொதி!

ஒவ்வொருவர் வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய ஆங்கில பொக்கிஷம்

ஆங்கில ஆசிரியரின் உதவியேதுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் ... புரிவோர்வரை எவருமே சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு Study pack.

01.11.2018 வரை மட்டுமே இவ்விலைக்கழிவுடன் பெறமுடியும்!

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி யாழ்நகர் 021 320 3313 077 1570 486

அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்

இன்னும் 3 நாட்களே உள்ளன!

கடைசி நேரத்தில் மிக நம்பிக்கையுடன் வவுனியாவில் இருந்து வந்து மிக நீண்ட வரிசையில் காத்திருந்து பதிவு செய்தேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எனது அமெரிக்க விசாவிற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

சுபராம்

V2 TRAVELS 0768226243

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

இன்னும் 7 நாள்கள் மட்டுமே உள்ளன. 2020 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில நாள்கள் மட்டுமே உள்ளன. உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd 321, K.K.S. Road, Jaffna.

(முட்டாஸ் கடை சந்திக்கு அருகில்) தொ.பே. இல: 077 755 4528

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.


V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 03.11.18 சனி 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 0762 669 614 ஆரம்பம் :05.11.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1

Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## வலைப்பயிற்சிகளை புறக்கணித்த டோனி

### விரைவில் ஓய்வு பெறுவதற்கும் வாய்ப்பு?

இந்திய அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய வீரருமான டோனி, இன்னும் ஓரிரு வாரங்களில் அல்லது சில நாள்களில் பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வுபெறும் முடிவை எடுக்க வாய்ப்புள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர்களுக்கான இந்திய அணியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டார் டோனி. இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான வலைப் பயிற்சியின் போது டோனி பெரியளவில் பயிற்சியில் ஆர்வம் காட்டவில்லை என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இதையடுத்தே அவர் ஓய்வை நோக்கிப் பயணிக்கிறார் என்று அவை குறிப்பிட்டன. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.